பக்கங்கள்: இருபத்து நான்கு

Registered as a Newspaper

27 FEB 1999

# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை: 6 வள்ளுவர் ஆண்டு 2030 மாசி 15 சனிக்கிழமை (27-02-1999) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்: 40

## செம்மணிப் புதைகுழி விடயம்

# விசாரணைகளை நேரில் அவதானிக்க சர்வதேச மனித உரிமைக் குழுக்கள்

# அரசிடம் விருப்பம் தெரிவிப்பு

கொழும்பு,பெப்ரவரி 27

செம்மணி புதைகுழி தொடர்பான புலனாய்வு மற்றும் நீதிமன்ற விசாரணைகளை அவதானிப்பதற்கு உள்ளூர் மற்றும் சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள் பல விருப்பம் தெரிவித்திருப்பதாக சட்டமா அதிபர் திணைக்களம் நேற்று அறிவித்தது.

இத்தகைய அவதானிப்பாளர்கள் மற்றும் செம்மணி புதைகுழி தொடர்பான விசாரணையாளர்கள் குழாம் ஒன்று எதிர்வரும் ஐந்தாம் திகதி யாழ். வர விருப்பதாகவும் சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்தது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 3 லட்சம் தேங்காய்கள் கப்பலில் யாழ். வரும்

யாழ்ப்பாணம்,பெப்.27

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள தேங்காய்த் தட்டுப்பாட்டை அடுத்து மூன்று லட்சம் தேங்காய்கள் கொழும்பிலிருந்துகப்பல் மூலம எடுத்து வரப்படவுள்ளன.

கொழும்புத் துறைமுகத்தில் தற்சமயம் பொருள்களை ஏற்றிக்கொண்டிருக்கும் 'ஹண்டி' கப்பல் மூலம் இரண்டு லட்சம் தேங்காய்களை தனியார் வர்த்தகர்கள் எடுத்துவரவுள்ளனர்.

'மாஹோ' கப்பல் மூலம் ஒரு லட்சம் தேங்காய்களை கூட்டுறவுச் சங்கங்களுக்காக யாழ் செயலகம் எடுத்துவரவுள்ளது. இந்தத் தேங்காய்கள் பெரும்பாலும் அடுத்த வாரத்தில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் பெருமளவில் தேங்காய் பால்மாப் பைக்கற்றுக்களும் கப்பலில் எடுத்துவரப்படவுள்ளன. (ஐ-3-5)

## சோமரத்தினவைக் கூட்டிவராமலே புதைகுழியைத் தோண்ட முயற்சி?

கொழும்பு,பெப்.27

செம்மணியில் பெரும் மனிதப் புதைகுழி இருப்பதாக முதலில் தகவல் வெளியிட்ட முன்னாள் இராணுவ சார்ஜண்ட் சோமரத்தின ராஜபக்ஷவை யாழ்.கூட்டிவந்து அவரைக் கொண்டு சடலங்கள் புதைக்கப்பட்ட இடத்தைக் காட்டும் முயற்சியை அரசுத் தரப்புக் கைவிட்டு விட்டதா?

சோமரத்தினவைக் கூட்டி வராமலேயே புதைகுழியைத் தோண்ட அரசுத் தரப்பு திட்டமிடுகிறதா?

- இத்தகைய சந்தேகங்களை சட்டமா அதிபர் திணைக்களம் நேற்று விடுத்த பத்திரிகை அறிக்கை கிளப்பியிருப்பதாக கொழும்பில் சட்டத் துறை வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

(7ஆம் பக்கம் பார்க்க)

## 'லயன் ஏயர்' நிறுவனம் அரசு மீது வழக்கு!

கொழும்பு,பெப்.27

கொழும்புக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தனியார் விமான சேவை நடத்துவதை பாதுகாப்புக் காரணங்களுக்காக இடைநிறுத்திய அரசின் உத்தரவுக்கு எதிராக கொழும்பு உயர்நீதிமன்றத்தில் நேற்று 'லயன் ஏயர்' நிறுவனம் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் 'லயன் ஏயர்' மற்றும் 'மொனறா ஏயர்' ஆகிய நிறுவனங்கள் விமான சேவைகளை நடத்தியதும்-

'லயன் ஏயர்' நிறுவனத்தின் விமானம் ஒன்று இரணைதீவுப் பகுதியில் கடலில் வீழ்ந்து விபத்துக் குள்ளானதை அடுத்து விமானசேவைகளை நடத்த இந்த நிறுவனங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதும்-

தெரிந்தவையே.

விமான சேவையை நிறுத்திய உத்தரவு அடிப்படை மனித உரிமையை மீறும் செயல் என்று 'லயன் எயர்' நிறுவனம் அதன் மனுவில் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சுச செயலாளர் சந்திரானந்த டி.சில்வா அந்த மனுவில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். (ஐ-3-21)

## ஒபடகேயிடம் வர்த்தகர்கள் மகஜர்

கொழும்பு,பெப்.27

யாழ்.குடாநாட்டுக்கு கப்பல் மூலம் பொருள்களை எடுத்துச் செல்வதில் வார்த்தகர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் தொடர்பாக தாம் விரைவில் ஜனாதிபதியுடன் பேசவிருப்பதாக வட மாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபைத் தலைவர் என்.கே. ஒபடகே நேற்றுத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு கப்பல் மூலம் பொருள் அனுப்பும் வர்த்தகர் சங்கத்தின் பிரதிநிதிகளிடமே அவர் இப்படிக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கண்டியில் நேற்று மின்மாற்றி தகர்ப்பு!

கொழும்பு,பெப்.27

கண்டி கட்டுகஸ்தோட்டையில் அலகாகொட வீதியில் அமைந்திருந்த மின்மாற்றி நேற்று அதிகாலை 5.45 மணியளவில் இனம்தெரியாதோரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

மின்மாற்றியின் எரிபொருள் தாங்கியில் வைக்கப்பட்டிருந்த 100கிராம் நிறையுடைய அதிசக்தி வாய்ந்த குண்டே வெடித்ததாகவும்-

இந்தக் குண்டுவெடிப்பால் மின் மாற்றிக்குப் பாரிய சேதம் ஏற்படாத போதிலும் அதனை மீண்டும் பயன் படுத்த முடியாது என்றும் -

புதிய மின் மாற்றியையே அங்கு பொருத்த வேண்டியுள்ளது என்றும் - தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குண்டுவெடிப்புக் காரணமாக ஐந்து லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. கட்டுகஸ்தோட்டைப் பகுதி இருளில் மூழ்கியுள்ளது.

கட்டுகஸ்தோட்டைப் பகுதியில் இடம்பெற்ற முதலாவது மின்மாற்றித் தகர்ப்புச் சம்பவம் இதுவாகும். இச் சம்பவம் தொடர்பாக பொலீஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-க-3)

## தேர்தல் மோசடியில் ஈடுபட்ட

# எம்.பியைக் கைது செய்யுமாறு ஜனாதிபதி நேற்று உத்தரவு!

கொழும்பு,பெப்.27

நடைபெற்று முடிந்த வடமேல் மாகாண சபைக்கான தேர்தலில் வன்முறைகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் தமது அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரையும், அவரது மகனையும் உடனடியாகக் கைது செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க பொலிஸ்மா அதிபருக்கு நேற்று உத்தரவிட்டார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முனிதாஸ நந்தசேன மற்றும் அவரது மகன் ஆகியோரையே கைது செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

வடமேல் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட எதிர்க்கட்சியினரின் தேர்தல் பிரசாரங்களைத் தடுத்து காடைத்தனமான செயல்களில் ஈடுபட்டார்கள் என மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர் மீதும், அவரது மகன் மீதும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதேவேளை -

மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சிலருடன் சேர்ந்து பேலியகொடையில் உள்ள தமது தேர்தல் பிரசார அலுவலகத்தை தாக்கினார்கள் என ஜே.வி.பி.யின் செயலாளர் செல்வின் சில்வா ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவிற்கு நேற்றுக் காலை அறிவித்திருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

முனிதாஸ நந்தசேனவின் மகன் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி இடம் பெறவிருக்கும் மேல்மாகாண சபைக்கான தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிடுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-7)

## ஒரு தமிழரே தெரிவு

யாழ்ப்பாணம்,பெப்.27

இலங்கை கணக்காளர்சேவைக்கு ஆள்சேர்ப்பதற்காக கடந்த வருடம் ஜூன் மாதம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகள் கடந்த வாரம் வெளியிடப்பட்டன.

போட்டிப் பரீட்சை முடிவுகளின்படி 15 பேர் மேற்படி சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 14 பேர் சிங்களவர்கள். ஒருவரே தமிழர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இலங்கை கணக்காளர் சேவைக்கு 27 தமிழர்களுக்குரிய வெற்றிடங்கள் இருந்தபோதும் மேற்படி பெறுபேறுகளின்படி தமிழர் ஒருவரே தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-7)

# யுத்தத்தை நிறுத்தி புலிகளுடன் பேசுக!

## கொழும்புப் பேரணியில் அரசுக்கு வேண்டுகோள்

கொழும்பு,பெப்.27

யுத்தத்தை நிறுத்தி நாட்டில் சமாதானத்தை கொண்டுவர விடுதலைப் புலிகள் அமைப்புடன் அரசாங்கம் உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

சர்வமதக் குருமார்கள் இவ்வாறு அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சமாதானத்தை வலியுறுத்தி நேற்று கொழும்பில் நடத்தப்பட்ட சமாதானப் பேரணியை அடுத்து கொழும்பு ஹைட் பார்க் சதுக்கத்தில் இடம்பெற்ற

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 'தீகவாபி' காணி சுவீகரிப்பு:

# சிங்களவர், முஸ்லீம்கள் கிழக்கில் ஆர்ப்பாட்டம்!

அம்பாறை,பெப்.27

'தீகவாபி' புனித பூமிக்குரிய காணிகள் அபகரிக்கப்படுவதை எதிர்த்தும் ஆதரித்தும் அம்பாறை, சம்மாந்துறை பகுதிகளில் நேற்று ஆர்ப்பாட்ட பேரணிகள் நடத்தப்பட்டன.

பௌத்தர்களுக்குரிய காணியை முஸ்லீம்கள் அபகரிக்கின்றார்கள் எனக் கூறி பௌத்த பிக்குகள் அம்பாறையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

முஸ்லீம்களுக்குரிய காணியையே தாம் மீண்டும் பெற்றுக் கொள்கின்றோம் எனக்கூறி முஸ்லீம்கள் சம்மாந்துறையில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சம்மாந்துறையில் நடத்தப்பட்ட பேரணியை தேசிய முஸ்லீம் பேரவை ஒழுங்கு செய்திருந்தது. (ஐ-7-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரந்தன் ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், பெப். 27

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர் சம்பளம் நேற்றுத் தொடக்கம் வழங்கப்படுகிறது. மார்ச் 2 ஆம் திகதி வரை வழமையான இடத்தில் அதைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5)

## யோகர் சுவாமி ஆயிலிய பூசை

கொழும்புத்துறை, பெப். 27

கொழும்புத்துறை யோகர் சுவாமியின் ஆயிலிய நட்சத்திர தினபூசை சுவாமிசமாதிக் கோயிலில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்வில் சுவாமிகளின் நற்சிந்தனை, பஜனை, கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்கள் என்பனவும் இடம் பெறும்.

(ஐ-30)

## கல்வி நிர்வாக சேவைக்குத் தெரிவானோருக்கு

யாழ்ப்பாணம், பெப். 27

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தெரிவான யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அனைவரையும் தமது விவரங்களை உடனடியாக வலயக் கல்விப் பணிமனையில் பதிவு செய்யுமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ச. நா. தணிகாசலம்பிள்ளை கேட்டுள்ளார்.

(ஐ)

## கருத்தரங்கு

வடமராட்சி, பெப். 27

ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான 'மாணவர்களின் உயர்வுக்கு கீதை காட்டும் பாதை' என்னும் கருத்தரங்கு ஒன்று எதிர் வரும் 3 ஆம் திகதி புதன் கிழமை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் அதிபர் திருமதி ரஞ்சிதம் குட்டித்தம்பி தலைமையில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் சுவாமி சித்ரூபானந்தா உரையாற்றுவார்.

(ஐ-173)

## நாளை

சுன்னாகம், பெப். 27

கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வறுத்தலைவிளான் அந்தியகால சகாய நிதிச் சங்கத்தின் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயத்தில் நடைபெறும்.

(ஐ-27)

## சாரணர் அணித் தலைவர்களுக்குப் பயிற்சி நெறி

குருநகர், பெப். 27

யாழ். மாவட்டச் சாரணர் அணித் தலைவர்களுக்கான பயிற்சி இன்று சனிக்கிழமை தொடக்கம் திங்கட்கிழமை வரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற உள்ளது.

யாழ். மாவட்டச் சாரணர் அபிவிருத்தி ஆண்டாக இவ்வாண்டு பிரகடனம் செய்யப்பட்டு புதிய குழுக்களை உருவாக்கவும், சாரணர் குழுக்கள் அனைத்தையும் திறம்பட இயக்க சாரணத் தலைவர்கள், அணித் தலைவர்கள் ஆகியோருக்கு புதிய பாடத்திட்டத்திற்கமைய பயிற்சி வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதாக யாழ். மாவட்ட சாரணர் ஆணையாளர் டோ. வி. மு. இராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

(ஐ-51)

## சீட்டிழுப்பு முடிவுகள்

கஸ்தூரியார் வீதி புனித ஆரோக்கிய அன்னை ஆலய நிதிக்காக 25 – 02 – 99 இல் இடம் பெற்ற அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பில் பரிசு பெற்ற எண்கள்

முதலாம் பரிசு — 3649
இரண்டாம் பரிசு — 3056
மூன்றாம் பரிசு — 3200

ஆறுதல் பரிசுகள்:
7854, 293, 380, 5174, 5721
5029, 4843, 9621, 5011, 2577

(63474) ஆலய சபை

## அறிவித்தல்

யா/கைதடி குருசாமி வித்தியாலய

விளையாட்டு மைதானக் கொள்வனவு நிதிக்காக 28-2-99 இல் நடைபெறவிருந்த 'சூப்பர் சோங்ஸ்' இசைக் குழுவினரின் 'அமுத கானங்கள்' நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால்

7-3-99 ஞாயிற்றுக்கிழமை

மு. ப. 9.00 மணி முதல் 12·00 மணி வரையும், பிற்பகல் 1.00 மணி முதல் 4.00 மணிவரையும் நடைபெறும்.

அன்பளிப்பு = 100/- 50/- 20/-

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்

யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்,
கைதடி.

(சி/6637)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

எமது கல்லூரி ஆசிரியை
செல்வி சி. பத்மராணி
அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்
**சின்னத்தம்பி இலட்சுமணர்**

அவர்களின் இன்று நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையில் நாமும் கலந்து பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.

யாழ்ற்றன் கல்லூரி,
காரைநகர்.

(63467)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திரு. சரவணபவன்
அவர்களின் அன்புத் தந்தையார்

**கணபதிப்பிள்ளை நிற்சிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்.

(63470)

மாதாந்த
பயிற்சிப் பரீட்சை - 1
(ஜனவரி)

01-03-99 திங்கட்கிழமை
காலை நடைபெறும்.
ஆண்டு 2 முதல்
ஆண்டு 8 வரை.

BOND

யாழ். நகர்.
(63469)

நாகம்ஸ்
சுன்னாகம்.
கார்த்திக் - ரம்பா
கவுண்டமணி
நடித்த
உள்ளத்தை
அள்ளித்தா
ரசிகர்களின் பஸ் போக்குவரத்து வசதி கருதி
காட்சி நேரங்களில்மாற்றம்
புதிய நேரப்படி
11-00, 2-30
(63456)

ராஜா
யாழ்ப்பாணம்.
கடைசி வாரமாக
அஜித் - தேவயானி
ஹீரா - மணிவண்ணன்
கரன் நடித்த
காதல் கோட்டை
இன்று காட்சிகள்
10-30, 2-00, 5-00
05–03–99 முதல்
உதவிக்கு
வரலாமா
(சி/6565)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி
சிவாஜி, ஸ்ரீதேவி,
மாலினிபொன்சேகா,
விஜயகுமார்
நடித்த
பைலட் பிறேம்நாத்
(அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க)
[illegible]
T. P. No. 070-212223
(63315)

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும் தெய்வராணி, புஸ்பராணி, விமலானந்தராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் நவரத்தினம், குமாரகுலசிங்கம், மங்களேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரபாகரன், சுகிகரன், மீரா, சுரேகா, கோமதி, பிரசன்னா, அமிர்ராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27-2-99) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்

பாடசாலை வீதி,
தாவடி,
கொக்குவில்.

(63468)

## திருமதி படைவீரசிங்கம் பொன்னம்மா

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி படைவீரசிங்கம் பொன்னம்மா அவர்கள் 26-2-99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற படைவீரசிங்கத்தின் அன்பு மனைவியும் கனகசிங்கம், மயில்வாகனம், கதிரவேலு, பாக்கியம், சேனாதிராஜா, மகேஸ்வரி, அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் தம்பிராஜா (உரிமையாளர், ராஜா மெடிக்கல் ஸ்ரோர்ஸ், சுன்னாகம்), சிறீதரன், கமலாம்பிகை, திருநேசமலர், மங்கையர்க்கரசி, திருமகள் ஆகியோரின் அன்பு மாமியாரும் சயந்தன், ஜசந்தா, ஜெகந்தா, கிரிசாந்தன், துஷ்சாந்தன், துஷ்யந்தி, இன்பசாந்தன், கம்சாயினி, திருமதி விசாகினி, சசிகலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27-2-99) சனிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. தம்பிராசா
(மருமகன்)

கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

(63477)

## திருமதி சின்னையா பூமணி

(எழுதுமட்டுவாழ்)

எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்த சின்னையா (தம்பிஐயா) பூமணி நேற்று (26-02-1999) தனது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி – இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் முத்து சின்னையாவின் அன்பு மனைவியும் யோகலிங்கம் (சுவிஸ்), புஸ்பலதா (சுவிஸ்), புஸ்பதேவி (சுவிஸ்), தனலிங்கம் (ஜெகோவாவின் சாட்சிகளின் மன்றம், பெரிய பளை, பளை), புஸ்பகலா, புஸ்பலீலா, தவலிங்கம், புஸ்பறஞ்சிதா ஆகியோரின் அன்புத் தாயாரும் சின்னையா, பாலகிருஷ்ணன், பாலசுப்பிரமணியம், பாலச்சந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் விர்ஜீனியா, சாஜீரா, லீறோய், றஜினா, றஜிதன், றஜிலதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-02-99) சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தனலிங்கம்
(மகன்)

எழுதுமட்டுவாழ் தெற்கு,
எழுதுமட்டுவாழ்.

(63475)

## அம்பலவாணர் குகானந்தன்

(மெக்கானிக் செல்வம்)

ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் குகானந்தன் (செல்வம்) 26 – 02 – 99 வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் சந்திரகுமாரியின் அன்புக் கணவரும் நிரோஜாவின் அன்புத் தந்தையும் விவேகானந்தன், காலஞ்சென்ற தவானந்தன், காலஞ்சென்ற தயானந்தன், காலஞ்சென்ற பவளராணி, சர்வேஸ்வரி, அழகேஸ்வரி, நிமலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற செல்லத்துரை, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும் சண்முகராசா, செல்வராசா, யோகராசா, கணேசராசா, ஜெயக்குமார், வசந்தகுமாரி, விசயகுமாரி, ரதிக்குமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-02-99) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கோண்டாவில் மேற்கில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோகராஜா
(மைத்துனர்)

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(63479)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொந்த இடத்தில் குடியேற அனுமதியில்லை

# குடாநாட்டில் 19 ஆயிரம் குடும்பங்கள்

# உறவினர், நண்பர்களின் வீடுகளில்!

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ். குடாநாட்டில் மீளக் குடியேறிய மக்களில் 19ஆயிரத்து 165 குடும்பங்களைச் சேர்ந்த 59 ஆயிரத்து 574 பேர் தமது சொந்த வீடுகளில் வசிக்க முடியாமல் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இதே வேளை —

மாவட்டத்தில் பல பகுதிகளிலுமுள்ள நலன்புரி நிலையங்களில் ஆயிரத்து 690 குடும்பங்களைச் சேர்ந்த ஆறாயிரத்து 767 பேர் தங்கியுள்ளதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

இடப் பெயர்வின் பின் வன்னி மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்து தமது சொந்த மாவட்டங்களுக்குத் திரும்பிய இவர்கள் பாதுகாப்பு வலயம், பாதுகாப்பு அரண் மற்றும் விடுவிக்கப்படாத பிரதேசங்களில் தமது வீடுகள் இருப்பதனால் சொந்த இருப்பிடங்களில் மீளக்குடியேற முடியாத நிலையிலுள்ளனர்.

கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேலாக இவர்கள் நலன்புரிமுகாம்கள், நண்பர்கள், உறவினர்களின் வீடுகளில் வசித்து வருவது குறிப்பிடத்தக்கது.

1998 டிசெம்பர் 31 வரை யாழ். மாவட்டத்தில் ஒரு லட்சத்து 50 ஆயிரத்து 76 குடும்பங்களைச் சேர்ந்த 5 இலட்சத்து 40 பேர் மீளக் குடியமர்ந்துள்ளனர். இவர்களில் மேற்குறிப்பிட்ட தொகையினர் இதுவரையும் தமது இருப்பிடங்களுக்குச் செல்ல முடியாத நிலையிலுள்ளனர். (ஐ-5)

## புறநிலைப் படிப்பு அலகு:

# 161 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்

பருத்தித்துறை, பெப். 27

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகில் கல்வி பயின்ற 161 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளன.

இந் நிகழ்வு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத் தலைவர் திரு. மா. நடராச சுந்தரம் தலைமையில் நடைபெறும்.

புறநிலைப் படிப்புகள் அலகில் தொடர்பியலுக்கான ஆங்கில கற்கை நெறி தொகுதி I, II, III கல்வி பயின்ற 161 மாணவர்களுக்கான சான்றிதழ்களை யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

மேலும் வடமராட்சி புறநிலைப் படிப்புகள் அலகில் தற்போது நிர்வாக முகாமைத்துவ கற்கைநெறி நடைபெற்று வருகின்றது. ஏனைய புதிய பல கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாக வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அதிபர் செல்வி அ. கனகரத்தினம் தெரிவித்துள்ளார். (ஐ-113-173)

## ஆசிரிய கலாசாலை அனுமதி

வலிகாமம்தெற்கு, பெப்.27

கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்குத்தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் ஆசிரிய கலாசாலை அதிபரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

புதிதாகத்தெரிவு செய்யப்பட்ட பயிற்சி ஆசிரியர்கள் மார்ச் இரண்டாம்திகதிகாலை 9.30 மணிக்கு கலாசாலைக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஆசிரியர்கள், இவ்வருடம் பாடசாலையில் எடுத்த வீத விவரம், புகையிரத சீட்டு விவரம், மாதாந்த சம்பள விவரம் மற்றும் ஏனைய ஆவணங்களுடன் வருகைதருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-152)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 27

கொக்குவில் லயன்ஸ் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விசேட கருத்தரங்கு ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி கருத்தரங்கில் அடுத்தவருடம் பாடசாலைக் கல்வியை முடித்து வெளியேறும் மாணவர்கள் எவ்வாறு தமது உயர்கல்வி, தொழில் முயற்சிகளில் ஈடுபடலாம் என்பது குறித்து எடுத்து விளக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் லயன்ஸ் கழகங்களின்மாவட்டத் தலைவர் எஸ். சிவஞானம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் மா. சின்னத்தம்பி கருத்துரை வழங்குவார். (ஐ-7)

## இலவச மருத்துவ பரிசோதனை

யாழ்ப்பாணம், பெப். 27

மானிப்பாய் வட்டம் லயன்ஸ் கழகத்தின் இலவச கண் பரிசோதனை மற்றும் பொது மருத்துவப் பரிசோதனைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் நடைபெறவுள்ளன. (க)

## பாம்பு தீண்டியது

வயலில் நெல் வெட்டச் சென்ற இளைஞன் ஒருவர் பாம்பினால் கடியுண்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் கரவெட்டியிலுள்ள விராலி வயலில் இடம்பெற்றது.

கரவெட்டி மத்தொனியைச் சேர்ந்த கந்தசாமி நந்தசிறி (வயது 21) என்பவரே வலதுகாலில் பாம்பினால் கடியுண்டு மந்திகை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-109)

## ஆலய கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 27

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயில் உபயகாரர்கள், அடியார்கள் கலந்து கொள்ளும் பொதுக் கூட்டம் நாளை காலை 9-30 மணியளவில் ஆலய மண்டபத்தில் நடைபெறும். (ஐ-4)

## சமூக விஞ்ஞான படிப்பு வட்ட கலந்துரையாடல்

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம் நடத்தும் மாதாந்த கலந்துரையாடல் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பலாலி ஆசிரிய கலாசாலையில் நடைபெறவுள்ளது.

'பெண்மை பற்றிய சிந்தனைகளும் நடவடிக்கைகளும்' என்ற தலைப்பில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில் கலாநிதி பனோன்மணி சண்முகதாஸ் தலைமையுரையையும், வரலாற்றுத்துறை விரிவுரையாளர் சிறி சோமேஸ்வரி கிருஷ்ணகுமார் தொடக்கவுரையையும் ஆற்றுவர். (ஐ-27)

# மாணவரின் முன்னேற்றத்தில் பெற்றோரின் பங்கு அவசியம்

## விளையாட்டுப் போட்டியில் உரை

யாழ்ப்பாணம், பெப். 27

மாணவர்களின் முன்னேற்றத்தில் ஆசிரியர்கள் மட்டுமல்ல பெற்றோர்களும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

கைதடி கலைவாணி வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. கணேசன் இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் ப. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றும் போது கூறியதாவது:-

அத்திவாரம் பலமானதாத இருந்தால் தான் கட்டடமும் பலமிக்கதாக இருக்கமுடியும். எனவே குழந்தைகளின் சிறு பராயத்திலிருந்தே அவர்களை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் வளர்த்தெடுக்க வேண்டிய கடப்பாடு பெற்றோர்களுக்கு உரியது.

குழந்தை வளர்கின்ற சூழலே அவனது எதிர்காலத்தை நிர்ணயம் செய்கிறது. எனவே குழந்தைகள் மத்தியில் நல்ல எண்ணங்களையும், சிந்தனைகளையும் வளர்த்தெடுக்க வேண்டும்.

பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவதன் மூலம் வெற்றி தோல்விகளை ஏற்றுக் கொள்கின்ற மனப்பாங்கு, ஒற்றுமை உணர்வு போன்றவற்றை உருவாக்க முடியும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பிரதம விருந்தினர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். (ஐ-5)

## அதிரடி அரங்கு

வடமராட்சிப் பகுதி கல்வி வலயம் ஒன்றுக்கு ஆசிரிய இடமாற்றம் கோரிச் சென்ற ஆசிரியர் ஒருவர் அங்கிருந்த அதிகாரி ஒருவரினால் தாக்கப்பட்டிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரி குறித்தும் அவரின் 'சூடான' போக்குக் குறித்தும் ஏற்கனவே ஒரு தடவை இதே பத்தியில் தகவல் வெளியிடப்பட்டிருந்தன.

தாக்குதலுக்கு இலக்கான ஆசிரியர் இது குறித்து கட்சி ஒன்றின் அலுவலகத்திலும், பொலீஸிலும் ஆசிரியர் சங்கத்திடமும் முறைப்பாடு செய்திருப்பதாக அறிய வந்தது.

இந்த ஆசிரியர் தமக்கு இடமாற்ற விடயத்தில் அநீதி இழைக்கப்படுகின்றது என்பது குறித்து கடந்த ஓரிரு மாதங்களாக அதிரடிப் பகுதிக்கும் எழுத்து மூலம் முறைப்பாடுகள் தெரிவித்திருந்தார்.

★ ★ ★ ★ ★

1995 இற்குப் பின்னர் மக்களுக்கு உண்மையில் சேவையாற்றும் ஓரிரு அலுவலகங்களில் இலங்கை மின்சார சபையும் ஒன்று. சபை குடாநாட்டில் பாரிய வேலைகளைப் பொறுப்பேற்று செயற்படுத்தி வருகின்றது. அந்த வகையில் மின்சாரசபை நிறைவேற்றியிருக்கும் பணிகள் பாராட்டுக்குரியவை.

இதேவேளை மின்சாரசபை குறித்துத்தான் தினசரி பல முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்து வருகின்றன.

அந்த முறைப்பாடுகளில் இருந்து —

மின் இணைப்பு மற்றும் மின் விநியோகப் பணிகள் தொடர்பாக மக்கள் எதிர்பார்ப்பு — மக்களைத் திருப்திப்படுத்தும் வகையில் — நிறைவு செய்யப்படவில்லை.

மக்களின் முறைப்பாடுகளை ஏற்றுக் கொண்டு. உரிய முறையில் விசாரித்து, தீர்வு கண்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அதற்கேற்ப உத்தரவுகளை வழங்கி வழி நடத்தும் பணி சரியாக நிறைவேற்றப்படவில்லை என்பது துலாம்பரமாகத் தெரிகின்றது.

எங்கே முறைப்பாடு செய்வது? யாரிடம் முறைப்பாடு செய்வது செய்தாலும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வாய்ப்பு இருக்கின்றதா? — என்பதெல்லாம் சாதாரண மக்களுக்கு புரியாத புதிராக உள்ளன.

இலங்கை மின்சார சபையை குடாநாட்டு ரீதியில் வழிநடத்துவதற்கு — மேல் மட்டத்தில் — பொறுப்பதிகாரி இருக்கின்றாரா? அல்லது இல்லையா? அல்லது பதில் அதிகாரிகளாகச் செயற்படுவோருக்கு அதிகாரங்கள் அளிக்கப்படவில்லையா? — இவையும் புரியாத புதிர்கள்.

மக்களின் குறைகளைக் கேட்கவும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான தீர்மானங்களை எடுக்கவும் அந்தத் தீர்மானங்களைச் செயற்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கட்டளை பிறப்பித்து வழிநடத்தவும் சரியானதோர் உயரதிகாரி ஒருவர் தேவை. இதுதான் அத்தியாவசிய சேவையை வழங்கும் இலங்கை மின்சார சபையின் அவசர தேவையாகும்.

★ ★ ★ ★ ★

கடந்த வாரம் காலையில் பலாலி வீதியில் சைக்கிளில் பயணம் செய்த பலர் புல்லு வெட்டும் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டனர்.

ஊரெழு, புன்னாலைக்கட்டுவன் பகுதிகள் ஊடாகப் பயணம் செய்தோரே தடிகளுடன் நின்ற சீருடையினரால் வழிமறிக்கப்பட்டு, வீதியின் இருமருங்கிலும் இருந்த புல்லுகளை வெட்டும் கட்டாய சிரமதானப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இவ்வாறு 'சிரமதானம்' செய்தோரில் பாடசாலை அதிபர். வங்கிப் பணியாளர் உட்பட பல அரச ஊழியர்களும் அடங்குவர்.

''புலிகள் கேட்டால் இலட்சம் ரூபா கொடுப்பீர்கள். நாங்கள் கேட்டால் பற்றை கூட வெட்ட மாட்டீர்கள்'' — என்று படைத்தரப்பில் சிலர் ஆதங்கம் தெரிவித்தார்களாம்.

''அடிமைகள் போல எம்மைப் பாவித்து புல் வெட்டும் கட்டாயப் பணியில் ஈடுபடுத்தினார்கள்',— என்று 'சிரமதானம்' செய்த ஒருவர் பின்னர் விமர்சித்தார்!

★ ★ ★ ★ ★

நகரப் பகுதிகளில் இராணுவச் சோதனை முகாம்கள் அதிகம் அதனால மக்கள் அவற்றை அண்மித்ததும் வாகனங்களில் இருந்து இறங்கி, சோதனைக்குள்ளாகி உரிய இடம் போய்ச் சேர்வதற்கு இடையில் பயணம் சலித்துப் போகிறது; அலுப்புத் தட்டுகிறது.

ஆனால் சங்கானைச் சந்தைக்குச் சைக்கிளில் செல்வோர் கதை வேறாக உள்ளது. சங்கானைப் பட்டினத்தின் மத்தியில் உள்ள சந்தைக்கு பல அயல் ஊர்களிலிருந்தும் மக்கள் வருகிறார்கள்.

இவர்கள் எந்தக் கடைக்குச் சென்று எந்தப் பொருளைவாங்குவதானாலும் படையினர் குறிப்பிட்டு ஒதுக்கிய இடத்தில் தான் சைக்கிளை நிறுத்த வேண்டும். இல்லையேல் பலவிதமான தண்டனைகளை அனுபவிக்க நேரிடுகிறது.

இந்த நடைமுறை தெரியாததால் ஒருவர் சைக்கிளைத் தாம் விரும்பிய இடத்தில் நிறுத்தியதற்காக சண்டிலிப்பாய் முகாமுக்கு வருமாறு கேட்கப்பட்டு எச்சரிக்கப்பட்டார்!

தமது சொந்தக் கடையின் முன் சைக்கிளை நிறுத்திய கடை உரிமையாளர் அதனைத் தோளில் சுமந்து சென்று இதற்கென ஒதுக்கப்பட்ட காப்பகத்தில் விடுமாறு பணிக்கப்பட்டார்.

இவ்வாறு இன்னும் எத்தனையோ விதமான தண்டனைகளை அனுபவிக்கும் அவலம் சங்கானைச் சந்தைக்குச் செல்வோருக்கு உண்டு!

இரண்டு ரூபாவுக்குத் தீப்பெட்டி வாங்க வருபவரும், சைக்கிளை ஒதுக்கப்பட்ட காப்பகத்தில் நிறுத்தி ஒரு ரூபாவை அழுதாக வேண்டும்!

சிவில் விடயங்களில் இத்தகைய சில்லறைத் தலையீடுகளும் அதிகாரத்தனமும் தேவை தானா?

— மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

வரியப்புலம். சுன்னாகம் வடக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சஞ்சீவ் குமார் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (811672343V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்படி விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (63423)

நித்தியா கதிரவேலு ஆகிய எனது 2½ பவுண் சிங்கப்பூர் செயின் (நங்கூரப் பென்ரனுடன்) இருபாலைக்கும், யாழ். பொருளியல் கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கதிரவேலு (வயாவிளான்), விளையாட்டரங்கு வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (63446)

சுதுமலை மத்தி மானிப்பாயைச் சேர்ந்த மயில்வாகனம் புத்திரசிகாமணி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, அலுவலக அ. அ. என்பன 23-02-99 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பாதுகாப்புத் திணைக்களத்தில் ஒப்படைக்கவும். (63431)

தும்பளையைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி ஜனார்த்தனன் என்பவரின் விசேட அடையாள அட்டை (இல. 090809872), பிரிகேட் பாஸ் என்பன 24-2-99 அன்று தும்பளை வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பத்திரிகை முகவர், கவிதா ரேடர்ஸ், பருத்தித்துறையில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(சி/6632)

## மணமக்கள் தேவை

யாழ். இந்து கௌரவமான குடும்ப 1963 – 06 – 06 இல் அனுசநட்சத்திரத்தில் பிறந்த பார்மஸியில் வேலை செய்யும் அழகான பெண்ணுக்கு மணமகனும், 1966-01-24 அவிட்டம், ஜேர்மனியில் தொழில் புரியும் மகனுக்கு அழகான படித்த மணமகளையும் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: இல. 850, மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (63360)

## இராசி பலன்கள்

''ஆனந்தி'' வெளியீடு பிரமாதி வருட பலாபலன்கள் வியாழ — சனி, இராகு — கேது மாற்றம் உங்களுக்கு எப்படி? எங்கும் விற்பனையாகின்றன V. A. சிவராசா, 152B, அரசடிறோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(63448)

## விற்பனைக்கு

உடுப்பிட்டிச்சந்திக்கும், மகளிர் கல்லூரிக்கும் அண்மையில் யாழ். வீதியில் உள்ள நான்கு பரப்புக் காணியுடன் கூடிய வீடு (குழந்தைகள் பராமரிப்பு நிலையம்) மற்றும் 36 பரப்பு வயலும்(பண்டகை) உடன் விற்பனைக்கு உண்டு. மு ஜெயராஜசிங்கம், மான் பாடசாலை ஒழுங்கை, உடுவில், சுன்னாகம்.

(63340)

## திருத்துதல்

சகல கமரா வகைகளும், எலக்ரோனிக் பிளாஷ், மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத்துறை துணைச்சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சு. நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி. (மேல் மாடி), கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில்.

(63447)

## ஜோதிடம்

எத்தகைய தீராத பிரச்சினைகளுக்கும் தெளிவாக ஆலோசனை வழங்கப்படும். சாதகத்துடன் வரவும். புதன்கிழமைகளில் 111/3, கோயில் வீதி, நல்லூரிலும், ஞாயிறு முழுநேரமும் மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம். [63362]

## ENGLISH/ சிங்களம்

General Englsh - Grammar/ Speech Writing உள்ளடக்கிய கிரமமான பயிற்சி வகுப்புக்கள் சனி/ ஞாயிறு பி. ப. 3-00 மணி சிங்களம் புதிய பிரிவு விரைவில்- சனி, ஞாயிறு நேரம் காலை 10.00 மணி. T. Sagatheven B. A. (Lond), 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(63269)

## இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 31, மான் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (63332)

## ஆங்கிலம்

Spoken English 40 மணித்தியாலங்களில், G. A. Q. பட்டப்படிப்புப் பரீட்சையிலும் O/L பரீட்சையிலும் Distinction, Credit பெறுபேறடைய கற்பிக்கப்படும். B. Sc Londen Inter ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (63371)

## விற்பனையாளர் தேவை

பஞ்சுமிட்டாய் சைக்கிளில் கொண்டு சென்று விற்பதற்கான ஆள்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு: 15/2, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (63440)

---

# மணிக்குரல் விளம்பர சேவையின் 26 ஆவது ஆண்டு நிறைவு விழா

**காலம்:** 28-02-99 ஞாயிறு பிற்பகல் 2 மணி
**இடம்:** யாழ். மத்திய கல்லூரி கலை அரங்கு
கட்டணம் ரூபா 25 மட்டுமே.

கலாஸ் குளிர்பான நிறுவன ஆதரவில்
மாபெரும் கராட்டி நிகழ்ச்சி
மக்ஷ்ல் ஹவுஸ், நியூசந்திரா ஆதரவில்
தேன் இசை மழை
ஆஷிகா சில்க்ஸ், V. S. P. லஞ்ஒயில் ஆதரவில்
சாரங்கா இசைக்குழு வழங்கும்
சோகமேகமும் ராஜராகமும்

விளம்பர அன்பளிப்பு;
**ஆஷிகா சில்க்ஸ்**
4, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம். (சி/6627)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

27 - 02 - 1999

மலர்வு 01 07 1931



மறைவு 28 — 01 — 1999

அமரர்
## சின்னத்தம்பி இலட்சுமணர்

பிறந்தா ரெல்லாம் இறப்பதுதான்
பாருலகின் இயற்கையன்றோ நீங்களோ
இறந்த விதம் அறிந்து மனம்
அமைதியின்றி பதைக்கு தன்றோ
வந்து விட்ட ஆபத்தை
அறிந்து மனம் துடிதுடிக்க
எங்களை விட்டுப் பிரிந்து
எங்கே சென்றீர்களோ அப்பா!

எங்கள் அன்புத் தந்தையின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (27 – 02 – 1999) சண்டிலிப்பாயிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய். (63308)

---

யா/ அச்சுவேலி
புனித தெரேசாள் மகளிர் கல்லூரி
அச்சுவேலி.

# பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் 28—02—99 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

- அதிபர்

(சி/ 6631)

---

# 3rd YEAR REMEMBRANCE

## SELINA JEYARANEE MANDALANAYAGAM

Though life is a big rush
Your memories are yet afresh
Never to be forgotten
Ever to be cherished

Your ever sorrowing
dearones
Srilankan of Canada

(63335

---

# கண்ணீர் அஞ்சலி

முன்னாள் நெடுந்தீவு கொத்தணி அதிபரும்
தீவக உதவிக் கல்விப் பணிப்பாளரும் எமது
பாசத்திற்கு உரிய நண்பருமாகிய

## அமரர் P. M. J. அன்ரனி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்பு மனைவி, பிள்ளைகள், பெற்றோருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Dr. வை. யோகேஸ்வரன்
குடும்பத்தினர்.

21/1 குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம் (63449)

---

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## சோமநாதபிள்ளை கந்தையா
(இளைப்பாறிய ஆசிரியர்)

பிறப்பு 06 — 09 — 1918 இறப்பு 05 — 03 — 1993

திதி: 27 — 02 — 1999

எந்தையே! எங்கள் குடும்ப தீபமே!
ஆண்டாறாகியதே ஐயா!
நின் உடல் அழிந்தாலும்
நினைவலைகள் என்றுமே அழியாது.

ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்

வேலணை கிழக்கு,
வேலணை-1. — குடும்பத்தினர்
(63413)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 ஆயிரம் பட்டதாரிகள் நியமனம்:

# அரச சேவையில் உள்ளோருக்கு புதிய திட்டத்தில் இடம் இல்லை

### அரச அதிபர் உறுதி மொழி

வலி. தென்மேற்கு, பெப். 27

நாலாயிரம் பட்டதாரிகளை முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்வதில் ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள பட்டதாரிகள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டார்கள்

இவ்வாறு யாழ், மாவட்ட அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் வேலையற்ற பட்டதாரிகள் சங்க உறுப்பினர்களுக்கு உறுதிமொழி வழங்கியுள்ளார்.

நாலாயிரம் பட்டதாரிகளைச் சேர்த்துக் கொள்ளும் திட்டத்துக்கு 1994ஆம், 1995 ஆம் ஆண்டுகளுக்கும், அதற்கு முற்பட்ட ஆண்டுகளைச்சேர்ந்தவர்களும் விண்ணப்பித்துள்ளனர். இப்பகுதியினர் ஏற்கனவே அரசாங்க சேவையில் பட்டதாரி பயிலுநர்களாக கடமையில் உள்ளனர்.

1996ஆம் ஆண்டைச் சேர்ந்த 7-3-1996-க்கு முன் பட்டம் பெற்றவர்களில் ஒரு தொகுதியினருக்கு பட்டதாரி ஆசிரியர் நியமனங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை—

7-3-96 க்குப் பின்னர் பட்டம் பெற்ற அனைத்துப்பட்டதாரிகளையும் இவ் விடயத்தில் கவனத்திற் கொள்ளுமாறும் —

இதில் வேலையற்ற 1996 ஆம் ஆண்டு பட்டதாரிகள் 160 பேர் வேலையின்றி இருப்பதையும் (7-3-96 -க்குப் பின் பட்டம் பெற்றவர்கள்) பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகள் அரச அதிபருக்குச் சுட்டிக் காட்டினர்.

வேலையற்ற 1997 பட்டதாரிகள் பற்றியும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை—

நாலாயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் திட்டத்தின்படி விண்ணப்பித்து விவரப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவர்கள் தொடர்பாகவும்— விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பட்டதாரிகள் சம்பந்தமாகவும் வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அரசாங்க அதிபருடன் பேச்சு நடத்தி உள்ளது. (ஐ-185)

### ஆன்மீக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப். 27

திருநெல்வேலி ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் திங்கள் காலை 9.00 மணிமுதல் போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறும்.

காயத்திரி மந்திர ஜெபம், இலட்ச அர்ச்சனை, தியானம், பண்ணிசை, பஜனை, சொற் பொழிவு என்பன இடம்பெறும். நண்பகல் நாராயண சேவை நடைபெறும். (ஐ)

### பருத்தித்துறையில் இழுவைப்படகு சேதம்

வடமராட்சி, பெப், 27

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்குவதற்கு பயன்படுத்தப்படும் இழுவைப்படகுகளில் ஒன்று துறைமுக பாலத்துடன் மோதி சேதமடைந்தது.

சேதமடைந்துள்ள இழுவைப்படகு பயன்படுத்த முடியாத நிலையில் துறைமுகக் கரையில் ஒதுக்கி விடப்பட்டுள்ளது.

தற்போது பொருள்களை இறக்குவதற்கு ஒரே ஒரு இழுவைப்படகு மாத்திரமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் பொருள்களை இறக்கும் பணிதாமதமாகவே நடைபெற்று வருகிறது.

(ஐ -173-15)

### தையற் கண்காட்சி

யாழ்ப்பாணம், பெப். 27

ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி ஆலய மாணவிகளின் தையற் கைப்பணிக் கண்காட்சி இன்று சனிக்கிழமை காலை 10 மணி முதல் எதிர்வரும் திங்கட்கிழமை வரை மேற்படி ஆலயத்தில் நடைபெறும்.

(ஐ-4)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 27

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் ஒழுங்கு செய்துள்ள வருடாந்த கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சித்தன்கேணியில் உள்ள மேற்படி சம்மேளனப்பணிமனையில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் புதிய நெறியாளர் சபை ஒன்றும் தெரிவு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

### ஒன்றுகூடல்

மானிப்பாய் பரிஷ், கோப்பாய், சுன்னாகம், கொக்குவில் ஆகிய லயன்ஸ் கழகங்களின் ஒன்றுகூடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை தீவக லயன்ஸ் கழக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படிஒன்றுகூடல்நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (க)

### கண் பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம், பெப். 27

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் எட்டாவது இலவச கண் பரிசோதனை முகாம் நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு ஆவரங்கால் மேற்கில் உள்ள கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

லயன் ஜோண் அன்ரன் சகாயராஜா தலைமையில் எஸ். எம். பெர்னாண்டோ நிறுவனத்தினர் நடத்தவுள்ள இம் முகாமில் ஏற்கனவே நடைபெற்ற இலவச மருத்துவ முகாமில் பங்குகொண்டு தமது பெயர்களைப் பதிவு செய்துகொண்ட சுமார் 150 பேருக்கு நாளை நடைபெறும் முகாமில் முதலிடம் கொடுக்கப்படும் என லயன்ஸ் கழகத்தலைவர் லயன் பா. தவபாலன் அறிவித்துள்ளார்.

(ஐ-7)

# வன்னி மாணவருக்கு மேலும் ஒரு தொகை நிதி

யாழ்ப்பாணம், பெப். 27

வன்னிப்பகுதியில் பல்வேறு இன்னல்களின் மத்தியிலும் கல்வியைத் தொடரும் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்கென யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் மேலும் ஒரு தொகுதி நிதியை சேகரித்து வழங்கியுள்ளது.

மேற்படி நிதி கையளிப்பு வைபவம் நேற்று முன்தினம் காலை யாழ். மனித முன்னேற்ற நடு நிலையத்தில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் கலை நிகழ்ச்சி மற்றும் பல்வேறு வழிகளில் சேகரிக்கப்பட்ட ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 500 ரூபாவை மாணவர் ஒன்றியத்தின் பெரும் பொருளாளர் என். நடராஜசுந்தரம் மனிதமுன்னேற்ற நடுநிலைய இயக்குனரிடம் கையளித்தார்.

இதற்கு முன்னர் மேற்படி நிதி கையளிப்புத் தொடர்பான அனைத்துப் பீட மாணவர்கள் பங்கு பற்றிய விசேட கூட்டம் ஒன்று யாழ். பல்கலைக்கழககைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

இதுவரைக்கும் மூன்று தடவைகள் மாணவர் ஒன்றியத்தினால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

### பிரவேசப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்தும் பண்டித பிரவேசப் பரீட்சை இன்று முதல் மூன்று தினங்களுக்கு வேம்படி மகளிர்கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி ஆகியவற்றில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கான அனுமதி அட்டைகளும். நேர சூசியும் கிடைக்கப் பெறாதவர்கள் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபருடன் தொடர்புகொண்டு அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 27

மூளாய் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (க)

* * *

யாழ்ப்பாணம், பெப். 27

அளவெட்டி பராசக்தி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகத் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் கலந்து கொள்வார். (க)

* * *

சுன்னாகம், பெப். 27

ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1. 30 மணிக்கு கல்லூரி அதிபர் நா. சிவசிதம்பரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வலிகாமம் உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் பிரதம விருந்தினராகவும், முன்னாள் அதிபர் சி. யோகசிங்கம், உடற்கல்வி முதன்மையாசிரியர் எஸ். மகாலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(ஐ-27-152)

குருநகர், பெப். 27

நாவாந்துறைறோ. க. வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2. 00 மணிக்கு சென்.மேரிஸ்விளையாட்டு மைதானத்தில் அதிபர் யே.யேசுதாசன் தலைமையில் நடைபெற உள்ளது.

யாழ். வலயக் கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்) டி. ஆர் அருமைநாயகம் பிரதம விருந்தினராகவும், நாவாந்துறை உதவிப் பங்குத்தந்தை அருட்தந்தை ம. றெஜி இராஜேஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(க-51)

* * *

குருநகர், பெப். 27

நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி இன்று சனிக்கிழமை மு. ப. 9. 30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி அ. சண்முகானந்தன் தலைமையில் நடைபெறும்.

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை பிரதம விருந்தினராகவும், ம. புஸ்பராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (க-51)

* * *

பருத்தித்துறை, பெப். 27

அல்வாய் வடக்கு றோ. க. த. க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி இன்று சனிக்கிழமை மாலை 2. 00 மணிக்கு அதிபர் ஆ. வடிவேலு தலைமையில் புனித சவேரியார் தேவாலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வினை பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்.

பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரனும், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பங்குத் தந்தை வண. பிதா பி, எம் இமானுவேல் அடிகளார் கலந்து கொள்ளவுள்ளனர்.

(க-118)

* * *

நெல்லியடி, பெப். 27

தும்பளை சிவப் பிரகாச மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு அதிபர் ம. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக சி. சிவஞானசுந்தரம் கலந்து கொள்வார். (க-109)

# மனம், மொழி, மெய்யினால் மக்கள் அறம் புரியவேண்டும்

### சைவ அபிவிருத்திச் சங்க விழாவில் உரை

கொழும்புத்துறை, பெப். 27

மானிடராகப் பிறந்த நாம் மனம், மொழி, மெய் ஆகிய மூன்றாலும் அறம்புரிய வேண்டும். மனத்தால் செய்யும் அறம் கடவுள உணர்வும் நற்சிந்தனையுமாகும். மொழியால் புரியும் அறம் ஆண்டவன் திருநாமம் ஓதிப் புகழ் பாடுதலும், பிறருக்குத் துன்பம் பயலாத மொழிகளைக் கூறுதலும் ஆகும். உடலால் புரியும் அறம் பதியை மலர் கொண்டு பரவுதல், அடியார்க்குத் தொண்டு பூணுதல், பிறஉயிர்களுக்கு நன்மை செய்தலுமாம். நாம் துன்பமின்றி இன்பமாக வாழ வேண்டும் என்றால் மற்றவர்களுக்கு மனம், மொழி, மெய்யால் துன்பம் செய்யக் கூடாது. நன்மையே செய்தல் வேண்டும். இதுதான் உண்மையான பண்பாடு.

இவ்வாறு சமூக ஜோதி கா. கணேசதாசன் தெரிவித்தார்.

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் 45 ஆவது ஆண்டு விழாவிலும் சிவராத்திரி நிகழ்விலும், பரிசளிப்பு வைபவத்திலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் உரை நிகழ்த்தினார்.

இந்த விழா சிவராத்திரித் தினத்தன்று கழகத் தலைவர் இ. ஐயரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து பேசிய சமூக ஜோதி கணேசதாசன், இன்றைய சிறார்களே நாளைய தலைவர்கள் அவர்கள் சின்னஞ்சிறு வயதிலிருந்தே நற்பண்புகளுடன் அற நெறியில் வளர்க்கப்பட வேண்டும். பிஞ்சு உள்ளத்தில் இலகுவில் பதிந்து விடும் எண்ணங்கள் வயது சென்றும் நிலைத்து நிற்பதுண்டு. இந்த எண்ணங்களின் அடிப்படையிலேயே அவர்களின் செயற்பாடுகளும் அமையும்.

எனவே இளைஞர் உள்ளங்களில் நல்ல எண்ணங்களைப் பதியச் செய்து அவர்களை அறநெறி பிறழாத நற்பிரஜைகளாக்கும் நல்லெண்ணத்துடன் 45 வருடகாலமாக பல சமய மற்றும் கலைப்போட்டிகளை நடத்தி வரும் ஸ்ரீகற்பக விநாயகர் கோயில் சைவ சமய அபிவிருத்திச் சபையைப் பாராட்டுகின்றேன்.

இப்படி அவர் கூறினார்.

பூஜை வழிபாட்டுடன் ஆரம்பமான இந்த விழாவில் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ பா. பாலமுரளிதரக் குருக்கள் ஆசியுரையும், சைவப்புலவர் சிவத் திரு வ. கந்தசாமி வரவேற்புரையும் கூறினர்.

மாணவர்களது திருமுறை ஓதுதல், கணேச பஞ்சரத்தின லிங்காஷ்டக பாராயணம் மற்றும் சொற்பொழிவு நிகழ்ச்சியும் இடம்பெற்றன.

கழகத்தினால் நடத்தப்பட்ட சைவசமய அறிவுப் பரீட்சை, செயன்முறைப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை சமூகஜோதி கா. கணேசதாசன் வழங்கினார்.

(இ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Jaffna Medical Association**

**Annual General Meeting 99**

Annual General Meeting of the above association will be held on 27th March 1999 [Saturday] at 12-00 Noon in the CLINICAL LECTURE HALL, GENERAL HOSPITAL, JAFFNA. Please be Present.

Dr. N. Yoganathan,
Hony. Secretary.

(63429)

# அரச வங்கி ஊழியர்கள் போராட்ட முஸ்தீபு!

கொழும்பு, பெப். 27

அரச வங்கி ஊழியர்களின் சம்பளங்களை மறுசீரமைப்பது தொடர்பாக கடந்த வியாழக்கிழமை 'அலரி மாளிகையில்' ஜனாதிபதிக்கும் அரசவங்கி அதிகாரிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்ததை அடுத்து அரச வங்கி ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரச வங்கி ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளைச் சீர் செய்யவென ஜனாதிபதியால் மூவர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்த இயலாது என ஜனாதிபதி தெரிவித்துள்ளதை அடுத்தே அரச வங்கி ஊழியர்கள் இந்த முடிவை எடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றிய சிறிலங்கா மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் ஈஸ்வரதாசன் திறைசேரியின் செயலாளர் டிக்சன் நிலவீர, இலங்கை வங்கியின் தலைவர் திருமதி தயானி சில்வா ஆகியோர் சம்பளக் குழுவின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்த வேண்டாம் என ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கினர்.

(ஐ-10)


## வடமராட்சி லயன்ஸ் கழகம்

## அதிர்ஷ்டலாபச் சீட்டு

மேற்படி சீட்டுக்களுக்கான அதிர்ஷ்டம் பார்க்கும் தினம் 28-02-99 ஆம் திகதியிலிருந்து 28-03-99 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறோம்.

செயலாளர்,
வடமராட்சி லயன்ஸ் கழகம்.

(சி/6634)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர்

அமரர்

**நடராசா சிவலோகன்**

அவர்களின் அகால மரணத்தை அறிந்து ஆறாத் துயருற்றிருக்கிறோம். அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்,
இல்ல உத்தியோகத்தர், ஊழியர்கள்.
கைதடி அரச முதியோர் இல்ல ஊழியர் நலன்புரிச் சங்கம்,
கைதடி.

(63455)

## கண்ணீர் அஞ்சலி

**பொன்னர் புலவர்**

(புலவர் வீடியோ உரிமையாளர்)

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்.
ராஜன் வீடியோ மூவிஸ் சென்ரர்,
ராஜன் தொலைத் தொடர்பு நிலையம்,
பருத்தித்துறை.

(சி/6633)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்
திரு. ச. இரவீந்திரநாதன்
அவர்களது அன்புத் தந்தையார்

**அமரர் செ. சண்முகராசா**

(அச்சுவேலி கிழக்கு)

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள்,
யாழ். வலயம்,
கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்.

(63453)

## சிறுதானியம் பயிரிட ஆலோசனை

வலி. தென்மேற்கு, பெப். 27

நெல் அறுவடை முடிந்ததும் சிறுதானியப் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்குமாறு நவாலி விவசாயிகள் அனைவரையும் நவாலி விவசாயிகள் சம்மேளனத் தலைவர் மா. செல்வராசா கேட்டுள்ளார்.

எள், பயறு, சணல் போன்ற சிறுதானியங்களை பயிரிடுமாறு விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(ஐ-185)

## நூல்கள் கொள்வனவு

சுன்னாகம், பெப். 27

சுன்னாகம் பொது நூலகத்துக்குப் புதிதாக நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

வலி. தெற்கு பிரதேச சபையால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 50 ஆயிரம் ரூபாவுக்கு இவை கொள்வனவு செய்யப்பட்டுள்ளன

இந்நூல்களில் மாணவர்களுக்குப் பயன்படும் நூல்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது,

சுன்னாகம் பொது நூலக நூலகர் திருமதி . பாலசிங்கம் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை —

கடந்த கால அசம்பாவிதங்களின் போது இங்கிருந்த ஒரு தொகுதி நூல்கள் தொலைந்து போய் விட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது-

(ஐ-27)

## மாதாந்த உதவிப்பணம்

கொழும்புத்துறை, பெப். 27

யாழ். பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான கடந்த ஜனவரி மாதக் கொடுப்பனவு உரிய தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் தத்தமது பகுதித் தபாலகங்களுக்கு நேரில் சென்று கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். பிரதேச செயலர் பிரிவு சமூக சேவை உத்தியோகத்தர் கே. வி. சிவநேசன் தெரிவித்துள்ளார்.

(ஐ-30)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ். மத்திய கல்லூரியின் முறைசாராக் கல்விப் பிரிவில் கணனிப் பயிற்சி நெறிக்குத் தெரிவானவர்களுக்கான செயல்முறைப் பயிற்சி தொடர்பான கலந்துரையாடல் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பயிற்சி நெறிக்குத் தெரிவானவர்களைக் கலந்து கொள்ளுமாறு அதிபர் கே. இராஜதுரை கேட்டுள்ளார்.

(க)


## கிறிஸ்ரல் சென்ரர்

நெல்லியடி

எழுதுவினைஞர் பரீட்சைக்கான விசேட வகுப்பு

ஆரம்பம்:- 02 — 03 — 99
மு. ப 10.00 மணி

உங்கள் யாழ். முன்னணி ஆசிரியர்
BY க. தவசேகர.

(63461)



பருத்தித்துறை தம்பசிட்டி
அருள்மிகு

## ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்

[பண்டாரி அம்மன் கோயில்]

## வருடாந்த மஹோற்சவம்

கடந்த சனிக்கிழமை 20-02-99 இல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறுகிறது.

27 - 02 - 99 சனி (இன்று) வேட்டைத் திருவிழா
28 - 02 - 99 ஞாயிறு ரதோற்சவம் காலை8 மணி
01 - 03 - 99 திங்கள் சமுத்திர தீர்த்தம் காலை 6 மணி
02-03-99 செவ்வாய் பூங்காவனம் மாலை 5மணி

மஹோற்சவ குரு:
சிவப்பிரம்மஸ்ரீ ராம் கெங்காதரக்குருக்கள்
(சாரதா பீடம்)

ஸ்ரீலஸ்ரீ சிதம்பரசபாரத்தின தேசிகர்
தேவஸ்தான அறங்காவலர்.

பண்டாரி அம்மன் கோயில்,
தம்பசிட்டி.

(சி - 6636)


## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை நிற்சிங்கம்

[இளைப்பாறிய உதவி முகாமையாளர்,
இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்]

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் நாயன்மார் கட்டை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நிற்சிங்கம் அவர்கள் 26. 02. 99 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் வள்ளிநாயகியின் அன்புக் கணவரும், சரவணபவன் (கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்) லோகநாதன் (ஈஸ்வரன் சகோதரர் கம்பனி கொழும்பு), கருணானந்தன் [நல்லூர் ப. நோ. கூ. சங்கம்], சிவானந்தன் (நோர்வே), தயானந்தன் (நல்லூர் ஸ்தான சீ. சி. த. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திருமதி நா. சரவணபவன் (நாவற்குழி மகாவித்தியாலயம்), உமாநந்தினி, தமயந்திதேவி, சுரநுதா, வாசுகி ஆகியோரின் அன்பு மாமனாரும், கௌமாரன், யேஸ்ரன், கிரிபுவனி, சக்திநாயகி, நிற்சிந்தன், மதுஷா, பிரகாஷ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28-2-99) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

செம்மணி றோட்,
நாயன்மார்கட்டு.

(63463)

### செல்லையா சண்முகராசா

(இளைப்பாறிய தபால் தொலைத் தொடர்பு அலுவலர்)

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த செல்லையா சண்முகராசா அவர்கள் 1999 - 02 - 25 வியாழக்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

இவர் காலம் சென்ற செல்லையா (தலைமை ஆசிரியர்) செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும் பாலாம்பிகையின் அன்புக் கணவரும், காலம் சென்ற வைத்திலிங்கம் மகேஸ்வரி, காலம் சென்ற செ. நடராசா (உதவி அத்தியட்சகர் - சுங்கத் திணைக்களம்) ஆகியோரின் சகோதரரும், சிவநாதன் (இளைப்பாறிய தபாலதிபர்), இரவீந்திரநாதன் (முதன்மை ஆசிரியர் - யாழ் வலயம்), திருமதி ம. சுகந்தி (ஆசிரியர் யா/புனித திரேசா மகளிர் வித்.), பரந்தாமன் (ஆசிரியர் யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்) ஆகியோரின் தந்தையாரும், திரு. சி. மகேஸ்வரதாசன் (அதிபர் யா/ பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்.), திருமதி சி. கமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், கார்த்திகா, சுமித்திரா, விந்தியா. சிவானுஜன், தனுஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அச்சுவேலி தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (1999 - 02 - 27) சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியை அச்சுவேலி மயானத்தில் இடம்பெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. இரவீந்திரநாதன்
(மகன்)

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(63450)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் திருட்டு

# ஆட்டின் தலையை வெட்டி முண்டம் அபகரிப்பு!

வலி. கிழக்கு, பெப். 27

தற்போது குடாநாட்டில் திருட்டுக்கள் பலவிதம் இது அதில் ஒன்று.

தோட்டத்தில் கட்டப்பட்டிருந்த ஆடு ஒன்றின் கழுத்தைத் துண்டித்து தலையை அவ்விடத்திலேயே எறிந்து விட்டு முண்டத்தை அபகரித்துச் சென்றுள்ளனர்.

கோப்பாய் மாதா கோவிலடி ஒழுங்கையில் உள்ள ஒரு தோட்டக் காணியிலேயே இந்த ஆட்டிறைச்சித் திருட்டு நடந்துள்ளது.

மேய்ச்சலுக்காக ஆட்டைக் கட்டியவர் அதனை அவிழ்த்துவரச் சென்ற போது கட்டிய இடத்தில் ஆட்டின் தலை மட்டும் கிடந்ததைக் கண்டு அதிர்ந்து போனார்.

ஆட்டை உயிருடன் அவிழ்த்துச் சென்றால் அது குரல் எழுப்பி குழப்பி விடும் என்பதாலேயே தலையை வெட்டி உடலை மட்டும் வேறாக எடுத்துச் சென்றுள்ளனர் தந்திர மான திருடர்கள். (ஐ-180)

# பாடசாலை மறுசீரமைப்பு அதிபர்களுக்கு செயலமர்வு

குருநகர், பெப். 27

கல்வி மறுசீரமைப்பை அமுல்படுத்துதல் சம்பந்தமாக யாழ். கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான பாடசாலை மறுசீரமைப்புச் செயலமர்வு எதிர் வரும் 2ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெற உள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர்க் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான செயலமர்வு அன்றைய தினம் காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் —

கோப்பாய் கோட்டப்பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு பிற்பகல் 1.30 மணிமுதல் 4. 30 மணி வரை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும்—நடைபெறும்.

இச் செயலமர்வில் கல்வி அமைச்சு மாகாணக் கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகளும் வருகை தரவுள்ளனர். யாழ். கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள் தவறாது இச் செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஐ-51)

## மெய்வல்லுநர்போட்டி

வடமராட்சி, பெப். 27

கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு அதிபர் திருமதி ச. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராக மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். கதிரைவேற்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-173)


யா / மானிப்பாய்

**மெமோறியல் ஆங்கில பாடசாலை**

பழைய மாணவர் சங்க வருடாந்த

**பொதுக்கூட்டமும் மதிய போசனமும்**

மேற்படி மதிய போசன நிகழ்வு நாளை (28-2-99) பகல் 12.00 மணிக்கும், பொதுக்கூட்டம் 2.00 மணிக்கும் நடைபெறும்.

திரு. அ. மு. அருணாசலம் — தலைவர்
திரு. இ. இரர்ஜயோகன் — செயலாளர்
(63471)


## மரண அறிவித்தல்

### சிவக்கொழுந்து நாகரத்தினம்

(ஓய்வு பெற்ற ஊழியர், இலங்கை வங்கி)

காளிகோயிலடி குப்பிளான் ஏழாலையைப் பிறப்பிடமாகவும் 'மங்களகிரி' உரும்பிராய் தெற்கு உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து நாகரத்தினம் (ஓய்வுபெற்ற ஊழியர், இலங்கை வங்கி) 26-02-99 இல் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற லீலாவதியின் அன்புக் கணவரும் சிவக்கொழுந்து—சின்னம்மா தம்பதிகளின் மகனும் ஜெகநாதன் (ஊழியர், ஏழாலை V. C. ), யோகநாதன் (சுவிஸ்), விஜயநாதன் (கனடா), புஸ்பநாதன் (லண்டன்), குலநாதன் (ஆசிரியர், யா/ குப்பிளான் விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்) ஆகியோரின் தந்தையும் யோகமலர் (ஊழியர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை), சிவச்சந்திரா (கனடா), றோகினி (சுவிஸ்), ஜெயவாணி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் யாழினி, லாவண்யா, காருண்யன், கௌரீசன், கௌசி, கோபிகா, கோவர்த்தனி, கோசிகா ஆகியோரின் பேரனும் திருமதி கந்தையா மகேஸ்வரி, ஜெயராணி, இராமலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-02-99) சனிக்கிழமை பிற்பகல் 1-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குலம்
(மகன்)

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (63476)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, பெப். 27

பொலிகண்டி சல்லியம்பதி அருளோங்கு வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 20ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ரதோற்சவம் நடைபெறும். நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9மணிக்கு பொலிகண்டி கந்தவன தீர்த்த சமுத்திரத்தில் நடைபெறும் சமுத்திர தீர்த்தத் திருவிழாவுடன் வருடாந்த மஹோற்சவம் நிறைவுறும். (ஐ-175)

★ ★ ★

நல்லூர் ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ வாலையம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமாகியது. நாளை ஞாயிறு காலை 9.00 மணிக்கு தேர்த்திருவிழாவும் நண்பகல் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். மறுநாள் காலை தீர்த்தத் திருவிழாவும் மாலை அம்பாள் வெளிவீதி உலாவும் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா நாளை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தீர்த்தத்திருவிழா நாளை மறுதினம் காலை 8 மணிக்கு இடம்பெறும். (உ-7)

★ ★ ★

கொழும்புத்துறை ஆத்தியம்பதி அருள்மிகு ஸ்ரீசந்திரசேகர விநாயகர் கோயிலின் வருடாந்த உற்சவத்தின் சப்பறத்திருவிழா இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நடைபெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8. 00 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும், (ஐ-30)

★ ★ ★

கந்தரோடை வற்றாக்கை அருள்மிகுவிஸ்வநாதஸ்சுவாமி கோயிலில் எழுந்தருளியுள்ள நடேசப் பெருமானுக்கும் சிவகாமசுந்தரி அம்பாளுக்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9-00மணிக்கு விசேட அபிஷேகமும் பூசையும் நடைபெறும். (ஐ-20)

## வணிகர் கழக பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் இந்த ஆண்டுக்கான பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு 'சிற்றி ஹோல்' மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வணிகர் கழக அங்கத்தவர்கள் அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

## ஆங்கில ஆசிரியர் போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப் 27

சாவகச்சேரி கல்வி வலயத்தில் பளைக்கோட்டப் பாடசாலைகளுக்குப் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர் வரும் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி[illegible] அனுப்பப்பட்டுள்ளதாக தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் தெரிவித்தார். (3)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 27

கொக்குவில் வளர்மதி சன சமூக நிலைய ஆதரவில் விக்ரம் - ராஜன் ஞாபகார்த்த துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ காலை 8. 30 மணி— சென்ரலைட்ஸ் வி. க. அணி எதிர் ஜொலிஸ்ரார் வி. க. அணி.

★ பிற்பகல் 1 மணி — பல்கலைக்கழக வி. க. அணி எதிர் கே. ஸி. ஸி. வி. க அணி. (ஐ-3)

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3. 30 மணி— பாடும் மீன் வி. க அணி எதிர் பொற்பதி வி. க அணி.

★ பிற்பகல் 4. 45 மணி— றோயல் வி. க. அணி எதிர் சென். அன்ரனீஸ் வி. க. அணி.

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ். மாவட்ட இலங்கை வங்கி கிரிக்கெட் அணிக்கும், யாழ். மாவட்ட மதுவரித் திணைக்களம் அணிக்கும் இடையேயான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி ஒன்று நாளை காலை 9 மணிக்கு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது. (ஐ-3)

## நிலாக்கால நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 27

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் நிலாக்கால நிகழ்ச்சி நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ச. நா. தணிகாசலம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் தொடக்கவுரையை யாழ். இந்துக் கல்லூரி அதிபர் அ. சிறிக்குமாரன் நிகழ்த்துவார்.

டாக்டர் செ. நச்சினார்க்கினியன் தலைமையில் ''இளைய சந்ததியில் இவைகளின் நிலைகள் காண்போம்' என்னும் தலைப்பில் நடைபெறவுள்ள ஆய்வரங்கில் ஆறு. திருமுருகன், பேராசிரியர் தயா சோமசுந்தரம், இரா செல்வவடிவேல், ஏ. ரி. பொன்னுத்துரை ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

## தாவடியில் தையல் பயிற்சி நிலையம் ஆரம்பம்

தாவடி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் தையல் பயிற்சி நிலையமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திருமதி நா. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வலி. தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் மேற்படி நிலையத்தைத் திறந்து வைத்தார். (ஐ-27)

## 4 குட்டிகளை ஈன்ற ஆடு

கோப்பாய்ப் பகுதியில் ஆடு ஒன்று நான்கு குட்டிகளை ஈன்றுள்ளது.

கோப்பாய் மாதா கோயிலடியைச் சேர்ந்த த. பொன்ராசா என்பவருடைய வளர்ப்பு ஆடே இரண்டு மறிக் குட்டிகளையும் இரண்டுகடாக் குட்டிகளையும் கடந்த வாரம் ஈன்றுள்ளது. தாயும் குட்டிகளும் சுகமாகவே உள்ளன. (ஐ-180)

## சோமரத்தின...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த விவகாரம் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பொலீஸார் யாழ். நீதிவான் நீதிமன்றில் முதலில் தாக்கல் செய்த மனுவில் சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்களை அடையாளம் காட்டுதற்காக சோமரத்தின ராஜபக்ஷவை யாழ்ப்பாணம் கொண்டு வருமாறு சிறைச்சாலை ஆணையாளருக்கு உத்தரவிடும்படி கோரப்பட்டிருந்தது.

அத்தகைய உத்தரவு எதனையும் யாழ். நீதிமன்றம் இன்னமும் விடுக்கவில்லை.

இதற்கிடையில்—

இந்த விவகாரம் தொடர்பாக நேற்று அறிக்கை விடுத்த சட்டமா அதிபர் திணைக்களம் அந்த அறிக்கையில்—

புதைகுழி தோண்டுவதற்காக வரவிருக்கும் நிபுணர்கள், குற்றப்புலனாய்வு அதிகாரிகள் போன்றோரின் பெயர் விவரங்களை விலாவாரியாக வெளியிட்டதோடு மிக விரைவில் புதைகுழி தோண்டும் பூர்வாங்கப்பணிகள் ஆரம்பமாகும் என்ற சாரப்படவும் தகவல் வெளியிட்டுள்ளது.

ஆனால் சோமரத்தின ராஜபக்ஷவை யாழ்ப்பாணத்துக்குக் கூட்டி வருவது குறித்தோ அவரைக்கொண்டு சடலங்கள் புதைக்கப்பட்ட இடத்தை அடையாளம் காட்டச் செய்வது குறித்தோ அந்த அறிக்கையில் எதுவும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. இதுவே பலத்த சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

1970 களின் கடைசியிலும், 1980 களின் மத்தியிலும், பின்னர் 1980 களின் கடைசியில்- இந்திய அமைதிப்படையின் காலத்திலும் கொலை செய்யப்பட்ட பலர் செம்மணிப் பகுதியில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

இத்தகைய புதைகுழிகள் பற்றியதகவல்கள், இடங்கள் ஆகியவை அவற்றுடன் தொடர்புபட்ட இலங்கைப் பாதுகாப்புவட்டாரங்களுக்கு நன்கு தெரிந்திருக்கும் என்று மனித உரிமைகள் அமைப்புகளுடன் தொடர்புடைய பிரமுகர் ஒருவர் கருத்து வெளியிட்டார்.

சோமரத்னவைக் கூட்டி வந்து 1996 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்களைக் காட்டச் செய்யும் நடவடிக்கையைத் தவிர்த்து —

அதற்கு முன்னர் அப்பகுதியில் சடலங்கள் பெரும் எண்ணிக்கையில் புதைக்கப்பட்ட இடங்களைத் தோண்டச் செய்து—அவற்றை நிபுணர்களைக் கொண்டு ஆராய வைத்து — அதன்மூலம் நிலைமையைத் திசைதிருப்ப நடவடிக்கை எடுக்கப்படக் கூடும் என்றும்—

அந்தப் பிரமுகர் சந்தேகமும் அச்சமும் வெளியிட்டார்.

செம்மணிப் புதைகுழி தொடர்பாக யாழ். நீதிவான் நீதிமன்றம் திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வராத இந்த ஆரம்ப கட்டத்திலேயே ''நிபுணர்களின் கருத்தின் அடிப்படையில் பூர்வாங்க தோண்டுதல் நடவடிக்கைக்கான திகதியை யாழ், நீதிவான் தீர்மானிப்பார். என எதிர்பார்க்கப் படுகின்றது — என்று சட்டமா அதிபர் திணைக்களம் பகிரங்க அறிவித்தல் விடுத்ததும் சட்ட வட்டாரங்களில் சர்ச்சையைக் கிளப்பியிருக்கின்றது.

நீதிமன்றம் தீர்மானம் எடுக்கு முன்னரே அதனை அந்த வழியில் நடவடிக்கை எடுக்கப் பலவந்தமாகத் தூண்டும்— வழி நடத்தும்— ஓர் அறிக்கையாக இது அமைந்துள்ளது என்று சில சட்டவட்டாரங்கள் கருத்து வெளியிட்டன. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நீதிமன்றங்களின் அமர்வுகள் நிறுத்தம்!

## ஆணைக்குழுவுக்கு அறிவித்தல்

யாழ்ப்பாணம்,பெப்ரவரி 27

**யாழ். மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களுக்கு விடுதலைப் புலிகளினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின் விவரத்தை நீதிச் சேவைகள் ஆணைக் குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்த யாழ். நீதிவான்கள் நேற்று முதல் நீதிமன்ற அமர்வுகளை இடைநிறுத்தி வைத்துள்ளனர்.**

யாழ். மாவட்டத்தில் நீதிமன்ற நடவடிக்கைகளை முற்றாக நிறுத்தும்படி தமிழீழ விடுதலைப்புலிகளால் யாழ்ப்பாணம், மல்லாகம், ஊர்காவற்துறை, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய நீதிமன்றங்களுக்கு அண்மையில் கடிதங்கள் அனுப்பி வைக்கப் பட்டது தெரிந்ததே.

அக்கடிதத்தையடுத்து நேற்று முன்தினம் தவணைக்காக எடுக்கப் பட்ட வழக்குகள் அனைத்தும் மே மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டன.

நீதிமன்றத்தின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்த மேற்படி நீதிமன்றங்களின் நீதிபதிகள் தம் நிலைப்பாடு குறித்து நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு அறிவித்துவிட்டு நீதிமன்ற அமர்வுகளை நிறுத்தி வைத்துள்ளனர்.

யாழ். நீதிமன்றத்தில் நேற்று திகதியிடப்பட்ட வழக்குகள் யாவும் 1999 மே 25ஆம் திகதிக்கு மறு தவணையிடப்பட்டுள்ளதாகத தெரிவிக்கும் அறிவித்தல் நீதிமன்ற விளம்பரப் பலகையில் பதிவாளரினால் ஒட்டப்பட்டிருந்தது.

இதேவேளை மல்லாகம் நீதிமன்றம் நேற்று மல்லாகத்தில் தனியார் கட்டடம் ஒன்றில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அங்கு வழக்குகள் எதுவும் எடுக்கப்படவில்லை. (உ-5)

## டக்ளஸுக்கு எதிராக இரு எம்.பிக்கள் மனு!

கொழும்பு,பெப்.27

யாழ்.மாவட்ட சுயேச்சைக் குழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் தமது சுயேச்சைக்குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிராக நேற்று உயர் நீதிமன்றத்தில் மனுக்களைத தாக்கல் செய்துள்ளனர்.

தங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை இல்லாதொழிக்கும் விதத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு எதிராகவே இவர்கள் இருவரும் இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

யாழ். மாவட்ட சுயேச்சைக் குழுவைச்சேர்ந்த ஆர்.ராமமூர்த்தி, ஆர்.ராமேஸ்வரன் ஆகிய இரு உறுப்பினர்களுமே இம் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுக்களில் டக்ளஸ் தேவானந்தா, சட்டமா அதிபர் மற்றும் 11 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப் பட்டுள்ளார்.

இவர்கள் இருவரையும் சுயேச்சைக் குழுவில் இருந்து வெளியேற்றி விட்டதாகவும் -

எனவே அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை இல்லாமற் செய்யுமாறும் -

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் நாடாளுமன்றச் செயலாளரைக் கோரி இருந்தார். (ஐ-10-21)

## கிராம அலுவலர் இடமாற்றம்: ஒத்திவைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.27

.யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் கிராம சேவையாளர்களை இடமாற்றம் செய்யும் உத்தேசத் திட்டத்தைப் பின்போடுமாறு யாழ். அரச அதிபரை யாழ். மாவட்ட கிராம் உத்தியோகத்தர் சங்கம் கேட்டுள்ளது.

மேற்படி சங்கத்தின் விசேட கூட்டத்தில் இது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்தை அந்தச் சங்கப் பிரதிநிதிகள் யாழ். அதிபரிடம் நேரில் கையளித்துள்ளனர்.

சமகாலத்திற்கு இந்த இடமாற்றம் ஏற்புடையதல்ல என்பதையும் -

கிராம உத்தியோகத்தர்கள் இடமாற்றத்துக்கு உட்படுகின்றபோது பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டி வரும் என்பதையும் -

தற்போதுள்ள சூழ்நிலையைக் கவனத்திற் கொண்டு இடமாற்ற விடயத்தைப் பின் போடவேண்டும் என்றும் -

அந்தத் தீர்மானத்தில் கோரப் பட்டுள்ளது. (ஐ-3)

### நாகர் கோயிலில்

## 40 அடி நீளப் படகு கரை ஒதுங்கியது!

செம்பியன்பற்று,பெப்.27

நாகர்கோயில் கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் 40 அடி நீளமான படகு ஒன்று கரையொதுங்கியுள்ளது.

DAYAKAWA என்ற ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட இந்தப்படகில் மூன்று கொள்கலன்களில் பெற்றோல், டீசல் போன்றவை இருந்தன.

இப்படகு தொடர்பாக இப்பகுதி கிராமசேவையாளர் படை அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியதையடுத்து இப்பகுதிக்கு வந்த படையினர் படகினைப் பொறுப்பேற்றனர். (உ-5-36-171)


## கருத்தரங்கு

**பொருள்:** “பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சியில் பெற்றோர், ஆசிரியரின் பங்கு”

இது பற்றிய வீடியோ படமும் கலந்துரையாடலும்.

**நெறிப்படுத்துபவர்:** அருட்திரு S.J.இராஜநாயகம்

**காலம்:** 1-3-1999 நேரம்: 3.30 பி.ப.

**இடம்:** ‘அகவொளி’
131 பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.
வாரீர்! கலந்து பயன் பெறுவீர்!!

(63451)


## விழா

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்மாவட்ட சாரணீய சிந்தனை விழா இன்றும், நாளையும் கல்வி வலய ரீதியாக இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம், வடமராட்சி வலயங்களுக்குரிய விழாக்கள் இன்று காலை 9 மணிக்கு முறையே வேம்படி மகளீர் கல்லூரியிலும், அச்சுவேலி திருக்குடும்பக் கன்னியர்மட வித்தியாலயத்திலும்-

வலிகாமம் வலயத்துக்குரிய விழா நாளை காலை 9 மணிக்கு மானிப்பாய் மொமேறியல் ஆங்கிலப் பாடசாலையிலும் -

நடைபெறவுள்ளன.

, தீவக வலயப்பாடசாலைகள், வலிகாமம் அல்லது யாழ்ப்பாண வலயப் பாடசாலைகளுடனும்-

தென்மராட்சி வலயத்துக்குரிய பாடசாலைகள் யாழ்ப்பாண வலயத்துடனும் -

இணைந்து கொள்ளலாம் என யாழ்.மாவட்ட சாரணீய ஆணையாளர் திருமதி சிவராஜா அறிவித்துள்ளார்.

## அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,பெப்.27

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையில் “ஹெலிடூர்ஸ்” நிறுவனத்தால் நடத்தப்படும் விமான சேவையில் பயணம் மேற்கொள்ளும் பயணிகள் காலை 9.00 மணிக்கு முன்பாக சிவில் நிர்வாக அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பயணிகளை ப்லாலிக்கு அழைத்துச் செல்லும்பஸ் காலை 11 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் என்றும் -

சோதனை நடவடிக்கைகளை நேரகாலத்துடன் முடித்துக்கொள்ள வசதியாகவே காலை 9.00 மணிக்கு முன்பாக பயணிகள் சமுகமளிக்க வேண்டும் என்றும்-

யாழ் சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை--

வீடியோ நாடா, படச்சுருள் மற்றும் மின் உபகரணங்களை விமானம் மூலம் எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதால் அத்தகைய பொருள்களை எடுத்து வந்து வீணான சிரமங்களை அனுபவிக்க வேண்டாம் என்றும் சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஐ-3)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.27

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெற இருந்த நல்லூர் பிரதேசசெயலர் பிரிவு மென்பந்துக் கிரிக்கெட் போட்டி தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (ஐ-3)

## பெருமாள் மட்டு.விஜயம்

கொழும்பு,பெப்.27

வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் இன்று மட்டக்களப்புக்குச் செல்கிறார் என கொழும்ச் செய்தி வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

அவர் அங்கு ராஸீக் குழுவினரையும் சந்தித்துக் கலந்துரையாடுவார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## விபத்தில் வயோதிபர் காயம்

யாழ்ப்பாணம்,பெப்.27

சுழிபுரத்தில் நேற்று இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் - சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார். சைக்கிளில் சென்றவரான சுழிபுரம் கிழக்கைச்சேர்ந்த ஆசைப்பிள்ளை வேலுப்பிள்ளை(வயது 70) என்பவரே காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

## மருந்துகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்.போதனாவைத்தியசாலைக்கு முதற் காலாண்டுக்குரிய மருந்துவகைகளில் சில செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் நேற்று எடுத்துவரப்பட்டன.

சுமார் 75 ஒட்சிசன் சிலிண்டர்களும், ஆஸ்பத்திரிப் பாவனைக்கான காகிதாகிகளும் இதனுடன் எடுத்துவரப்பட்டன. (ஐ-15)

## கொழும்பு கிரிக்கெட்

கொழும்பு,பெப்.27

இலங்கை அணிக்கும், இந்திய அணிக்கும் இடையில் கொழும்பு எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் நடைபெற்றுவரும் கிரிக்கெட் ரெஸ்ட் ஆட்டத்தில் மூன்றாவது நாளான நேற்று மழைகாரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது இலங்கை 4 விக்கெட் இழப்புக்கு 293 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்தியா முதலாவது இன்னிங்ஸில் ஏழு விக்கெட்டுக்கள் இழப்புக்கு 518 ஓட்டங்களை பெற்றிருந்தது. (ஐ-3-7)

### ஒபடகேயிடம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறினார். கொழும்பிலிருந்து கப்பல் மூலம் பொருள்கள் எடுத்து வருவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான மகஜர் ஒன்றை அவர்கள் ஒபடகேயிடம் சமர்ப்பித்தனர்.

பருத்தித்துறை துறைமுகத்தில் இழுவைப்படகு வசதி செய்யவேண்டும் என்றும் -

கூடுதலான கப்பல்களில் பொருள் எடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும்-

கப்பல்களில் பொருள்கள் ஏற்றப்படும் போது படையினர் மேற்கொள்ளும் சோதனைகளைக் குறைக்க வேண்டும் என்றும் -

அச்சங்கத்தினர் ஒபடகேயிடம் கோரியுள்ளனர். (ஐ-3)

### யுத்தத்தை.....

(முதலாம் பக்கத் தொடர்)

மாபெரும் பொதுக்கூட்டத்தில் வைத்தே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அக்கூட்டத்தில் உரையாற்றிய பௌத்த குரு ஒருவரும், முஸ்லிம் மௌலாவியயான சுசியான், இந்துக் குருவான சபரிமலை சாஸ்தாபீடம் ஐயப்பதாஸக் குருக்கள், கிறிஸ்த்தவ துறவியான ஆயர் வண. கெனத் பேர்னாண்டோ ஆகியோரே மேற்கண்ட வேண்டுகோளை கூட்டாக விடுத்தனர்.

“இன்று நாட்டுக்கு அவசியம் தேவையானது சமாதானமேயாகும். அதற்காக யுத்தம் நிறுத்தப்பட்டு அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க வேண்டும்.

“வன்னியில் மக்கள் படும் இன்னல்களுக்கு முடிவு காணப்பட வேண்டும்.

“சகல சமயத்தவர்களும் ஒன்று சேர்ந்து முன்னெடுக்கும் சமாதான முயற்சிக்கு சகலரும் ஆதரவு வழங்க வேண்டும்.”

- இவ்வாறு அவர்கள் தமது வேண்டுகோளில் குறிப்பிட்டனர்.

பொதுக்கூட்டத்துக்கு முன்பாக பொரளை கம்பல் பார்க்கில் இருந்து சமாதானப் பேரணி ஆரம்பமானது. இந்தப் பேரணியில் சுமார் 5 ஆயிரம் பேர் பங்குபற்றினர்.

மதத்தலைவர்கள் சுலோக அட்டைகள், பதாதைகளைத் தாங்கியவாறு பேரணியின் முன்னே சென்றனர்.

கொழும்பில் நேற்று திடீரெனப் பெய்த மழை காரணமாக பெரும் எண்ணிக்கையானவர்கள் இந்தப் பேரணியில் கலந்துகொள்ள முடியாமற் போனது என்று பேரணி அமைப்பாளர் ஒருவர் தெரிவித்தார். (ஐ-3)

### விசாரணைகளை....

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த விவகாரம் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் இயக்குநரான சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் கீர்த்தி கஜநாயக்கா தலைமையில் குற்றப் புலனாய்வு அணியினர் மற்றும் சட்ட மருத்துவத்துறை நிபுணர்கள் ஆகியோர் செம்மணியில் பெரும் மனிதப் புதைகுழி உள்ளதாகக் கருதப்படும் இடத்துக்கு எதிர்வரும் ஐந்தாம் திகதி விஜயம் செய்ய இருக்கின்றார்கள்.

மனிதப் புதைகுழி உள்ளதாகக் கருதப்படும் இடத்தில் சட்ட மருத்துவ ஆய்வுகளில் -

மனித சடலங்களின் எச்சங்களை அகழ்ந்து எடுப்பதிலும் அடையாளம் காண்பதிலும் உள்ளூரிலும் சர்வதேச ரீதியிலும் அனுபவம் பெற்ற நிபுணரும் றுகுணு பல்கலைக்கழகத்தின் சட்ட மருத்துவத்துறை பேராசிரியருமான நிரியல்லகே சந்திரசிறி தலைமையில் மனித உடலியல் தொடர்பான சட்டத்துறை வல்லுநர்களை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஈடுபடுத்தவுள்ளனர்.

மேலும் பல உள்ளூர் மற்றும் சர்வதேச சட்ட மருத்துவத்துறை விஞ்ஞானிகள் பின்னர் இக்குழாமில் இணைந்து கொள்வர்.

மேலதிக அரச இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் எம்.ஏ.ஜே. மெண்டிஸ், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மண்ணியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியராகப் பணியாற்றும் கலாநிதி கே.ஏ. நந்தசேன ஆகியோரும் விசாரணைகளில் பங்குபற்ற விருக்கின்றனர்.

இது தொடர்பான வழக்கில் அரசுத் தரப்பில் அரச சட்டத்தரணி யஸந்த கோட்டகொட எதிர்வரும் 5ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராவார்.

புலன் விசாரணைகளை சட்டமா அதிபர் திணைக்களம் ஒன்றிணைக்கும்.

செம்மணிப் புதைகுழி தொடர்பாக முன்னாள் இராணுவக் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஸ தகவல் வெளியிட்ட கையோடு அதுபற்றிய புலன் விசாரணைகளை புற்றப்புலனாய்வுத் திணைக்களம் ஆரம்பித்தது எனினும்-

பாதுகாப்புக் காரணங்களினாலும் மோசமான காலநிலையாலும் அந்த இடத்தில் இன்றுவரை விசாரணைகளை நடத்த முடியவில்லை.

இன்றும் பெரும் மனிதப் புதைகுழி உள்ளதாகக் கருதப்படும் செம்மணிப் பகுதி நீரில் மூழ்கியுள்ளது.

புலனாய்வு தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு சட்டமா அதிபர் திணைக்களம் 1998இன் இறுதியில் ஆலோசனை வழங்கத் தொடங்கிய கையோடு விசாரணைக்குப் பாதுகாப்பு வழங்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட யாழ் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சந்திரா பெரேரா தமிழீழ விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டார். இது புலன்விசாரணைகள் ஆரம்பமாவதைத் தாமதப்படுத்தியது. அதன் பின்னர் அந்தப் பிரதேசத்தில் விசாரணை நடத்துவதை மோசமான காலநிலை தடுத்தது.

செம்மணிப் பகுதியில் எதிர்வரும் ஐந்தாம் திகதி ஆய்வும் மதிப்பீடும் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிபுணர்களின் கருத்துகளின் அடிப்படையில் ஆரம்ப தோண்டுதல் நடவடிக்கைகளுக்கான திகதியை யாழ் நீதிவான் நிர்ணயிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நீதிவானின் கண்காணிப்பின் கீழ் முழுத் தோண்டுதல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மனிதப் புதைகுழி உள்ளதாகக் கூறப்படும் இடத்துக்கு புலனாய்வாளர்கள் சகிதம் மார்ச் 5 ஆம் திகதி விஜயம் செய்யும்படி யாழ் நீதிவானை அரசுத்தரப்பு அழைக்கவிருக்கின்றது.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ஐ-3)


எமது புதிய வீடியோ CD வெளியீடு

JEAN-CLAUDE VAN DAMME IN LEGIONNAIRE

பிள்ளையார் வீடியோ
23, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (63478)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்(பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம்,கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27-02-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
27 FEB 1999
மாநகராட்சி
யாழ்ப்பாணம்

உங்களை வரவேற்க
காத்திருக்கின்றது!
ஜோ. எகட்டனின்
ஜெசித்தாரா

மேலைத் தேய, கீழைத்தேய உணவு
வகைகளை, நிறைவுடன் உங்கள்
அபிமானிகளுக்கு தரத்துடன்
சுகாதாரமாக பரிமாற
ஒருமுறை நாடுங்கள்.

சுண்டுக்குளி மகளிர் எதிர் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

(63353)

சஞ்சீவி
சஞ்சிகை

27 – 02 – 1999 சஞ்சீவி

## கருத்துக் கலசம்

மயூரா

### பொறுமையின் பெருமை

**ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம்; பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்.**
**—திருவள்ளுவர்.**

பொறுமையின் அவசியத்தை வலியுறுத்தும் குறள்களில் ஒன்று இது. பொறுமையைக் கடைப்பிடிக்கும் ஒருவனை மக்கள் பொன் போலப் போற்றுவர் என்றும் வள்ளுவர் சொல்கிறார்: பிறர் சொல்லும் கடுஞ் சொற்களைப் பொறுப்பவர்கள் இறைவனை நோக்கி உண்ணா நோன்பிருக்கும் ஆன்மீகவாதியை விடவும் பெரியவன் என்று கூடப் பொறுமையின் பெருமையை வள்ளுவர் உயர்த்திக் காட்டுகிறார்.

மற்றவர்கள் செய்யும் குற்றங்களை, தவறுகளைப் பொறுத்துக் கொள்பவன் பெரியவன் ஆகின்றான்.

ஒருவன் தனது வரம்பை மீறித் தீங்கு செய்து விட்டானே என்பதற்காக, நாமும் வரம்பு தாண்ட நினைக்கலாகாது. அவ்வாறு நினைப்பதும், செய்வதும் எங்களை நல்லவராக்காது; முந்தியவனை விடக் கேவலமானவன் என்ற நிலைக்கே தள்ளிவிடும்; குற்றவாளியும் ஆக்கிவிடும்!

எம்மில் பலரும் பொறுமை இழந்தவர்களாகவே காணப்படுகிறோம். ஒருவன் எமக்குத் தீங்கு அல்லது கேடு செய்தால் அதனைப் பொறுத்துக் கொள்பவர்கள் மிகச் சிலரே.

அவன் இத்துணை தீங்கு செய்ய நான் எவ்வாறு பொறுத்துக் கொள்ள முடியும்; பார்த்துக்கொண்டிருக்கலாம்; நான் பதிலடி கொடுக்க வேண்டும்; பழி வாங்காமல் இருக்கக் கூடாது என்று நினைப்பவர்களும் செயற்படுபவர்களுமே அனேகர்.

பொறுமை இழந்து அடுத்தவனுக்கு இடுக்கண் கொடுக்க மிகப் பலரும் நினைப்பதால் வேண்டாத குழப்பங்களும், சண்டைகளும் உண்டாகி சமூக அமைதி கெடுகிறது. அவ்வாறு சமூக அமைதியை அல்லது ஒரு குடும்பத்தின் அமைதியைக் கெடுப்பவன் சமூகத்துக்கு ஒவ்வாதவனே.

பொறுமை இழந்து மற்றவனைத் தண்டிப்பதும் அன்றி அவன் மீது கடுஞ் சொல் வீசுவதும் ஒருவனைச் சிறுமைப்படுத்துகிறது என்பதனை மறந்து விடக்கூடாது.

பொறுமை இழந்தவனுக்கு அதனால் கிடைக்கும் பெறுபேறும்—விளைவும்—பாதகமாகவேஅமையும். பொறுத்தார் அரசாள்வார்; பொங்கினார் காடாள்வார் என்பதும் அதனாலேயே.

பொறுமை உடையார் புகழுடையாராவார்; உயர்வுடையோராவார்; நலமுடையோருமாவார்.

# மானுடப் பண்பு விருத்திக்காக புதிய பாடத்திட்டம் அறிமுகம்

தேசியக் கல்வி ஆணைக்குழுவின் புதிய கல்விச் சீர்திருத்த ஆலோசனைகளுக்கமைவாக 1999 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து தரம் 9 வகுப்பு மாணவர்களுக்கு ''வாழ்க்கைத் தேர்ச்சிகள்'' என்னும் புதிய பாடம் அறிமுகப்படுத்தப்படுகின்றது. இப்புதிய பாடம் தொடர்பான அம்சங்களையும் அவற்றின் தேவைகளையும் அனைவரும் அறிந்து கொள்வதும் இசைந்து கொள்வதுவும் இன்றியமையாததாகும்.

கல்வியின் உள்ளடக்கமானது காலத்திற்குக் காலம் மாற்றமடைந்து செல்கின்றது. நாட்டின் தேவை, நாட்டு மக்களின் வாழ்க்கை முறை, கலாசாரம், பண்பாடு என்பவற்றிற் கேற்பவும் சர்வதேச நிலைமைகள், பொருளாதார நிலைப்பாடுகள் முதலானவற்றிற்கு ஏற்பவும் நாட்டின் கல்வி உள்ளடக்கத்தினை அகலமாக்கியும் தெகிழ்வித்தும் நடைமுறைப் படுத்தவேண்டிய கட்டாய நிலை தோன்றியுள்ளது.

பண்டைக் காலக் கல்வியின் உள்ளடக்கத்திற்கும் இன்றைய கல்வியின் உள்ளடக்கத்திற்கும் பாரிய வேறுபாடுகள் உள்ளன.

கல்வியின் இலக்கு — பிள்ளையின் உள இயக்கத்திறன் இயலளவினையும் ஆளுமையினையும் மேம்படுத்துவதாகும். இந்த வகையில் இன்றைய மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் அறிவுசார்ந்தனவும், உள இயக்கத்திறன் சார்ந்தனவுமான ஏராளமான விடயங்களைக் கற்றுக் கொள்ளவேண்டிய நெருக்கடி உள்ளது. இந்நெருக்கடியானது மாணவர்களது ஆளுமை விருத்தியின் முக்கிய கூறான மனப்பாங்கினையும் அதனோடு தொடர்புடைய பண்புசார் விருத்தியினையும் நலிவடையச் செய்துள்ளது. பாடசாலைகளில் இதற்கெனப் போதிய நேரமும் இருப்பதில்லை. இருக்கின்ற வேளைகளில் அதற்கான சந்தர்ப்பங்களும் நிறைவாகக் கிடைப்பதில்லை. பாடசாலைக்குப் புறம்பான நேரங்களிலோ, மாணவர்களது பண்புசார் விருத்தியானது பாதிப்படையக்கூடிய சந்தர்ப்பங்களே அதிகமாகக் காணப்படுகின்றன. மாணவர்கள் வீட்டில் இருக்கின்ற நேரத்தினைக் காட்டிலும் வெளியில் செலவிடும் நேரமே அதிகம். இவற்றின் ஒட்டுமொத்தமான விளைவுகள் யாதெனில் மக்களிடம் சிறந்த ஆளிடைத் தொடர்பின்மையும், மனித உரிமைகளை மதிக்காமை, மனித நேயமின்மை, சகிப்புத்தன்மை குறைவு என்பனவும் முரண்பாடுகள், பூசல்கள், புரிந்துணர்வின்மை, ஆரோக்கியமற்ற போட்டி நிலை, தீய பழக்கவழக்கங்கள். கலாசாரச் சீரழிவுகள் முதலான நச்சுத் தன்மைகள் ஆகியனவும் அதிகரிக்கச் செய்வதே.

இப்பாதகமான விளைவுகளால் பல்வேறு சமூகப் பிரச்சினைகள் முனைப்படைந்துள்ளன. இவைபற்றி உணரப்பட்டதன் காரணமாக இப்போது கல்வி மறுசீரமைப்புக்கான முன்மொழிவுகளினூடாக ''வாழ்க்கைத் தேர்ச்சிகள்'' (Life Competencies) என்னும் புதிய பாடம் அறிமுகம் செய்யப்படுகின்றது. 1999 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் தரம் 9 வகுப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய பாடவிதானத்தில் இந்தப் பாடம் முக்கியமான இடத்தினைப் பெறுகின்றது.

நவீன கல்வியானது நான்கு முக்கியமான தூண்களால் நிலைநிறுத்தப்படுவதாகக் (Four Pillars) கல்வியியலாளர் கூறுகின்றனர்: அவையாவன - கற்கக் கற்றல், செய்வதற்குக் கற்றல், ஆவதற்குக் கற்றல், ஒன்றிணைந்து வாழ்வதற்குக் கற்றல் — என்னும் பொருள் பொதிந்த அம்சங்களாகும்.

இவற்றில் இறுதியாகக் கூறப்பட்ட கூற்று இங்கு முக்கியம் பெறுகின்றது. மக்களின் பண்புசார் விருத்தியினைப் பொறுத்தே அவர்கள் ஒன்றிணைந்து வாழ்வதும் ஒருவரையொருவர் மதித்தலும் சகித்துக் கொள்ளலும் சந்தோஷமாயிருத்தலும் இடம் பெறுகின்றன. இப்பண்புசார் விருத்தியின் அடிப்படையிலேயே 'வாழ்க்கைத் தேர்ச்சிகள்' என்னும் புதிய பாடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வெறுமனே பரீட்சைகளுக்கு மாத்திரம் முக்கியத்துவமளிக்கும் கற்றல் — கற்பித்தல் செயற்பாடுகளினால் கல்வியின் உண்மையான இலக்கினை முழுமையாக அடைய முடியாது. கல்வி இலக்குகள் முழுமையாக அடையப்பட வேண்டுமாயின் மனிதர்கள் ஒவ்வொருவரும் தாம் வளர்த்துக் கொள்ள வேண்டியனவும் பயின்று கொள்ள வேண்டியனவுமான தேர்ச்சிகளைப் பெற்றாக வேண்டும்.

எதிர்காலப் பிரசைகளான இன்றைய மாணவர்களுக்கு இப்புதிய பாடம் ஒரு வரப்பிரசாதமாகும். காலத்தின் தேவையுணர்ந்து ஏற்படுத்தப்பட்ட இப்பாடத்தில் உள்ளடக்கப்பட்ட தேர்ச்சிகளை மாணவர்களுக்கு வழங்குவதில் பாடசாலைகள் முக்கிய பங்காற்ற வேண்டும். ஏனைய பாடங்களைப் போலன்றி இப்பாடமானது மிகுந்த அவதானத்துடனும் பூரணமான

> மாணவர்களிடம் மானுடப் பண்புகளை விருத்தி செய்யும் நோக்குடன் 'வாழ்க்கைத் தேர்ச்சிகள்' (Life Competencies) என்ற புதிய பாடத்திட்டம் ஒன்று இவ்வாண்டு முதல் ஆண்டு 9 வகுப்புக்கு அறிமுகப் படுத்தப் படுகின்றது. ஏனைய பாடங்களை விட முற்றிலும் வித்தியாசமான பண்புகளைக் கொண்டு அமையும் இந்தப் பாடம் பற்றிய ஒரு தகவல் கட்டுரை இது.

ஆயத்தங்களுடனும் போதிக்கப்படுதலும் அவசியமாகும். பெரும்பாலும் மாணவர்களது குழுச் செயற்பாடுகள் இதில் எதிர்பார்க்கப்படுகின்றன.

''வாழ்க்கைத் தேர்ச்சிகள்'' பாடத்தில் நான்கு பிரதான அலகுகள் உள்ளன. முதல் மூன்று அலகுகளிலும் ஒவ்வொன்றிலும் தனித்தனியாக நான்கு உப அலகுகள் காணப்படுகின்றன. நான்காவது அலகில் இரண்டு உப அலகுகள் இருக்கின்றன. வாரத்தில் மூன்று பாடவேளைகள் இப்பாடத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளன. இப்பாட உள்ளடக்கமானது மானுடப் பண்பியல், மனிதநேயம், கூட்டுறவு, சுயமுகாமைத்துவம் தொடர்பான அம்சங்களைக் கொண்டுள்ளது.

முதலாவது அலகில் ''சுயவிளக்கம், தனித்துவம், சுயகௌரவம், இலக்கு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வாழ்க்கை நோக்கினைக் கட்டியெழுப்புவதற்கான தேர்ச்சிகளை மேம்படுத்துதல்'' என்னும் தலைப்பில் உணர்வுகளை வெளிப்படுத்தல், ஏனையோரின் உணர்வுகள், விருப்புக்களுக்கு மதிப்பளித்தல், சமூகத்திலுள்ள நல்லனவும் தீயனவுமான சக்திகளை இனங்காணல், ஆண், பெண் சமத்துவம் பேணல் முதலான அம்சங்களில் நுணுக்கமான கற்றல் — கற்பித்தல் நடைபெறவுள்ளது.

இதே போன்று இரண்டாவது அலகில் [illegible] தொடர்புகள், குழுவுணர்வு என்பன சகிதம் கருமமாற்றத் தேவையான தேர்ச்சிகளை மேம்படுத்திக்கொள்ளல்'' என்னும் தலைப்பின்கீழ் கருத்துப் பரிமாற்றம், ஆளிடைத் தொடர்புகள், ஏனையோரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், கூட்டுறவைப் பேணுதல், வேற்றுமையில் ஒற்றுமை காணுதல், தனியாள் வேறுபாடுகளை விளங்கிக் கொள்ளுதல், முரண்பாடுகளை முகாமை செய்தல் முதலான அம்சங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

மூன்றாவது அலகில் ''வினைத்திறன் மிக்க கற்றல் தேர்ச்சிகளை மேம்படுத்தல்'' என்னும் தலைப்பின் கீழ்

**செ. சேதுராஜா M.Sc. in Ed. Mgt.**

ஒழுங்குபடுத்தல் முகாமைத்துவம், விவேகமான தீர்மானங்களை எடுத்தல், ஆய்வுத் திறன்களை வளர்த்தல், வேறு உசாத்துணைகள் மூலம் அறிவைப் பெறல், திறனாய்வு, விமர்சனம், கற்றல் தேர்ச்சி முதலான அம்சங்கள் இடம்பெறுகின்றன.

நான்காவது அலகானது ''தொழில் வழி காட்டலுக்கான ஆலோசனைகளும் தொழில் தெரிவும்'' என்ற தலைப்பின்கீழ் வாழ்க்கை, தொழில் உலகு, தொழில் தெரிவு, தொழில் மேம்பாடு முதலான அம்சங்களுடனும் கற்றல் — கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

நடைமுறைப் படுத்தப்படவுள்ள இப்புதிய பாடமானது மிகவும் நுணுக்கமானதும் மாணவர்களின் மனப்பாங்கில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடியதுமான கற்றல்—கற்பித்தல் அம்சங்களைக் கொண்டுள்ளது. உளவியல், உலகியல், வாழ்வியல், மானுடப் பண்பியல் தொடர்பான இப்பாட உள்ளடக்க அம்சங்களைக் கற்பிப்பதற்கு மிகவும் தகுதியான, பொருத்தமுடைய ஆசிரியர்களே அமர்த்தப்படல் வேண்டும். பாடவிடயங்கள், மாணவர்களின் நிலை, பாடசாலை, சமூகம் என்பவற்றின் தன்மைக்கேற்ப விடயங்கள் நெகிழ்ச்சியுடன் திட்டமிட்டுக் கற்பிக்கப்படல் வேண்டும். பாட விடயங்களில் ஆசிரியருக்குப் பரந்துபட்ட அறிவும், முற்போக்கான சிந்தனையும், நவீன கல்வியியல் கருத்துக்கள் தொடர்பான நேரக்கணியமான மனப்பாங்கும் இருப்பது அவசியமாகும். இவ்வியல்புகள் பொருந்திய ஆசிரியர்கள் அல்லது இந்த இயல்புகளையும் திறனையும் தம்மில் வளர்த்துக் கொண்டு கற்பித்தலில் ஈடுபடும் திறமை கொண்ட ஆசிரியர்களால் இப்புதிய பாடம் சார்ந்த கற்றல் — கற்பித்தல் நடைபெறுவதற்குப் பாடசாலை அதிபர்கள் ஆவன செய்தல் வேண்டும்.

ஒரு சில மாணவர்களே வெற்றி பெறுகின்ற—பரீட்சைகளைத் துரத்திச் செல்கின்ற—அர்த்தமற்ற — கல்விமுறைகளை விடாப்பிடியாக ஆதரித்து ஈற்றில் ஏமாற்றமடையும் நிலையிலிருந்து விடுபட்டு, எல்லோரும் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்த வல்ல கல்வி மறுசீரமைப்பின் ஆரம்ப நடவடிக்கைகளுக்கு மாணவர்களின் பெற்றோரும் ஆதரவு வழங்குதல் அவசியமாகும். ஆசிரியர்களும், பாடசாலை அதிபர்களும், கல்விக்கள அலுவலர்களும் முற்போக்குடன் வழிகாட்டுதல் வேண்டும். இவை இடம்பெறுமாயின் எமது மாணவர்களின் கல்வியில் நீண்டகாலமாக விடுபட்டிருந்த பல அம்சங்கள் அகப்படும் என்பதில் ஐயமில்லை.

★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். நிலைவரத்தை கொழும்பு அதிகாரிகளுக்கு தெரிவிக்காவிடின் கஷ்டங்கள் தீர்வது எப்படி?

'மலை மீதிலிருந்து மாங்காய்ப் பால் உண்டோருக்கு தேங்காய்ப் பால் ஏதுக்கடி குதம்பாய்' என்பது ஒரு பாடல். ஆனால் குடாநாட்டு மாதரசிகள் இப்போது ஒரு சொட்டுத் தேங்காய்ப் பாலுக்குப் படும் கஷ்டம்... அப்பாடா, சொல்லி மாளாது!

குடாநாட்டில் இப்போது ஒரு தேங்காயின் விலை ஐம்பதிலிருந்து அறுபது ரூபா வரை செல்கிறது. இதனால் பாணுக்குச் சம்பல் வைப்பதற்கும் வழியின்றி பல வீடுகளில் தேநீருடனும் வாழைப்பழத்துடனும் என்று காலத்தைப் போக்குகிறார்கள் மக்கள். பாதித் தேங்காயில் இரண்டு நாள்களுக்குக் கறி சமைக்கப் பழகிக் கொண்டிருக்கிறார்கள் யாழ்ப்பாணத்துப் பெண்கள்!

தேங்காய்க்கு உண்டான தட்டுப்பாட்டைப் பயன்படுத்தி திருடர்கள் இரவு நேரங்களில் மரம் ஏறுகிறார்கள். முட்டுக்காய் அல்லது வழுக்கல் பதமான தேங்காய்களைத் திருடிக் கொண்டு வந்து சந்தையில் காசாக்கி விடுகிறார்கள். பாவம், நுகர்வோர் அவற்றை வாங்கிச் சென்று உடைத்த பின்னரே தாம் ஏமாற்றப்பட்டதை உணர்கிறார்கள்.

தேங்காய் வழுக்கலில் பாலா வரும்? வழுக்கலை விறாண்டிக் குழந்தைகளுக்குக் கொடுத்து விட்டு நேற்றைய பாதியின் மிகுதியைக் கொண்டு ''இப்படியும் இப்போது ஒரு கறி'' என்று புதிய சமையல் பாகம் செய்து விடுகிறார்கள்!

யாழ்ப்பாணத்துப் பெண்களுக்கு தேங்காய்ப் பாலைக் கறந்து தடிப்பாக விட்டுக் கறி சமைப்பதில் ஒரு திருப்தி. அதுவே கறியின் ருசிக்குப் பிரதான மூலப்பொருள் என்று நினைப்பவர்களும் உளர். ஆனால் இப்போது தேங்காய்ப் பாலுடன் தண்ணீரைக் கலந்து கறி சமைக்க வேண்டிய கட்டாயம்.

போர் தொடங்கிய காலத்திற்கு முன்னரும் குடாநாட்டில் மழை காலத்தில் தேங்காய்க்குப் பற்றாக்குறை ஏற்படுவது உண்டு. வீட்டுக்கு வீடு சராசரி பத்துத் தென்னை பயன் தந்த காலத்திலும் வருடத்தில் இரு முறைகளாவது குருநாகல் தேங்காயே கைகொடுப்பது வழக்கம். அப்போது குருநாகலில் இருந்து தேங்காய் லொறி, லொறியாக விரைந்து வந்து குவிந்து விலை உயர்வைத் தடுத்து விடும்; நீக்கி விடும்!

இப்போது... வலிகாமத்து வீடுகளிலும் தென்னை இல்லை; தென்மராட்சியிலும் தென்னைகள் குறைந்து விட்டன; குருநாகல் தேங்காயும் லொறியில் வரமுடியாது என்ற நிலையில் அது ''பொன்விலை'' விற்கிறது!

ஆனால் கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த வடமாகாண புனர்வாழ்வு புனர்நிர்மாண அதிகார சபையின் தலைவர் என். கே. ஒபடகேக்கு தேங்காய் விவகாரம் தெரியாது! அது குறித்துத் தமக்கு இங்குள்ள அதிகாரிகள் எதுவும் அறிவிக்கவில்லை என்றவாறு செய்தியாளர்களிடம் கையை விரித்தார் அவர்!

அதிகாரசபைத் தலைவர் ஒபடகேயே, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமும் ஆவார். ஆனால் யாழ்ப்பாணத்தில் உணவு மற்றும் பாவனைப் பொருள்களுக்கு நிலவும் தட்டுப்பாடு குறித்தோ, தட்டுப்பாடு இல்லாத காலங்களிலும் யானைவிலை, குதிரை விலை, கொடுத்தே மக்கள் பொருள்களை வாங்கவேண்டிய ''கண்றாவி'' குறித்தும் அவருக்கு எதுவுமே தெரியாதாம். இம்மாதம் 18 ஆம் திகதி அவர் யாழ். செயலகத்தில் பத்திரிகையாளர்களுடன் நடத்திய சந்திப்பின்போது அவர் மெல்லிய குரலில் சொன்னார்.

என்னென்ன பொருள்களுக்கு இங்கு தட்டுப்பாடு நிலவுகிறது; என்னென்ன பொருள்கள் என்னென்ன விலைகளுக்கு விற்கிறது என்பதைப் பத்திரிகையாளர்கள் பட்டியலிட்டுக் கூறியபோது, அவை பற்றித் தமக்குத் தகவல் இல்லை என்றவாறு அவர் கூறினார். குடாநாட்டு மக்களின் கஷ்டங்கள், பிரச்சினைகளைக் கூறுங்கள் என்று பத்திரிகையாளரிடமே அவர் திருப்பிக் கேட்டார் என்றால் பாருங்களேன்!

அத்தியாவசிய சேவை ஆணையாளர் நாயகம், வடமாகாண புனர்வாழ்வு, புனர்நிர்மாண அதிகார சபையின் தலைவர் ஆகிய இரண்டு பதவிகளும் வடக்கு மாகாண விவகாரங்களில் முக்கிய இடம் வகிப்பவை. இந்த இரு பதவிகளையும் ஒருவர் வகிப்பது பெரும் வேலைச் சுமையாகத்தான் இருக்கும். ஆனால் இந்த மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள மக்களின் பிரச்சினைகளை அவர் தெரிந்து கொண்டால்தான், உணர்ந்து கொண்டால் தான், புரிந்துகொண்டால்தான் மக்களுக்கு உதவ முடியும்.

ஆனால் கடந்த 18 ஆம் திகதி அவர் யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளரைச் சந்தித்தபோது இங்குள்ள நிலைமைகள் குறித்து எதுவுமே தெரியாதவர் போலக் காணப்பட்டார். குடாநாட்டு மக்களின் கஷ்ட நிலைமை குறித்து இங்குள்ள அதிகாரிகள் தமக்கு எதுவுமே தெரிவிப்பதில்லை என்றவாறே அவர் ''விளங்க'' வைத்துள்ளார்.

அவ்வாறாயின் இப்பகுதி மக்களின் கஷ்டங்களை இங்குள்ள அதிகாரிகள் ஒபடகே போன்ற முக்கியமான அதிகாரிகளுக்குக் கூடச் சொல்லாமல் எல்லாவற்றையும் தங்களுக்குள்ளேயே ''மடக்கிக்'' கொள்கிறார்களா என்ற கேள்வி எழுகிறது.

அங்கொன்றும் இங்கொன்றுமாகவே மக்கள் சேவை செய்கின்றன. அவர்களது பணி ''தெந்தட்டாகவே'' இருக்கிறது எனலாம்.

ஆகையால் குடாநாட்டு மக்களின் அன்றாடத் தேவைகள் மற்றும் வாழ்க்கைப் பிரச்சினைகள் சம்பந்தமான அலுவல்களை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பு அரச அதிகாரிகளையே பெரிதும் சார்கிறது.

அந்தவகையில் இங்குள்ள இல்லாமைகள், கஷ்டங்களை கொழும்புக்கு—சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு—அறியப் படுத்துவது உயர் அதிகாரிகளின் தட்டிக்கழிக்க முடியாதகடமையாக அமைகிறது. பொதுமக்கள் அவர்களிடம் இந்தச் ''சேவை'' யைப் பெரிதும் எதிர்பார்க்கின்றார்கள்.

மக்களின் கஷ்டங்களையும் துன்பங்களையும் உரியவர்களிடம் உடனுக்குடன் சொல்வதோடுமட்டுமன்றி அவற்றைப் போக்குமாறு அங்குள்ள அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்கவும் தெரியவேண்டும்; சாதுரியம் தேவை. குறைபாடுகளை, கஷ்டங்களைத் தெரிவித்துவிட்டோம்; அவற்றைத் தீர்ப்பதற்கான உத்தரவும் தேவைப்படும் வளங்களும் அங்கிருந்துதானே வரவேண்டும் என்று இருந்துவிடக் கூடாது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அடிக்கடி தொல்லை கொடுத்து விடாப்பிடியாக நின்று மக்களின் தேவைகளைப் பெற்றுக் கொள்வதிலும் அக்கறை தேவை. எமது மக்

## மதகுருமார் வன்னி விஜயத்தின் விளைவுகளில் சந்தேகம் உண்டாம்

### சேவை யாருக்காக?

அதிகார சபைத் தலைவர் ''விளங்கக்'' கூறியது போல, குடாநாட்டு மக்களின் பிரச்சினைகள் கொழும்பில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இங்கிருந்து தெரிவிக்கப் படுவதில்லை என்றால் குடாநாட்டு அதிகாரிகள் யாருக்காகச் சேவை யாற்றுகிறார்கள்? தமக்காக, தமது சம்பளத்துக்காகவும், பதவி உயர்வுக்காகவும் மட்டுமா?

பொதுமக்களின் அலுவல்களை நேர் சீராகச் செய்வதில்லை; அக்கறையுடன் செய்வதில்லை. தாமதித்துச் செய்வதும் இழுத்தடிப்பதும் மக்களை அலைக்கழிப்பதுமே குடாநாட்டின் அரச அலுவலகங்களின் வழமையாகி விட்டது என்று ஏற்கனவே அரச அதிகாரிகள், பணியாளர்கள் குறித்துப் பொது மக்கள் தரப்பில் இருந்து பலவகையான முறைப்பாடுகள் உள்ளன.

கடவுள் விடை கொடுத்தாலும் பூசாரி விடை கொடாத நிலையில் உள்ளூர் அதிகாரிகள் தமக்குள்ள அதிகாரங்களை வைத்துக் கொண்டு தங்களை ஆட்டிப் படைப்பதாக மக்கள் பல சந்தர்ப்பங்களில் முறைப்படுகிறார்கள்.

அந்தக் குற்றச்சாட்டுக்களும், முறைப்பாடுகளும் ஒரு புறமிருக்க அதிகார சபைத் தலைவர் ஒபடகே மறைமுகமாகத் தெரிவித்த குற்றச்சாட்டுக்கு இங்குள்ள அதிகாரிகள் என்ன பதில் சொல்லப்போகிறார்கள்? இந்தக் குற்றச்சாட்டு மிகவும் பாரதூரமான ஒன்றாகும்.

இப்போது யாழ்ப்பாண மக்களைப் பொறுத்தவரையில் அவர்களின் கஷ்டங்களையும், இங்கு உருவாகும் குடியியல் சார்ந்த பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கும் பொறுப்பு அனேகமாக சிவில் நிர்வாக அதிகாரிகளுக்கே உண்டு.

குடாநாட்டு மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய, அவர்களின் சகல துறைப் பிரச்சினைகளையும் கையாண்டு உதவக் கூடிய உறுதியான அரசியல் தலைமைத்துவம் இங்கு இல்லை. [illegible] செயற்பட்டாலும் [illegible] வெவ்வேறு வழிகளில், தத்தமது போக்கில் நடந்து கொண்டிருக்கின்றன.

களின் தேவைகளை நிறைவேற்ற இயன்றளவு பணி செய்யும் மனநிலையும் விருப்பமும் இதற்கு அவசியம்.

அதிகார சபைத் தலைவர், முறையின் பிரகாரம் இங்குள்ள பிரச்சினைகளை, குறைகளை அறிந்து கொள்வதில் தமது தரப்பில் இருந்தும் ஆர்வம் காட்டவேண்டும். அப்போதுதான் அவர் தனது பணியைச் சரிவர ஆற்றமுடியும். ஆனால் இப்பகுதி மக்களின் கஷ்டங்கள் இங்கிருந்துமட்டுமே வரவேண்டும் என்று நினைப்பாராயின் என்ன செய்யமுடியும்?

எனினும் குடாநாட்டின் நிலைவரம், தேவைகள் குறித்து யாழ். அரச அதிபர் கொழும்பில் உள்ள சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு மாதாந்தம் அறிக்கை சமர்ப்பிக்கிறார் என்பதும்—

## உள்ளும் புறமும்

குறுமுனி

கொழும்பில் தாம் கலந்து கொள்ளும் மாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும் யாழ். மக்களின் கஷ்டங்களையும் துன்பங்களையும் அறிக்கை வடிவில் கையளிக்கிறார் என்பதும் உண்மை. அவ்வாறிருக்க தமக்கு எதுவும் தெரியாது என்றவாறு ஒபடகே கூறியது ஆழமாக ஆராயப்படவேண்டியதாகும். பிரச்சினைகளைத் தட்டிக் கழிக்கும் போக்கு அவருக்கும் மேலிருந்து பாய்ச்சப்பட்டதா இல்லையா என்பது கண்டறியப்பட வேண்டும். அப்போதுதான் அதிகாரசபை என்ன நோக்கத்துடன் இயங்குகின்றது என்பது தெரிய வரும்!

★ ★ ★

இந்தியத் தொலைக்காட்சியான தூரதர்ஷனில் 'ஜெய்ஹனுமான்' [illegible] ஒளிபரப்பாகி [illegible] இராமாயணத்தின் ஒரு பகுதி படமாக்கப்பட்டிருக்கிறது. அண்மையில் நடந்த கும்பகர்ணன் வதைப் படலத்தை பார்த்த சிறுவர்கள் சிலருக்கு அதில் வந்த காட்சியைப் பார்த்த பின்னர் பயத்தினால் காய்ச்சல் கண்டதாம். ஏன், பெரியவர்களே திகிலடைந்து இத்தகைய காட்சிகளைத் தவிர்க்கக் கூடாதா என்று பேசிக்கொண்டார்கள்.

இராமன் தொடுத்த அஸ்திரத்தினால் கும்பகர்ணனின் தலை சீவப்பட்டு, இராவணனின் அரண்மனைப் பகுதியில் போய் விழுகிறது. தலை இல்லாத முண்டம் போர்க்களத்தில் கிடந்து துடிக்கிறது. யாழ்ப்பாண நகரில் மையப்பகுதியில் துண்டிக்கப்பட்ட தலை ஒன்று வீதியில் கிடப்பதாக வெளிவந்த செய்தியைப் படித்ததும் தூரதர்ஷனில் கும்பகர்ணன் வதைக்கப்பட்ட கோரக் காட்சிதான் அதனைப் பார்த்தவர்களுக்கு உடனே நிழலாடியிருக்கும்.

தொலைக்காட்சிப் படத்தில் இப்படி ஒரு காட்சியா என்று விமர்சித்தவர்கள் இத்தனை நூற்றாண்டுகளுக்குப் பிறகு அதேபோன்ற ஒரு காட்சியை, துண்டிக்கப்பட்ட தலையை, யாழ்ப்பாண நகரத்தில், (திரைப்படத்தில் அன்றி) நேரில் காண நேர்ந்தது—கடந்த செவ்வாய்க்கிழமை.

முண்டம் எங்கேஎன்று தெரியாத நிலையில் (அது புதைக்கப்பட்டதா அல்லது எரிக்கப்பட்டதா என்பதனைப் பொலீஸார் தான் கண்டுபிடிக்க வேண்டும்) மக்கள் பார்வைக்கு அந்த மனிதத்தலை வைக்கப்பட்டிருந்தது.

திங்களன்று இரவு கஸ்தூரியார் வீதி — ஆஸ்பத்திரி வீதி முடக்கில் காணப்பட்டதாகச் சொல்லப்பட்ட துண்டிக்கப்பட்ட தலை, செவ்வாய் காலை 6.30 மணிக்கு அங்கு காணப்படவில்லை. ஆனால் பின்னர் அது அருகில் உள்ள ''கானில்,' இருக்கக் காணப்பட்டது.

குடாநாட்டில் இப்போது கைது செய்யப்படுவோர் காணாமற் போவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. முன்னர் காணாமற் போனோர் குறித்துப் படையினர் மீது மட்டுமே மக்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. ஆனால் இப்போது இங்குள்ள தமிழ்க் கட்சிகள் மீதும் சந்தேகம் கொள்கிறார்கள்.

இவற்றை யார் செய்கிறார்கள், எதற்காகச் செய்கிறார்கள் என்பது சம்பந்தமான உண்மை அவர்கள் தரப்பில் இருந்தே வெளிவரும் வரை கும்பலில் கோவிந்தா என்ற நிலையில் இளைஞர்கள், யுவதிகள் காணாமற் போவது மேலும் அதிகரித்து விடுமோ என்ற அச்சம் குடாநாட்டு மக்களிடம் பரவியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

தமிழ்க் கட்சிகளாக மாறியுள்ள முன்னாள் இயக்கங்கள் தமக்கிடையே மோதிக் கொண்டு சாவது கண்டே மக்கள் கவலைப்பட்டார்கள். கருத்து மோதல்கள், கரும மோதல்கள் வேறு. ஒரு தரப்பினரை அடுத்த தரப்பினர் கொல்வது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் அடிபட்டுச் சாவது போலாகும்.

பெரும் ஈனச் செயலாகக் கருதப்பட்ட கொலை இவ்வாறு சர்வ சாதாரணமாகி விட்டால் எங்கள் சமூகம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது? எங்கே முடியப் போகிறது? இவர்கள் தாமாக உணர்ந்து இத்தகைய கொலைகளை நிறுத்துவது எப்போது? சகோதரத்துவத்தை எப்போது உருவாக்குவார்கள்? — என்றெல்லாம் மக்கள் தமக்குள் பேசிக் கொள்கின்றனர்; பரஸ்பரம் கேட்டுக் கொள்கின்றனர்.


இம்மாதம் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காணாமற்போன, கரவெட்டி, கன்பொல்லையில் வசித்த 23 வயது இளைஞன் இராஜரத்தினம் இராஜேஸ்வரனின் தலையே யாழ். நகரில் செவ்வாய்க்கிழமை வைக்கப்பட்டிருந்தது என்று இனங் காணப்பட்டுள்ளது. இவர் முன்னர் புடைவைக் கடை ஒன்றில் பணி புரிந்தார் என்று விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

இதே போல, யாழ். நகருக்கு வந்த போது காணாமற்போன ''மெக்கானிக்'' தொழில் புரிந்த

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளாலி கடற்சமர்




# அமெரிக்கப் பயிற்சி பெற்ற அணி மீது விழுந்த அடியா?

வார விமர்சனம்

மறுபக்கம்

நல்லூர் தாஸ்

கடற்புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை கடற்படையினர் அண்மைக் காலமாகத் தீவிரப்படுத்திவருவது குறித்து கடந்தவாரம் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். கடற்படையினரின் சமீபத்திய வெற்றிகள் கடற்புலிகளின் கடற்போக்குவரத்து நடவடிக்கைகளில் சிறிது பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாக பாதுகாப்பு ஆய்வாளர்கள் மத்தியில் நிலவும் அவதானிப்புக் குறித்தும் அந்தப் பத்தியில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்தப்பத்தி அச்சாகிக் கொண்டிருந்த சமயம் கிளாலிப் பகுதியில் உள்ள சிறிய கடற்படைத் தளம் ஒன்று கடற் புலிகளின் 'சிறுத்தை அணியின்' தாக்குதலுக்கு இலக்கானது.

சிறிது கால இடைவெளிக்குப் பிறகு கடலில் புலிகள் தங்கள் கைவரிசையைக் காட்டியிருக்கின்றனர். இந்தத் தாக்குதல் புலிகளுக்குப் பெரும் வெற்றியாக அமைந்துவிட்டது. சுமார் 63 லட்சம் ரூபா பெறுமதியான 'வோட்டர் ஜெற்' படகு ஒன்றை அதிலிருந்த சில நவீன உபகரணங்களுடன் தாங்கள் கைப்பற்றிவிட்டதாக புலிகள் அறிவித்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் மற்றொரு 'வோட்டர் ஜெற்' படகு பலத்த சேதமடைந்துள்ளதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் 'வோட்டர் ஜெற்' படகை புலிகளிடம் இழந்துவிட்டதாக கடற்படையினர் ஒத்துக்கொள்ளவில்லை. 'சண்டையின்போது சேதமடைந்த அந்தப்படகு பின்னர் கிடைத்த தகவல்களின்படி மூழ்கிவிட்டதாகத் தெரிய வருவதாக' பலாலி இராணுவ தலைமையகத்தில் இருந்து வெளியான செய்திக் குறிப்பு தெரிவித்தது.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பூநகரிப் பகுதியில் இருந்து சுமார் எட்டு அல்லது பத்து படகுகளில் வந்த புலிகள் குடாக்கடல் நீரேரி ஊடாக குடாநாட்டுக்குள் ஊடுருவுவதற்காக கிள்ாலிப்பகுதியில் உள்ள சிறிய படைத் தளம் மீது தாக்குதல் தொடுத்ததாகவும் -

கடல் நீரேரியில் இரவு ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த இரு 'பி-174' ரக 'வோட்டர் ஜெற்' படகுகள் உடனடியாக விரைந்து பதிலடி கொடுத்து புலிகளை விரட்டியதாகவும்-

கடற்படைப் பேச்சாளர் ஒருவர் செய்தித் தொடர்பு சாதனங்களுக்குத் தெரிவித்தார்.

அதிகாலை சுமார் ஒரு மணியளவில் ஆரம்பித்த இந்தச் சமரில் கடற்படையினருக்கு தரையில் இருந்து இராணுவத்தினரும் உதவி வழங்கியுள்ளனர். அதிகாலை 3 மணி வரை - மூன்றுமணி நேரத்துக்கு - இந்தக் கடற்சமர் நீடித்ததாகத் தெரிகிறது. புலிகளின் படகுகள் மீது ராடர்களின் உதவியுடன் ஆட்டிலறி ஷெல் தாக்குதல்களை இராணுவத்தினர் மேற்கொண்டதாகவும் மூன்று மணிநேரத்தின் பின் கடல் ஏரிப்பகுதியில் இருந்து கடற்புலிகளை முற்றாக விரட்டி விட்டதாகவும் கடற்படை வட்டாரங்கள் கூறியுள்ளன.

புல்மோட்டை, முல்லைத்தீவு, நெடுந்தீவு மேற்கு கடற்பகுதிகளில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற மூன்று வெவ்வேறு சம்பவங்களில் கடற்படையினர் புலிகளுக்கு இழப்புக்களை ஏற்படுத்தி இருந்தனர். இந்த மூன்று நடவடிக்கைகளும் கடற்படையினருக்கு உற்சாகம் தருவதாய் அமைந்தன. கடற்படையினர் ஈட்டிய இந்த வெற்றிகள் குறித்து கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிசில் திசேரா கடந்த 16 ஆம் திகதி தேசிய பாதுகாப்புச் சபையிடம் அறிக்கை ஒன்றை பெருமிதத்துடன் சமர்ப்பித்தார் எனக் கூறப்படுகிறது. ஆனால் அடுத்து வந்த இரண்டாம் நாள் கிளாலியில் இடம்பெற்ற சம்பவம் கடற்படை வட்டாரங்களுக்கு அதிர்ச்சி அளிப்பதாகவே அமைந்துவிட்டது.

கிளாலி சம்பவம் தொடர்பாக யாழ் மாவட்ட லொஹான் குணவர்த்தன, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரியாவுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார். பாதுகாப்பு நிலைவரங்கள் தொடர்பாக ஜனாதிபதியிடம் நாளாந்தம் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையிலும் இந்தச் சம்பவம் குறித்து விரிவான தகவல் உள்ளடக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அறிக்கையில் 'ஒரு வோட்டர் ஜெற் படகையும், ஒரு கடற்படைச் சிப்பாயையும் காணவில்லை' என்று தெரிவிக்கப்பட்டிருந்ததாக கொழும்பு பாதுகாப்பு ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சேதமடைந்த 'வோட்டர் ஜெற்' மூழ்கிவிட்டதாக கடற்படையினர் தெரிவித்த போதும் சம்பவம் நடைபெற்ற கடற்பகுதியின் அடியில் பின்னர் மேற்கொண்ட தேடுதலின் போது படகு மூழ்கியதற்கான எந்த அடையாளங்களும் தென்படவில்லை என்றும், ஜீ.பி.எம்.ஜி துப்பாக்கி ஒன்றையும், கிரனேட் ஒன்றையுமே கடலின் அடியிலிருந்து சுழியோடிகளால் மீட்க முடிந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரத் தகவல்களில் இருந்து தெரியவந்துள்ளது.

குடாக்கடல் ஊடான புலிகளின் ஊடுருவல்களை முறியடிப்பதில் படைத் தரப்பினர் கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றனர். (இதுகுறித்து ஏற்கனவே வெளியாகிய இப்பத்திகளில் குறிப்பிடப்பட்டிருந்து) வன்னிப்பெருநிலப் பரப்பையும் குடாநாட்டையும் பிரிக்கும் இந்த ஒடுங்கிய கடல் நீரேர்ப்பகுதி குடாநாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. எனவே

கான விநியோகங்களுக்குக் கடற்புலிகள் தொடர்ந்தும் சவாலாக விளங்கிவருகின்றனர். இலங்கையின் புவியியல் அமைவிடத்தின்படி பலமான கடற்படை அணிகளின் செயற்பாட்டின் மூலமே விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்க முடியும் என்ற கருத்து சில அரச பாதுகாப்பு ஆய்வாளர்களிடையே இருந்து வருகிறது. புலிகள் தமது சர்வதேச தொடர்புகளுக்கும், ஆயுதக்கடத்தலுக்கும் கடல் மார்க்கத்தையே பயன்படுத்தி வருகின்றனர். கடல் வழித் தொடர்பை முற்றாகத் துண்டிப்பதன் மூலம் புலிகளைப் பெரும் நெருக்கடிக்குள் சிக்க வைக்கலாம் என்பது அவர்களின் நம்பிக்கை. ஆனால் கடற்படையினரோ அதைச்சாதிக்க முடியாத நிலையில் இருந்துவருகின்றனர்.

கடற்படையினருக்கு நவீன பயிற்சி அளித்து தாக்குதல் நடவடிக்கைகளில் நவீன உத்திகளைக் கையாண்டு புலிகளைக் கடலில் தோற்கடிக்கச் செய்யும் நோக்குடன் அமெரிக்க கடற்படையின் கொமாண்டோ உதவியை இரண்டு ஆண்டுகளுக்கு முன் அரசு நாடியது. அதன்படி அமெரிக்கக் கடற்படையின் அதி முக்கிய அதிரடிப் பிரிவான "அமெரிக்க நேவி சீல்ஸ்" (U.S.A. NAVY SEALS) அணியைச் சேர்ந்த நிபுணர்கள் இலங்கைக்கு வந்து கடற்படையின் அணிகளுக்கு விசேட பயிற்சியளித்து வந்தனர். காலியில் இதற்கென ஒதுக்கப்பட்ட பயிற்சித் தளத்தில் கடந்த இரு ஆண்டுகளாக இந்தப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. அமெரிக்கக் கொமாண்டோ அணியிடம் பயிற்சி பெற்ற கடற்படை அணி 'ஸ்பெசல் போட் ஸ்குவர்டன்'(SPECIAL BOAT SQUARDAN) என

இந்தக் கடற்பகுதியில் புலிகளின் நடவடிக்கைகளை முறியடிக்கும் பாரிய பொறுப்பு கடற்படைக்கே உரியது. புலிகளின் படகு நடமாட்டங்களை இரவிலும் சரி, பகலிலும் சரி இலகுவில் அடையாளம் கண்டுவிடக்கூடிய நவீன ராடர் வலைப்பின்னல் வசதி குடாக்கடல் கரையோரங்களில் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

இரண்டாம் ஈழப்போர் காலத்தில் விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் பிரிவு வியத்தகு வகையில் பலம்பெற்று வளர்ந்தது. ஸ்ரீலங்கா கடற்படைக்கு எதிராக அடுத்தடுத்து கடற்புலிகள் மேற்கொண்ட தாக்குதல்கள் இராணுவ நடவடிக்கைகளில் அரசுக்கு பலத்த பின்னடைவை ஏற்படுத்தியது.

கடற்கரும்புலிகளும் கடற்புலிகளின் ஏனைய அணிகளும் கடலில் புரிந்த சாதனைகள் உலகில் பலம்பொருந்திய கடற்படையைக் கொண்ட கெரில்லா அமைப்பு என்ற பெருமையை புலிகள் பக்கம் சேர்த்தது.

அழைக்கப்படுகிறது. சுருக்கமாக இதை 'எஸ்.பி.எஸ்.' எனக் குறிப்பிடுவர். இந்த அணி அமெரிக்காவின் "நேவி சீல்ஸ்" பிரிவுக்கு ஒப்பானது.

இவர்களுக்கென விசேட கடற்கலங்கள், கடல் பாதுகாப்புச் சாதனங்கள், ஆயுதங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

அமெரிக்க நிபுணத்துவப் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறிய இந்த எஸ்.பி.எஸ் கடற்படை அணியினர் வடக்கில் கிளாலி கடற்பகுதியில் தங்கள் முதலாவது தளத்தை அண்மையில் நிறுவியதாக தெரிய வருகிறது. ஆனால் அந்தக் கடற்படைத்தளமே கடந்த 18 ஆம் திகதி புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானதாக தற்போது தகவல் வெளிவந்துள்ளது.

கேந்திர முக்கியத்துவம், மற்றும் புவியியல் முக்கியத்துவம் கருதி எஸ்.பி.எஸ் அணியின் முதலாவது தளம் யாழ் குடாக்கடல் நீரேரியை

கூறப்படுகிறது.

கிளாலிக்கடல் நீரேரியில் கடற்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இந்த எஸ்.பி.எஸ் அணி சிக்கியமை கடற்படை வட்டாரங்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. அத்துடன் அணிக்குப் பயிற்சியளித்த அமெரிக்க நிபுணர்களையும் ஆச்சரியத்துக்கு உள்ளாகி விட்டது. கடற்படையினரின் எஸ்.பி.எஸ் அணியின் தளம் மீது விழுந்த இந்த முதல் அடியை இலங்கை யுத்தத்தில் அரச படையினருக்குப் பயிற்சிகளை வழங்கிவரும் அமெரிக்காவின் நடவடிக்கைக்கு எதிராக விழுந்த அடியாகவும் கொள்ளலாம் என்று கொழும்பில் உள்ள பாதுகாப்பு ஆய்வாளர் ஒருவர் இதுபற்றிக் கருத்துக்கேட்ட போது குறிப்பிட்டார்.

இலங்கைக் கடற்படையினருக்கு "அமெரிக்க நேவி சீல்ஸ்" அதிரடிப்படைப்பிரிவு பயிற்சி வழங்குவது தொடர்பான தகவல்களை இந்தியா மிக உன்னிப்பாக அவதானித்து வந்துள்ளது. ஆனால் இது தொடர்பான முழு விவரங் களையும் கொழும்பு அரசு புதுடில்லிக்கு தெரியப்படுத்தாமல் விட்டிருப்பதாகவும் -

இந்தியப் பாதுகாப்பு வட்டாரங்களில் இது கசப்புணர்வை உருவாக்கியதாகவும் தெரிய வருகிறது.

"அமெரிக்க நேவி சீல்ஸ்" அணியிடம் பெற்ற பயிற்சியின் அனுபவத்துடன் இலங்கைக் கடற்படையினர் தங்கள் நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட்டனர். கடற் புலிகளுக்கு எதிரான அவர்களின் நடவடிக்கைகள் மூலம் கிடைக்கும் பெறுபேறுகளை தமது அனுபவங்களாகப் பெற்றுக்கொள்வது அமெரிக்க நிபுணர்களின் நோக்கங்களில் ஒன்று என்று பாதுகாப்புச் செய்திவட்டாரத் தகவல்கள் மூலம் அறியவருகின்றது.

இந்தவகையில் கிளாலியில் எஸ்.பி.எஸ். கடற்படை அணிக்கு ஏற்பட்ட அனுபவம் அமெரிக்க நிபுணர்களுக்கு ஏற்பட்ட மோசமான அனுபவமாகவும் இருக்கக்கூடும்.

தாக்குதல் நடந்த சமயம் தளத்ததில் தங்கியிருந்த எஸ்.பி.எஸ். வீரர்களிடம் நவீன கடற் சாதனங்கள் இருந்துள்ளன. இருட்டிலும், நீருக்கடியிலும் நடமாட்டங்களை துல்லியமாகக் கண்டறியக்கூடிய பார்வை சாதனங்களும் அவர்கள் வசம் இருந்துள்ளன. அவ்வாறாயின் பூநகரிக் கரையிலிருந்து புலிகளின் படகுகள் புறப்பட்ட மறுகணமே அந்த நகர்வு குறித்து படையினருக்கு தெரியவந்திருக்க வேண்டும். ஆனால் புலிகளின் படகுகள் கடலில் நீண்டதூரம் முன்னேறி கடற்படைத்தளம் மீது ஆர்.பி.ஜி. கிரனேட் லோஞ்சர்கள் மற்றும் சிறு பீரங்கிகள் மூலம் தாக்குதல் தொடுக்கும் வரை எஸ்.பி.எஸ். அணியினருக்கு தகவல் தெரியவராமல் போனது எப்படி?

தெற்குப் பாதுகாப்பு விமர்சகர்கள் எழுப்பியுள்ள கேள்வி இது.

"சிறுத்தை அணியினர்" மேற்கொண்ட கிளாலித்தாக்குதல் அங்குள்ள எஸ்.பி.எஸ். தளத்தை இலக்கு வைத்தா அல்லது கடற்படையினரின் "வோட்டர் ஜெற்" படகுகளை இலக்கு வைத்தா நடத்தப்பட்டது என்பது தெரியவில்லை. கடற்படைத் தளத்தின் மீது தாக்குதல் நடத்த முயன்ற புலிகளின் படகுகளையே "வோட்டர் ஜெற்" படகுகள் வழிமடக்கித் தாக்கியதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மோதலின் போது பலத்தசேதமடைந்த பி-174 "வோட்டர் ஜெற்" படகை பூநகரிக்கரையில் இருந்து வந்த கடற்புலிகளின் மற்றொரு அணியே கைப்பற்றிக் கொண்டு சென்றதாக வன்னி வட்டாரத் தகவல்கள் மூலம் தெரிய வருகிறது.


எதிர்பாராத விதமாக "வோட்டர் ஜெற்" படகை கைப்பற்றும் சந்தர்ப்பம் கிடைத்ததால் புலிகள் தங்கள் தாக்குதல் திட்டத்தை இடையில் மாற்றிக்கொண்டு பின்வாங்கி இருக்கக் கூடும் என சில வட்டாரங்கள் கருதுகின்றன.

"பி-174 " படகு கடற்படையினர் இழந்த 6 ஆவது "வோட்டர் ஜெற்" படகு ஆகும். பூநகரி - நாகதேவன்துறை கூட்டுப்படைத்தளம் மீது புலிகள் 1993 இல் மேற்கொண்ட "தவளைப் பாய்ச்சல்" தாக்குதல் நடவடிக்கையின்போது ஸ்ரீலங்கா கடற்படை ஐந்து "வோட்டர் ஜெற்" படகுகளை இழந்தது குறிப்பிடத்தக்கது.

ஆழங்குறைந்த கடற்பகுதிகளில் வேகமாகச் சென்று தாக்குதல்களை நடத்தக்கூடிய "வோட்டர் ஜெற்" படகு ஒன்றின் பெறுமதி சுமார் 63லட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் மேலும் பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான விமான எதிர்ப்பு ரகத்தைச் சேர்ந்த வலுவுள்ள துப்பாக்கி மற்றும் இரவு,பகல் தொலைநோக்கு சாதனங்கள், இரவுப் பார்வைக் கண்ணாடிகள், கடற்படை அங்கிகள் என்பனவும் அதில் இருந்துள்ளன. அவை அனைத்தும் கடற்புலிகள் வசம் சிக்கி உள்ளன. அத்துடன் கடற்படை விசேட பொறியியல் பிரிவைச்சேர்ந்த ஹேவவாசம என்பவரின் சடலத்தையும் புலிகள் கைப்பற்றியுள்ளனர். மிகவும் உருக்குலைந்து காணப்பட்டதால் அச்சடலத்தை உரிய மரியாதைகளுடன் அடக்கம் செய்து விட்டதாகப் புலிகள் அறிவித்துள்ளனர். நடவடிக்கையின்போது இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மருத்துவ பீடத்தைக் காப்போம்!



இருபது ஆண்டுகள் நிறைவை பூர்த்தி செய் திருக்கும் எமது யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் வளர்ச்சி இன்றும் மிகவும் மந்தநிலை யில் இருப்பது மிக வேதனைக்குரிய விடயம் ஆகும்.

எமது மருத்துவபீடம் பாரதூரமான நிலையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது என்பதனை எங்கள் முழுச்சமுதாயத்தினதும், பழைய மாணவர்களினதும் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றோம்.

கடந்த பல வருடங்களாக பல பிரச்சினைகளை சந்தித்த நாம் இன்று மருத்துவ பீடத்தையே மூடவேண்டிய நிலைக்கு எம்மைத் தள்ளும் கட்டத்தை படிப்படியாக அடைந்து கொண்டிருக்கின்றோம் என்பதனை பார்க்கும் போது மிகவும் மனவேதனையாக உள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையிலும், மருத்துவபீடத்திலும் உள்ள வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பற்றாக்குறையே இதற்குக் காரணமாகும்.

1988 ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலே ஏற் பட்ட ஒரு பூதாகரமான பயமுறுத்தலின் பின்னர் இடைக்காலங்களில் ஓரளவு செம்மையாக பல இடையூறுகளின் மத்தியில்

> "மருத்துவ பீடத்தினைக் காப்போம்" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக் கழக மருத்துவ மாணவர் ஒன்றியம் அனுப்பி வைத்த கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

இயங்கிய எமது மருத்துவபீடம், யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட இடம் பெயர்வால் சிறிது காலம் இயங்காமல் மூடப்பட் டிருந்தது யாவரும் அறிந்ததே.

இதன் பின்னர் 1996 ஜனவரி 15 ஆம் திகதி மீண்டும் திறக்கப்பட்ட எங்கள் மருத்துவ பீடம் அதன் பின்னர் பல பற்றாக்குறைகளை தன்னகத்தே கொண்டு ஆமை வேகத்தில் நகர்கின்றது. இந் நிலை தொடருமானால் எமது மருத்துவபீடம் மீண்டும் ஆபத்தான சூழ்நிலையை நோக்கித் தள்ளப்படும் என்பதில் ஐயமில்லை.

முன்னைய காலப்பகுதிகளிலே எமது பழையமாணவர்கள் (தற்போதைய வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள்) "யாழ்.மருத்துவ பீடத்தினை பாதுகாப்போம்" என்னும் தொனியை முன்நிறுத்தி பல பிராசர நடவடிக்கைகளில் முன்னின்று செயற்பட்டனர்.

தற்போதைய சூழ்நிலையிலும் எமது மருத்துவபீடத்தினை காக்கும் முக்கிய பொறுப்பு எமது பழைய மாணவ, மூத்த சகோதரர்கள் கையிலேயே உள்ளது என்பதில் எள்ளள வேனும் ஐயமில்லை. இவர்கள் தாங்களாகவோ, அல்லது தாங்கள் அறிந்தவர்கள் மூலமாகவோ இப்பிரச்சினையை அணுகினால் இப்பிரச் சினைகள் இருந்த இடம் தெரியாமல் மாயமாக மறைந்துவிடும் என்பது திண்ணம்.

எமது மருத்துவ மாணவர் ஒன்றியம் யாழ். போதனா வைத்தியசாலையிலும் மருத்துவ பீடத்திலும் உள்ள பற்றாக்குறைகளை இயலுமான அளவில் நிவர்த்தி செய்து எமது மாணவர் சமுதாயம் ஒரு சிறந்த வைத்தியர்கள் -- கல்விமான்கள் -- ஆக வெளியேற தன்னாலான முயற்சிகளை செய்வதில் அக்கறையும் உறுதியும் கொண்டு செயற்பட்டு வருகிறது. இதற்கு முதற்கட்டமாக எமது பழைய மாணவர்களும் தற்போது பல்வேறு இடங்களில் மருத்துவ சேவையில் தம்மை அர்ப்பணித்து உன்னத சேவையாற்றுபவர்களுமாகிய எம் சகோதரர்களை ஒன்றிணைத்து ஒரு பழைய மாணவர் சங்கம் ஒன்றினை அமைப்பதில் முன்னின்று செயற்படுகின்றது. இதன் மூலம் மருத்துவ மாணவர்களுக்கும் பழைய மாணவர்களுக்கும் இடையேயான ஓர் நெருங்கிய உறவுப் பாலத்தினை ஏற்படுத்த விரும்புகின்றது. எமது பழைய மாணவ சகோதர, சகோதரிகள் எங்கள் கனவு நனவாக பேராதரவு தருவார்கள் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

எமது மருத்துவ பீட நிகழ்வுகள், கஷ்டங்கள், தேவைகள் குறித்து பழைய மாணவர்களுக்கு, எமது சமுதாயத்தினருக்கு, நமது மக்களுக்கு தெரியாமல் இருக்கலாம். அவர்கள் மத்தியில் எமக்குக் கருணை காட்ட -- எமது மருத்துவபீடம் காப்பாற்றப்பட -- எங்கள் மருத்துவ பீடம் தொடர்ந்து தனது சக்திகளை வெளிப்படுத்தி கம்பீரமாக வீறுநடை போட உதவும் உள்ளங்கள் எத்தனையோ இருக்கலாம். இவ்வாறான சேவை மனப்பாங்குடைய சமுதாய சிந்தனையாளர்களை எமது மருத்துவ மாணவர் ஒன்றியம் மாணவர் சார்பாக அன்புடன் வரவேற்கின்றது என்பதை வெளிக்காட்டுவதே இச் செய்தியின் முக்கிய நோக்கமாகும். நாங்கள் அவர்கள் வரவிற்காக மண்டியிட்டு வேண்டுகின் றோம். அவர்களுக்கு வேண்டிய சகல வசதி களையும் எமது மாணவ சமுதாயம் முன்னின்று செய்யும் என உறுதி கூறுகின்றோம்.

மருத்துவ பீடத்தில் மிகவும் அவசியமான பல வெற்றிடங்களை எங்கள் மருத்துவர்கள் தாமாக மனமுவந்து வந்து நிரப்புவார்கள் என்பது எங்களின் உறுதியான நம்பிக்கை. எங்கள் யாழ்ப்பாண மருத்துவ பீடத்தின் நோக்கமும், திறமையும் மிகப் பரந்தது. இத்தனை காலப் பகுதியில் (20 ஆண்டு காலத்தில்) 12 மாணவ அணியினரை பல்வேறு இடர்களின் மத்தியிலும் தலை சிறந்த வைத்தியர்களாக மாற்றி, எமது மக்களுக்கான மருத்துவர்கள் பற்றாக்குறையை ஓரளவு நீக்கி, நம் நாட்டிற்கு (குறிப்பாக வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கு) -- உன்னத சேவையாற்ற அவர்களை உருவாக்கித் தந்த பெருமை எங்கள் மருத்துவ பீடத்திற்கு உரியது என்றால் அது மிகையாகாது. தற்பொழுது 7 மாணவ அணியினர் யாழ் மருத்துவ பீடத்தில் பயின்று கொண்டிருக்கிறார்கள். வருடா வருடம் சுமார் 100 மருத்துவ மாணவர்கள் புதிதாக அனுமதி பெறுகின்றார்கள். அவர்கள் நற்பண்பும் சேவை மனப்பான்மையும் பொறுப்புணர்ச்சியும் உடைய மருத்துவர்களாக வளர்க்கும் எங்கள் மருத்துவ பீடமானது நம் நாட்டு மக்களின் பெறுமதி வாய்ந்த சொத்துக்களுள் ஒன்றாகும். எனவே இதனைப் பேணி வளர்க்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

எங்கள் மருத்துவ பீடத்தில் அவசரமாக நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களை அறிந்து அவற்றை நிரப்ப நீங்கள் உதவுவீர்களானால் நாங்கள் என்றென்றும் உங்களுக்கு நன்றி உடையவர்களாக இருப்போம். இவை பற்றிய ஆலோசனைகள், கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்து கொள்வீர்கள் என நம்புகின்றோம்.

சாதி,மத பேதமின்றி மனித குலத்தின் பிணிகளை களைந்தெறிந்து, துயர் துடைப் பதைக் குறிக்கோளாகக் கொண்ட மருத்துவ விஞ்ஞானத்தை பேணும் எங்கள் மருத்துவ பீடத்தில் உங்களுக்குள்ள அக்கறைக்கும், நீங்கள் தரும் ஆதரவிற்கும், மாணவர்களாகிய நாம் எமது மருத்துவ மாணவர் ஒன்றியத்தின் சார்பில் நன்றி கூறுகின்றோம். நீங்களும் எங்களுடன் சேர்ந்து இந்த முயற்சியை வெற்றியாக்கும் நாள்களுக்காக நாங்கள் காத்திருக்கின்றோம்!

## பரத நாட்டிய நிகழ்வு

கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் இணைத்து கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் அண்மையில் நடத்திய நடன நிகழ்ச்சியில் இங்கே காண்கின்றீர்கள்.

கலாசார, சமய அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கைக் கலைக் கழகத்தின் கர்நாடக சங்கீத பரதநாட்டியக்குழு இந்துசமய,




யாழ்.பல்கலைக்கழகம் சார்பாக செல்வி ஆனந்தஜோதி சண்முகநாதனின் பரதநாட்டிய நிகழ்ச்சி இடம் பெற்றது.

அந்நிகழ்வின்போது பல்வேறு கோணங்களில் எடுக்கப்பட்ட அபிநயத் தோற்றங்களையே

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனு சரணையுடன் அண்மையில் கொழும்பில் நடத்திய பரதநாட்டியப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் இவர் மூன்றாம் இடத்தைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நூல்கள் அன்பளிப்பு



உரும்பராய் சந்திரோதய வித்தியாலய மாணவர்களுக்கு விநாயகர் தரும நிதிய நிறுவனத்தினர் அண்மையில் திருக்குறள் நூல்களை அன்பளிப்பாக வழங்கினர். இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட றோட்டறிக்கழக யாழ். பிராந்தியத் தலைவர் றோட்டேரியன் அ.பஞ்சலிங்கம் மாணவர் ஒருவருக்கு திருக்குறள் நூலை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

விநாயகர் தருமநிதியத்தின் பிரதிநிதி அருள் நெறித்தொண்டர் சி.வ.ஆறுமுகசாமி, அதிபர் த.தர்மலிங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர் ந.யோகராஜன் மற்றும் சபாநாயகம் ஆகியோர் மேடையில் காணப்படுகின்றனர்.

## குறள் வெள்ளம்

எவருக்கு உதவிசெய்திட எல்லோரும் முண்டியடிக்கிறார்கள்?

நல்லாயிருப்பவர்-செல்வாக்குள்ளவர் - வசதி படைத்தவர் - சக்தி மிக்கவர் என்று இருப்பவர்களுக்கு நினைக்க முதலே உதவிகள் வந்து குவிந்து விடும். இதுதான் உலகினில் இயல்பு.

பயன் பெரிதாக விளையும் எனக் கருதி - பயன்தூக்கி-செய்யும் உதவிகளே அவை. அப்படிப்பட்டவர்களுக்கு எந்தப் பெரிய உதவியைச் செய்தாலும் அது உள்நோக்கம் கொண்டதாகவே அமையக்கூடும்.

காலப்போக்கில் நல்லாயிருந்தவர் கெட்டுநொந்து - செல்வாக்கிழந்து- செல்வம் இழந்து - சக்தியிழந்து - பதவிதுறந்து தவித்து வாடும் காலம் வரும் போது - அவரால் இனி அரைக் காசுக்கும் இலாபம் கிட்டாது என்ற நிலமை வரும்போது - மனித மனங்களை அடையாளம் காணும் வல்லமை கிட்டும்.

இனி இவரால் பயனேது என்ற நிலமை உணர்ந்தும் அவரது இடைஞ்சல்கண்டு தவிர்த்து உதவிட முன்னிற்பவர் பயன் தூக்கார் - செய்கின்ற உபகாரம் சிறப்புடையது.

அத்தகைய செயல்களைச் செய்பவர் அடையும் நன்மைதான் கடலினும் பெரியது என்கிறார் புலவர்.

*பயன்தூக்கார் செய்த உதவி*
*நயன் தூக்கின்*
*நன்மை கடலிற் பெரிது. 0103*

(செய்நன்றி அறிதல்)

-அம்பிகைபாகன்-

## தமிழ் 'டைப்ரைட்டரை' கண்டுபிடித்தவர் யாழ் தமிழரே!

தமிழில் "டைப்ரைட்டரை"(தட்டச்சு இயந்திரத்தை) உருவாக்கும் முயற்சியை வழிப்படுத்தி வெற்றி கண்டவர் யார் தெரியுமா? யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர் ஒருவரே இப்பெருமைக்குரியவர்.

தமிழக சஞ்சிகையான "ஆனந்த விகடன்" இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றது.

தமிழ் டைப்ரைட்டரைக் கண்டுபிடித்தவர் முத்தையா என்ற யாழ்ப்பாணத் தமிழரே. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிழைப்புத் தேடி சிங்கப்பூருக்குச் சென்ற முத்தையா கடமையாற்றிய ஆங்கிலக் கம்பனியில் இருந்த ஆங்கில டைப்ரைட்டரே அவரின் கண்டுபிடிப்பிற்குத் தூண்டுகோலாயிருந்தது.

முதலாம் உலகப்போர் முடிந்த கையோடு ஜேர்மன் கொம்பனி ஒன்றின் உதவியோடு முதலாவது தமிழ் தட்டச்சுப்பொறி உருவானது - இப்படி "ஆனந்த விகடன்" தகவல் வெளியிட்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மொழி

## உங்கள் கவிதைகள்

மனித மனமே!
மிருகமாய் ஏன் மாறுகின்றாய்?
போரின் கொடுமையைக்
கண்டு
போற்றி ஏன் நிற்கிறாய்?
உலகத்தில் புகுந்து உயிரை
ஏன் அழிக்கிறாய்?
கொடூரத்தை தணித்துக்
கொள்!
கொடுமையை அழித்துக்
கொள்!

**- றொ.யோண்சன் -**

உலகப் பந்தை
உற்றுப் பார்த்து
ஊரெல்லாம் தேடி
இற்றுப்போனேன்!
ஒரு கோடி ஆயுதங்கள்
உடையவன்தான் என்றாலும்
"உயிராயுதம்" என்றொன்றும்
உள்ளதாமே....!
எங்கே இருக்கிறது......?

**-எஸ். யு. காந்தன்-**
நல்லையப்புலம்.

சாத்தானே! உன்சுமையிறக்க
சுழலும் உலகில் இடமா?!
யோசனை வேண்டாம் இங்குவா!
யோக்கியமான இடம்.
நீ வந்தால் ஆசான் என்றழைத்து
நிரந்தரமாய் இருத்திப் பூசிப்பர்.
இதோ விலாசம்! விரைவாய் வா!
இலங்கை, தென்னாசியா, ஆசியா.

**- மிதிலா -**

பூமாதேவியே!
பொத்தான் ஒன்றை அழுத்தினால்
போதும் உன் உடல்
ஒரு நொடியில் அழிந்துவிடும்.........
விந்தைமிகு மனிதன்
வினைவை மறந்து விட்டான்!
மனிதனை வளர்த்தது
மகா பாவமாகிவிட்டதோ?

**- த. தாரகன் -**

அழிக்கப் போவதால்
அழியப் போவதை
அழிந்து போனது
பார்த்துச் சிரிக்கிறது.

**- சௌஜன்யா -**

கலைகள் உறையுமிடத்தில்
ஆயுதங்கள் நிறைகின்றன.
மனிதர்கள் வாழுமிடத்தில்
எலும்புக்கூடுகள் சஞ்சரிக்கின்றன...
எங்கே (பசும்) பூமி ?


**- நீதி -**

ஏய்..... எதிர்க்கிரகவாசியே....?
பூமியை எள்ளி நகையாடி
என்ன சிரிப்புனக்கு ....?
"இன்ரர்நெற்றில்" ஏறி
இறுமாந்திருந்தாலும் - பூமி
அணுக்குண்டில் அழிவது
நிஜம் தானென்றா....?

**-தாட்சாயணி-**

ஆயுதக் கூடை சுமந்து வரும்
அறிவற்ற பிசாசே!
நீ அழிக்கப்போகும்
அப்பாவி மக்களை
புதைத்து வைப்பதற்கு
பூமியிலே பொருத்தமான
இடத்தையா தேடுகிறாய்?

**-இராகவன்-**



ஏ.கே.. பிஸ்ரல், லோஞ்சருடன்
பிவ்டி கலிபர் நிறைய உண்டு......
மொத்தமாக வாங்குவோருக்கு
மனித உயிர்கள் இலவசம்!

**-ச. விஜே-**
ஆழியவளை.

வெடிக்கும் குண்டால் சமாதானம் - நாம்
வடிப்போம் என்றால் முடியுமா?
"முடிப்போம் " என்றே பேரினவாதம்
பிடிக்குதே பிடிவாதம்!

**- ராஜ்ரகுமான் -**

வாருங்கள் போரிடுவோம்!
உங்கள் உற்பத்திகள் எங்களிடம்.....
உயிர்களுக்கு விதித்த விலைகள் உங்களிடம்
உறக்கம் யாருக்கும்
இயற்கையாய் இருக்கக் கூடாது!
வாருங்கள் தோழர்களே
பரிசளிக்கப் புறப்படுவோம்!

**- வேலணை ஷுனா-**

அழிவை நோக்கும்
ஆயுதங்களின்
ஆதிக்கம்
அகிலத்தில் என்று-
இல்லாமல்
இருக்குமோ - அன்றுதான்
இதயத்தில் இங்கிதம் எழும்!

**-நாக.மகேந்திரலிங்கம்-**

ஓ.......!
சாத்தானே!
பூமிப் பந்துடன்
மட்டும் - உன்
விளையாட்டை
நிறுத்து!
செவ்வாய்க்கும்
சென்றுவிடாதே!

**- வி. நிம்மி -**

சந்திரனில், செவ்வாயில்
சக கோள்கள் பல தேடி
அந்தரத்தில் பறந்து
அகிலமெல்லாம் தேடிவிட்டேன்
'மனிதன்' ஒருவனை நான்
மருந்துக்கும் கண்டதில்லை!

**- திரு -**
அளவெட்டி

சம்மதமின்றி....
நிம்மதி குலைத்து,
நாடுகளை வதைத்து,
நாதியற்ற மனிதர்களை......
பாதியிலே பரிதவிக்கவிட்டு,
நீதியற்ற நீண்ட பயணத்துக்கு,
அழைத்துச் செல்லும் யமதூதன்!

**-நா. சுஜனி-**

ஏய்! மனிதா!
சாவு உன்னை
காவு கொள்ள முன்
ஆவி கவரும்
அழிவினைக் களைந்து
அமைதியை நாடு!

**-சுழிபுரம் பிரபா-**

ஆயுதத்தை உலகினுக்கே
அறிமுகம் செய்து வைத்த
அமெரிக்கப் பேயரசின்
ஆதிக்கத்தில் உலகம் இன்று!

**- செ.அற்புதன் -**
இணுவில்.

உலகத்தை விட்டு நீ ஓடும் வரை
உயிருள்ள மனிதனும் பிணமும் சரி.

**-சி. ல. நிதி-**

புதுமை பல நிகழ்ந்த புவியே!
பல் நிலம் கொண்ட பாரே!
புகழ் பெற்றவர்கள் நிறைந்த பூமாதேவியே!
மனிதன் படைத்த மகா கருவி நான்.
விநாடியில் உன் உயிர் பறிப்பேன்
என் செய்வாய்?

**- கருணையூர் த. விஷ்ணு -**

புனித பூமியை
புதை குழியாக்கி
மனித இனம்
மரணிக்கிறதா?.... ஆம்!
தனக்குத் தானே தேடியது
தண்டனையை ஏற்கட்டும்!

**- இ.பிருந்தா -**

உலகின்
எந்தப் பகுதிகளில்
என்னுடைய
ஆக்கிரமிப்பில்லை?

**-மூலபாரதி-**
வட மேற்கு, வண்ணை.

முன்னும் கொடுத்தோம்
பின்னும் கொடுக்கிறோம்
இன்னும் என்ன இளிப்பு
யுத்தப் பிசாசே!

**- சைதன்யன் -**

சதாமையும் கிளின்ரனையும்
சதா பார்த்து அலுத்துவிட்டேன்.
என் பாரம் குறைப்பதற்கு
எது இடம் தேடுகிறேன்.

**- திருமதி ரேவதி கிருபாகரன் -**
மட்டுவில் மத்தி.

நாம் வேண்டுவது
பூக்களோடு
தேவதைகளை:
ஆயுதங்களோடு
அரக்கர்களை
அல்ல!

**- யசோதரா -**

அவனி உனதென
ஆட்டுவிக்கும் மானுடனே
கவனி! - இனி
ஆள்பவனும் நானே....
ஆண்டவனும் நானே...!

**- நிலாப்பையன் -**


ஈவிரக்கமற்ற இராட்சதா,
ஈழமண்ணா உனது இலக்கு?
நீதான்
வெண்புறாக்களை விழுங்கிய
சமாதான சண்டியனோ?
வா
உன்னையும் இணைக்கிறோம்:
பகைவர்கள் பட்டியலில்!

**-மானிபூர் ரட்ணேஸ் -**

ஓ......யுத்த அரக்கனே!
வளைகுடாவினை நிலைகுலைய வைத்தாய்...
வக்கற்ற வாழ்வே திக்கெட்டும் தந்தாய்........
வதிவிடமழித்து அகதிமுகாம் அமைத்தாய்.....
வகை தொகையின்றி காணாமற் போகவும் செய்தாய்....
வலைவீசி நின்று வல்லரசின் சொல்லினை முடித்தாய்...
வாராதே! இனியும் நம் வாழ்வின் வாசற்படிக்கே!

**- க. நாகேஸ்வரா -**
சண்டிலிப்பாய்.

## மௌன மொழி 23



**உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது.**

விஞ்ஞானத்தின் உச்சி!
உலகம் சிரிப்பதற்குப் பதிலாய்
உண்மை
உலகைப் பார்த்துச் சிரிக்கிறது.
கண்டு பிடித்தவனே
காணாமல் போய்விட்ட
வெற்று உலகம்!

**- த. தர்மதா -**

மண்ணில் மட்டுமல்ல......
விண்வெளியிலும்
யுத்தம் ஒன்றுக்கான
ஆயத்தமா?

**- கலைநேசன்சிவம் -**

முற்றாய்
முடிந்தது
ஆயுதக் களையெடுப்பு.....
என்று எழுந்த போது :
புதியதாய்ப் புறப்பட்டது
இன்னுமோர் ஆயுதம்.....?
எனின்,
மீண்டும்
சிவந்திடுமோ நிலம்..!

**- எஸ். அருந்ததி -**
உடுத்துறை.

பேய் என்று எமக்குப்
பெயர் வைத்த மானிடப் பேய்களே!
அற்புத உலகின் அழகை
அனுபவிக்கத் தெரியாமல்
ஆயுத உலகில் மூழ்கி
அல்லாடித் தவிக்கின்றீர்களே!
இதுதான் உங்கள் பகுத்தறிவின் மகிமையோ?

**- நவாலியூர் மா. மீனலோசனி -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடுப்பாட்டம் அன்றும் இன்றும்

# 5

"இருபத்திரண்டு முட்டாள்கள் விளையாட இருபத்திரண்டாயிரம் முட்டாள்கள் பார்த்துக் கொண்டிருக் கின்றார்கள்" என்று சிலர் துடுப்பாட்டத்தை வர்ணித்தார்களாம். ஒரு வகையிற் பார்த்தால் அவ்வாறு வர்ணித்ததிற்கூடத் தவறில்லைத்தான். ஏனென்றால் ரெஸ்ற் துடுப்பாட்டம் பொதுவாக ஓரளவு சோம்பேறித்தனமான விளையாட்டாகத்தான் காணப்பட்டது. காரணம் - ஐந்து நாள்களுக்கு நீளும் ஆட்டமாதலால் துடுப்பாளர்களின் மந்த கதியிலான விளையாட்டுத்தான்.

இவ்வாறாக ரெஸ்ற் ஆட்டங்களின் மந்த கதியினால்தானோ என்னவோ அந்த ஆட்டங்களைப் பர்க்கவெனக் கூடும் இரசிகர்களின் எண்ணிக்கை குறைவடைந்தது. அதனைத் தொடர்ந்து ஒரு நாள் துடுப்பாட்டம் அறிமுகமாகி, 1971 இல் முதல் சர்வதேச ஒரு நாள் ஆட்டம் ஆஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்றது. பின்னர் விறுவிறுப்புத் தன்மை காரணமாக ஒரு நாள் ஆட்டங்கள் மிகவேகமாக பிரபல்யமடைந்தாலும் கூட ரெஸ்ற் ஆட்டங்களுக்கு இருந்த மதிப்பு மட்டும் குறையவேயில்லை.

இந்த இருவகை ஆட்டங்களில் இரு வேறுபட்ட பண்பினராகத் துடுப்பாளர்கள் விளங்குவதனைக் காணமுடிகிறது. ரெஸ்ற் போட்டிகளில் ஓட்டங்களை வேகமாக எடுப்பதென்பதை விட அதிக நேரம் களத்தில் நிலைத்து ஆடுவதென்பதற்கே முக்கியத்துவமளிக்கப்படுகின்றது. அதாவது ஓர் இனிங்ஸ் எவ்வளவு நேரம் நீளுகிறதோ அவ்வளவு அதிகமாக ஓட்டங்கள் குவியுமென்பதை எதிர்பார்க்கலாம். ஆனால் ஒரு நாள் போட்டிகள் அவ்வாறில்லை. எவ்வளவு வேகமாக ஓட்டங்களைக் குவிக்க முடிகிறதோ அவ்வளவு வேகத்துடன் குவிக்க வேண்டும். ஏனென்றால் இருப்பது ஐம்பது ஐம்பது (அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அளவு) பந்துப் பரிமாற்றங்கள்தான். அதற்குள் முடிந்தளவு அதிகமாக ஓட்டங்களைக் குவித்தாக வேண்டுமே!

இவ்வாறு பார்க்கும் போது இருவகை ஆட்டங்களிலும் அதிக ஓட்டங்களைப் பெறுவதற்கு இரு முற்றிலும் வேறுபட்ட உத்திகளைக்கையாள வேண்டியிருக்கிறது. அவ்வகையில் ஓர் அணி இந்த இருவகை ஆட்டங்களிலுமே அதிக ஓட்ட எண்ணிக்கைச் சாதனைகளைப் படைத்ததென்றால்.... நிச்சயம் அது பாராட்டப்பட வேண்டியதுதான்.

எல்லாவிதமான பேதங்களையும் மறந்துவிட்டு, எல்லோரும் மனிதர்களே என்றதோரு பரந்த நோக்கிலே பாருங்கள் - பலம் மிக்க அணிகளையுஞ் சிலகாலங் கலங்க வைத்த இலங்கை அணியின் இரு சாதனைகள் நிச்சயம் பாராட்டப்பட வேண்டியவை.


இனி இலங்கை அணியினரின் அந்த இணையற்ற சாதனைகளை ஒரு முறை நினைவு கூர்ந்து கொள்வோமா?



அரவிந்தா

### ஓட்டங்கள் குவிந்த ஆட்டங்கள்

1997 ஆகஸ்ட் 2. கொழும்பின் பிரேமதாஸ விளையாட்டரங்கு. ஆம்! இலங்கை - இந்திய அணிகளுக்கிடையேயான ரெஸ்ற் - தொடரின் முதல் ரெஸ்ற் போட்டி. முதலிற் துடுப்பெடுத்து ஆடிய இந்திய அணி எட்டு இலக்கு இழப்பிற்கு 537 ஓட்டங்கள் என்ற வலுவான எண்ணிக்கையுடன் முதல் இனிங்ஸை முடித்துக் கொண்டது. இந்தியா சார்பாக சித்து(111), அஸாருதீன்(126), டெண்டுல்கர்(143) ஆகியோர் சதங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.



ஜெயசூரியா

ஐந்நூறைத் தாண்டி ஓட்டங்கள் பெறுவதென்பது அத்துணை இலகுவான காரியமா என்ன? அவ்வகையில் ஒரு பெருஞ்சவாலுக்கெதிராக ஆடத் தொடங்கிய இலங்கை அணி 39 என்ற சொற்ப ஓட்ட எண்ணிக்கையுடன் தன் முதல் வீரரை இழந்தது. இந்திய சுழற் பந்தாளர் நிலேஸ் குல்கரினி தன் முதற் பந்தியிலேயே முதல் விக்கெட்டைச் சாய்த்தார். குல்கரினி வீசிய பந்தை எதிர்கொண்ட மார்வன் அந்தப்பத்து, நயன் மொங்கயாவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

குல்கர்னிக்கு அது முதற் ரெஸ்ற் பந்தயம் என்பதால் முதல் ரெஸ்ற்றின் முதற் பந்திலேயே விக்கெட்டொன்றைக் கைப்பற்றிய முதல் இந்தியர் என்ற மகத்தான பெருமை அவருக்குக் கிடைத்தது. இதற்கு முன் இச்சாதனையினை வேறு பதினொரு வீரர்கள் சாதித்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (விவரம் அட்டவணையில்)

மார்வன் அந்தப்பத்துவுக்கு பதிலாகக் களம் புகுந்த ரொஷான் மகாநாம ஜெயசூரியாவுடன் இணைந்து கொண்டார். அதன் பின்னர் அப்பப்பா... இந்தியாவிற்கு சோதனைகளும் இலங்கைக்கு சாதனைகளும் குவியத் தொடங்கின.

### (சே)சாதனை மேற் (சே)சாதனை

சனத் - மகாநாம இணை இந்தியப் பந்தாளர்களைத் திணறடித்தது. 576 ஓட்டங்களைக் குவித்தமை - இரண்டாம் விக்கெட்டுக்கான இந்தப் பெரும் இணைப்பாட்டம் - ரெஸ்ற் வரலாற்றின் மாபெரும் சாதனையாக மாறியது.

அதுவரை 1990 - 91 காலப் பகுதியில் இலங்கைக்கெதிராக வெலிங்ரனில் நியூஸிலாந்தின் அன்றூ ஜோன்ஸ் மற்றும் மாட்டின் குரோ இணை மூன்றாவது விக்கெட்டுக்காகப் பெற்ற 467 என்பதே மாபெரும் ரெஸ்ற் இணைப்பாட்டச் சாதனையாக' இருந்ததென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இரண்டு நாள்களுக்கு மேலாகத் தொடர்ந்து ஆடியது ஜெயசூரிய-மகாநாம இணை. அணியின் எண்ணிக்கை 615 ஆக இருக்கையில் கும்பிளேயின் பந்துவீச்சில் ரொஷான் மகாநாம 225 ஓட்டங்களுடன் ஆட்மிழந்தது அந்த இணைப்பாட்டத்துக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தது. 576 இணைப்போட்டங்களைப் பெற்ற அந்த இணை மேலும் இரண்டே இரண்டு ஓட்டங்களைப் பெற்றிருந்தால்........

துடுப்பாட்ட வரலாற்றிலேயே மாபெரும் சாதனையினைப் பெற்றிருக்கலாம். ஏனெனில் 1946 - 47 காலப்பகுதியில் நடைபெற்ற ஒரு ரஞ்சி கிண்ணத்துக்கான (இந்தியா) முதற்றர ஆட்டத்தில் விஜய்ஹசாரே (288) - குல் மொஹமட் (319) ஆகியோர் இணைந்து பெற்ற 577 ஓட்டங்களே உலகின் மாபெரும் இணைப்பாட்டச் சாதனையாகும். இந்த ஆட்டத்திலே தப்பிப்பிழைத்த இன்னொரு சாதனை பிறயன் லாறாவின் ஓர் இனிங்ஸில் 375 ஓட்டங்கள் என்பதாகும்.

### வேதனையும் சாதனையும்

நான்காம் நாள் ஆட்ட முடிவிலே ஜெயசூரியா 326 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். இறுதி நாளிலே அவர் பிறயன் லாறாவின் சாதனையை முறியடிப்பார் என்ற எதிர்பார்புடன் சுமார் முப்பதாயிரத்துக்கும் அதிக மக்கள் மைதானத்தில் குழுமியிருந்தனர். ஆனால் அவர்களுக்குக் கிடைத்ததோ ஏமாற்றம்தான். ஏனெனில் அவர்கள் எதனை எதிர் பாத்துக் காத்துதிருந்தார்களோ அதற்கு நேர் எதிர்மாறன் தொன்றுதான் நிகழ்ந்தது. ஆம்! மகாநாம ஆட்டமிழந்த பின் மேலும் ஓர் ஓட்டத்தைத் தானும் ஜெயசூரியா பெறவில்லை.

ராஜேஸ் செளஹான் பந்து வீசினார். ஜெயசூரியா அதனைத் தடுத்தாடினார். ஆனால் துடுப்பிற்பட்ட பந்து எகிறியது. நேராகச் சில்லி பொயின்ரில் நின்ற கங்குலியிடம் சென்றது. கங்குலி தவறேதும் விடவில்லை. பந்து அவரது கைகளுக்குள் தஞ்சம் புகுந்துகொண்டது.

அந்தக் கணத்திலே அரங்கமே ஸ்தம்பித்தது. பார்வையாளர்கள் மின்சாரத்தால் தாக்குண்டது போல் அதிர்ச்சியடைந்தனர். இந்திய வீரர்கள் ஜெயசூரியவிற்கு ஆறுதல் கூற விரைந்தனர். நடந்ததை ஜீரணிக்கமுடியாத சனத்தின் கண்களில் கண்ணீர் மல்கியது.

ஆட்டமிழந்த போது ஜெயசூரியா 799 நிமிடங்களில் 578 பந்துகளை எதிர்கொண்டு 36 நான்குகள், 2 ஆறுகள் அடங்கலாக 340 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். அவர் லறாவின் சாதனையினை முறியடிக்காவிட்டாலும் முச்சதம் பெற்ற முதல் இலங்கையர் என்ற பெருமையைப் பெற்றுக்கொண்டார். அது தவிர, அரவிந்த டி சில்வாவின் சாதனையொன்றும் சனத்திடம் பறிபோனது.

1991 இல் நியூஸிலாந்திற்கு எதிராக வெலிங்ரனில் 380 பந்துகளில் 40 நான்குகள் அடங்கலாக அரவிந்த டி சில்வா பெற்ற 267 ஓட்டங்

## கலங்கடித்த இலங்கை அணி

கள் என்பதுதான் ஓர் இலங்கை வீரர் பெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாக அது வரை இருந்து வந்தது.

சனத் - ரொஷான் இணை ஆட்டமிழந்த பின்னர் அரவிந்த டி சில்வா, அர்ஜுனா ரணதுங்கா, மஹேல ஜெயவர்த்தன ஆகியோர் மிகச் சிறப்பாக ஆடினர். அரவிந்தா சதத்தினையும் (126) ரணதுங்காவும்(86) ஜெயவர்த்தனாவும்(66) அரைச்சதங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ஒரு கட்டத்திலே இலங்கை ஆயிரம் ஓட்டங்கள் வரை பெறலாம் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் 6 இலக்கு இழப்பிற்கு 952 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ரணதுங்கா ஆட்டத்தை 'டிக்ளேர்' செய்தார்.

1938 இல் இங்கிலாந்து அணி ஆஸ்திரேலியாவிற்கெதிராக ஓவல் மைதானத்தில் பெற்ற 7 விக்கெட் இழப்பிற்கு 903 ஓட்டங்கள் என்பதுதான் அதுவரையும் ஓர் இனிங்ஸில் அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாக இருந்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மொத்தத்தில் இலங்கை அணி ஒருநாள் போட்டிகளுக்கு மட்டுமே லாயக்கானது என்ற கருத்தினைத் தவிடுபொடியாக்குவதாக இந்த ரெஸ்ற் போட்டி முடிவடைந்தது. இந்தப் போட்டி நடைபெற ஓர் ஆண்டின் முன்னரேயே இலங்கை அணியினர் தாம் ஒரு நாள் போட்டிகளில் எவ்வளவு திறமையானவர்கள் என்பதை நிருபித்திருந்தார்கள். அந்த அற்புதமான நாள்........

### ஒரு நாளிற் பெருஞ் சாதனை

1996 மார்ச் 06. அன்றுதான் உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் கென்ய-இலங்கை அணிகள் கண்டியின் அஸ்கிரிய மைதானத்தில் மோதிக்கொண்டன. அப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி அந்த மாபெரும் சாதனையினைப் படைத்தே விட்டது. ஓரளவு பலங்குன்றிய கென்ய அணியினரால் இலங்கை அணியினரின் அதிவேக ஆட்டத்தினைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

ஆரம்பத் துடுப்பாளர்களாகக் களமிறங்கிய ஜெயசூரியா - களுவிதாரண இணை வெறும் 20 பந்துகளில் முதல் 50 ஓட்டங்களை அடித்து நொருக்கியது. ஜெயசூரியா 44 ஓட்டங்களுடனும் களுவிதாரண 33 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். அஸங்க குருசிங்க 84 ஓட்டங்களைக் குவித்தார். குருசிங்கா-அரவிந்த டி சில்வா ஜோடி 182 பந்துகளில் 184 ஓட்டங்களைப் பெற்றது. அந்த ஆட்டத்தின் நாயகனாகப் பின்னர் தெரிவு செய்யப்பட்டவரான அரவிந்த டி சில்வா வெறும் 115 பந்துகளுக்கு முகங் கொடுத்து 5 ஆறுகள், 14 நான்குகள் அடங்கலாக 145 ஓட்டங்களைக் குவித்தார்.


**-கோபி-**

அதன் மூலம் நியூஸிலாந்திற்கெதிராக 1994-95 காலத்தில் ஜெயசூரியா பெற்ற 140 ஓட்டங்கள் என்ற சாதனையினையும் டி சில்வா முறியடித்தார். (சில காலத்தின் பின் மீண்டும் ஜெயசூரியா இந்தியாவிற்கு எதிராக ஆட்டமிழக்காமற் பெற்ற 151 மூலம் அச்சாதனையை மீளத் தம் கைக்குக் கொண்டுவந்தார் என்பது வேறு விடயம்) அணித்தலைவர் அர்ஜூனா தன் பங்குக்காக நாற்பது பந்துகளில் ஆட்டமிழக்காமல் ஓர் ஆறு, 13 நான்குகள் உட்பட 75 ஓட்டங்களை விளாசினார்.

இப்போட்டியில் அரவிந்தாவும் அர்ஜுனாவும் தம் தனிப்பட்ட ஓட்டங்களாகச் சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் ஐயாயிரம் ஓட்டங்கள் என்ற எண்ணிக்கையைத் தாண்டிய முதலிரு இலங்கையர்களாகினர் என்பது மற்றோர் சுவாரஸிய மான விடயம்.

மொத்தத்தில் இலங்கையணி 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 398 ஓட்டங்களைக் குவித்தது. இதன்மூலம் இதற்கு முந்தைய சாதனையான - 1992 இல் பாகிஸ்தானுக்கு எதிராக இங்கிலாந்து 55 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்குப் பெற்ற 363 ஓட்டங்கள் என்பது - முறியடிக்கப்பட்டது.

பின்னர் ஆடிய கென்ய அணி 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 254 ஓட்டங்களைப் பெற்றது. கென்யா-இலங்கை அணிகள் ஒருநாள் ஆட்டத்தில் - 100 ஓவர்களில் - 652 ஓட்டங்களை மொத்தமாகப் பெற்றமையும் ஒரு புதிய சாதனையாகும்.




இனிவரும் காலங்களில் 50 ஓவர்களில் 398 என்ற சாதனையினை முறியடிப்பதென்பது அரிதாகவே நிகழக்கூடும். ஏனெனில் சராசரியாக ஓவருக்கு 8 ஓட்டங்கள் பெறுவதென்பது அத்தனை சுலபமா என்ன?

அவ்வகையில் ஏறத்தாழ 8 என்ற ஓட்டச் சராசரியுடன் இலங்கை அணி ஆடியதென்றால் அந்த ஆட்டத்தின் அதிவேகத்தினைக் கற்பனை செய்து கொள்ளலாம்.

இந்த அதிவேகம்தான் பெருமளவு பார்வையாளர்களை ஒருநாள் ஆட்டங்கள் கவர்வதன் இரகசியம். ஆனால் இந்த ஒருநாள் ஆட்டங்கள் அறிமுகமாகி 3 தசாப்தங்கள் கூட ஆகவில்லை.

விறுவிறுப்பு மிக்க இந்த ஒருநாள் போட்டிகள் அறிமுகமானவிதம் பற்றி அடுத்தவாரம் பார்ப்போமே.

### முதற் பந்தில் விக்கெட் பெற்றவர்கள்

| நாடு/அணி | வீரர் | எதிராக |
|---|---|---|
| ஆஸ்திரேலியா | A.கொனிங்ஹாம் | இங்கிலாந்து |
| இங்கிலாந்து | W.M.பிராட்லி | ஆஸ்திரேலியா |
| இங்கிலாந்து | E.G.ஆர்னோல்ட் | ஆஸ்திரேலியா |
| இங்கிலாந்து | G.G.மக்குலே | தென்னாபிரிக்கா |
| இங்கிலாந்து | M.W.ரேற் | தென்னாபிரிக்கா |
| நியூசிலாந்து | M.ஹெண்டர்சன் | இங்கிலாந்து |
| நியூசிலாந்து | H.D.ஸ்மித் | இங்கிலாந்து |
| மேற்கிந்தியத்தீவு | T.F.ஜேன்சன் | இங்கிலாந்து |
| இங்கிலாந்து | R.ஹோர்வோர்த் | தென்னாபிரிக்கா |
| பாகிஸ்தான் | இன்டிகாப் அலாம் | ஆஸ்திரேலியா |
| இங்கிலாந்து | R.K.இலிங்வோர்த் | மேற்கிந்தியத்தீவு |
| இந்தியா | N.குல்கர்னி | இலங்கை |

### மாபெரும் இணைப்பாட்டச் சாதனைகள்

| இணைப்பாட்டம் | | | வீரர்கள் | நாடு/அணி |
|---|---|---|---|---|
| 4ஆவது | 388 | டொன் பிரட்மன் | பில் பொன்ஸ்.ஃபோட் | ஆஸ்திரேலியா |
| 2ஆவது | 451 | டொன் பிரட்மன் | பில் பொன்ஸ்.ஃபோட் | ஆஸ்ரேதிலியா |
| 5ஆவது | 405 | டொன் பிரட்மன் | S.G பார்னஸ் | ஆஸ்ரேதிலியா |
| 1ஆவது | 413 | பன்காஜ் றோய் | வினூ மான்கட் | இந்தியா |
| 4ஆவது | 411 | பீற்றர் மே | கொலின் கோட்றி | இங்கிலாந்து |
| 2ஆவது | 446 | கரி சோபர்ஸ் | கொன்றாட் ஹன்ரே | மேற்கிந்தியத்தீவு |
| 4ஆவது | 399 | கரி சோபர்ஸ் | ஃபிராங் வொறெல் | மேற்கிந்தியத்தீவு |
| 3ஆவது | 451 | ஜாவெட் மியன்டாட | முடஸார் நஸார் | பாகிஸ்தான் |
| [illegible] | [illegible] | [illegible] ஓமார் | ஜாவெட் மியன்டாட் | பாகிஸ்தான் |
| 3ஆவது | 467 | மாட்டின் குரோ | அன்றூ ஜேன்ஸ் | நியூசிலாந்து |
| 2ஆவது | 576 | சனத்ஜெயசூரிய | ரொஷான் மகாநாம | இலங்கை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாகத்தால் பாடுகிறேன்!

சோற்றுக் கலைகின்ற
நாயைப் பிடித்து
சொர்க்கத்தில் வைத்தாலும் -அது
நாற்ற மலந் தின்னப்
போகு மெனுங் கதை அறிந்து
சோகத்தால் வாடுகிறேன்!-மனத்
தாகத்தால் பாடுகிறேன்!

கூனற் கழுதைக்குச்
சேணங்க ளிட்டதை
கோயிலில் வைத்தாலும் -அது
கானம் படிப்பதை
விட்டு விடாதென்று கண்டு
சோகத்தால் வாடுகிறேன்- மனத்
தாகத்தால் பாடுகிறேன்!

சாக்கடைப் பன்றிக்கு
பூக்கடை வாசத்தின்
சாத்திரம் சொன்னாலும் - அதன்
போக்கிடம் என்பது
சாக்கடை தானென்று அறிந்து
சோகத்தால் வாடுகிறேன் - மனத்
தாகத்தால் பாடுகிறேன்!

கன்ன மிடுகின்ற
கள்வனுக்குக் கொஞ்சம்
அன்னமிடும் போதும் -- அவன்
அன்னத்திற்குள் கன்னக்
கோலை மறைப்பது கண்டு
சோகத்தால் வாடுகிறேன் - மனத்
தாகத்தால் பாடுகிறேன்!

காற் பணமாயினும்
கஷ்டப்படாமலே
கவர்ந்திடும் கள்வன் - தினம்
ஊர்ப்பணத்தாலே
உடம்பை வளர்ப்பதை அறிந்து
சோகத்தால் வாடுகிறேன் - மனத்
தாகத்தால் பாடுகிறேன்!

கள்ளிச் செடிதனை
தோட்டத்திலே வைத்து
கண்களில் காத்தாலும் - அது
முல்லை மலரொன்று
தந்து விடாதது கண்டு
சோகத்தால் வாடுகிறேன் - மனத்
தாகத்தால் பாடுகிறேன்!

*-தர்ப்பணா சிறிமகாதேவன்-*

# எல்லாம் தாயே

வித்தாய் மடியில் வைத்தாய் மாதம்
பத்தாய்ச் சுமந்தெனைப் பெற்றெடுத்தாய்!
முத்தாய் முல்லைக் கொத்தாய் கொஞ்சி
மொத்தாய் நல்ல பேர் கொடுத்தாய்!

சத்தாய் உணவைச் சமைத்தாய் பிள்ளை
சமர்த்தாய் உண்ணச் செய்வித்தாய்!
பித்தாய்க் கிடந்து பெரிதாய் அன்பைப்
பெய்தாய் நீதான் தெய்வத்தாய்!

குழந்தாய் என்றே அழைத்தாய் உள்ளம் குளிர்ந்தாய்
எனை நீ அரவணைத்தாய் குழந்தாய் என
பாசம் பொழிந்தாய்
தேனில் குழைத்தாய் சொல்லை நீ மொழிந்தாய்!

விளைந்தாய் மலராய் விரிந்தாய் மணமாய்
விடிந்தாய் எந்தன் மகற் பெரிதாய்!
வழிந்தாய் புனலாய் வளர்த்தாய் பயிரை
வாழ்ந்தாய் எனக்கென நாள் முழுதாய்!

நனைந்தாய் மழையில் காய்ந்தாய் வெயிலில்
நடந்தாய் குடும்பத் தேர் முத்தாய்!
முனைந்தாய் பணியில் சலித்தாயில்லை!
துணிந்தாய் எதற்கும் தோள் கொடுத்தாய்!

தனதாய் எதையும் நினைத்தாயில்லை
எனதாய் எண்ணி நீ சேமித்தாய்!
சினந்தாயில்லை செய் பிழை பொறுத்தாய்
சிரித்தாய் ! நீதான் பூமித்தாய்!.

மருந்தாய் நோயில் விருந்தாய்ப் பசியில் இருந்தாய்
நீயெனை வாழ்வித்தாய்! மறந்தாய் உன்னை நினைத்தாய்
என்னை அருந்தாய்ப் பண்பை அறிவித்தாய்!
புரிந்தாய் வினைகள் முடித்தாய் கடனைப் படுத்தாய்!
ஓர் நாள் உயிர்நீர்த்தாய்!

மறைந்தாய் மண்ணில் மடிந்தாய் என்றும் நிறைந்தாய் !
நெஞ்சில் நிலைத்தாய்! பிரிந்தாய் விண்ணில் பறந்தாய்!
இறந்தால் நானும் பிறந்தால் மீண்டும் இடம்தா!
உந்தன் மடியிலே! இருந்தால் உந்தன் மகனாய்
இருக்கும் வரம்தான் வேண்டும் புவி மேலே.

*-த.கோபு-*

# பாருருட்டும் ஈருருளி

## படைத்தவனோர் மாமனிதன்

ஈருருளி யேஉந்தன் இயக்கத்தின் கதியாலே
இவ்வுலகின் அசைவிற்கு ஏற்றமிகு பங்களிப்பாய்
பாருருட்டி (ப்) பாமரரின் பயனுள்ள ஊர்தியென (ப்)
பலர்மெச்ச (ப்) பலவழியும் பயணத்திற் குதவியாய்
அச்சாணிச் சுழற்சியினால் அதிலிரண்டு சில்சுழற்றி
அவையினைத்து (ச்) சங்கிலியால் அசைத்திட்டு விசையூட்டி
உச்சாகம் தந்தெம்மை ஊரெல்லாம் சுமந்திடுவாய்
ஊனுறக்கம் இல்லாது உன்வேலை தொடர்ந்திடுவாய்
மூச்சதனை உள்வாங்கி முழுமூச்சாய் உள்ளடக்கி
மூட்டமுடன் சுறுசுறுப்பு முந்திவிட முடுக்கிடுவாய்
கூச்சமின்றி எவரையும்நீ குணமாகக் கொண்டுசெல்வாய்
குறைநிறைவு குலத்தாட்சி கொள்ளாது பணிசெய்வாய்
மிதிபட்டும் உதைபட்டும் மேன்மைமிகு குணங்கொள்வாய்
மிதிப்போரை இறக்காது மேலுயர்த்திப் போகவைப்பாய்
விதிக்குமிகு விலக்காக வெகுசுமைகள் ஏற்றிடுவாய்
வெறுப்புகளும் மறுப்புமின்றி விருப்போடு வெளிக்கிடுவாய்
சீராக வளர்த்தெடுத்த சிறிசுகளும் பெரிசுகளும்
சிலவேளை சினந்துமனம் சிணுங்குகிற வேளையிலும்
ஊராரும் உற்றாரும் உடன்பிறந்தார் நண்பர்களும்
ஓடோடும் காலத்தும் உளமார உதவிடுவாய்
உன்னைப்போல் உற்றதொரு நண்பனைநான் கண்டதில்லை
உயிரற்றும் உயிர்ப்பான உன்தொண்டை உலகத்தோர்
எண்ணத்தில் வைத்திடுவார் இதயத்தில் இருத்திடுவார்
ஏற்றமிகு உனையிங்கு படைத்தவனோர் மாமனிதன்

*-நயினைக்கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை-*

# 'தயாராக நில்லு'

**(விடுதலைப்பாடல் ஒன்றின் சாயலைத் தழுவியது)**

நல்ல மாஸ்டர் உள்ள ரியூசன்களைத் தேடிப்போகிறோம்
நாங்கள் படிக்காத(சிலபஸ்)களை முடிக்கப் போகிறோம்.
கண்சோரும் மனம் சலிக்கும் ஓயப்போவதில்லை
வரும் ஓகஸ்ட் மாதம் மட்டும் நாங்கள் தூங்கப்போவதில்லை.

மேசையிலே கிடக்கின்ற கொப்பிகளைப்பாரும் – இவை
படிக்காத நோட்ஸ் உள்ள கொப்பிகளே ஆகும்!
இடைவெளிகள் பாரும் இதை நிரப்ப இல்லை நேரம்
ரியூசன் போகாத நோட்ஸ் எழுத விட்ட இடம் போலும்.
பாஸ்பேப்பர்பாரும் இது படிப்பதில்லை நானும் ஓல்ட்சிலபஸ்
என்பதனால் விட்டுவிட்டேன் காணும்
ரியூட்டுகளைப் பாரும் இதை வேக்ப் பண்ணும் நீரும்
விலை அதிகம் என்றாலும் வாங்கிப்போடவேணும்

தூரமதிகமில்லை அந்தோ தெரியுதெங்கள் பள்ளி
அங்கு இப்போ மாணவர்கள் ஸ்ரடி லீவு தம்பி
டேக்கிளாசைத்தானே இப்போமாணவர்கள் நம்பி
பேப்பர்க்கிளாஸ் கூட் இப்போ வழியுதடா நிரம்பி.

கடவுள் பெயர் சொல்லு கவனமாகப் பயிலு
ஆவணிவரும் சோதினைக்குத் தயாராக நில்லு நில்லு.

–வாகீசன்–

# "கவிஞரே கண் திறமின்"

பாட்டெழுதும் பணிசெய் பாவலர்கள் கேண்மின்
ஏட்டினிலுயர் தமிழின் இனிமையது குலையாமல்
நாட்டமுடன் நற்றமிழில் நற்கவிகள் நன்கமைத்துப்
பாட்டெழுதிப் பழகுங்கள் பைந்தமிழை வளருங்கள்!

முந்தித் தவமிருந்து முன்னோர்கள் வளர்த்ததமிழ்
நிந்தனை க்காளாகி நிட்டூரப் படாமல்நீர்
சிந்தித்துப் பணிசெய்யச் சித்தங் கொண்டென்றும்
வந்தித்துப் பாடுமின் வண்டமிழை வளருமின்!

முச்சங்கப் புலவோர்கள் முனைப்புடன் வளர்த்ததமிழ்
இச்சகத்து மாந்தரினால் இழிநிலைக் கேகாமல்
இச்சையுடன் பணிசெய்து இயன்றவரை இன்றமிழைக்
கச்சிதமாய் வளர்த்திடக் கவிஞரே கண்திறமின்!

பாட்டினில் வேற்றுமொழி பயின்றுமே வாராமல்
பாட்டெழுதிப் பாருங்கள் பாவினிக்கும் பாருங்கள்
காட்டகத்துக் கவிகள்போற் கண்டபடி தாவாமற்
பாட்டினில் ஒருமொழியே பயின்றிடப் பாடுமின்!

நற்றமிழிற் தோன்றியே நாநிலம் புகழ்பரப்பும்
சொற்றமிழ் கவிகளினை சொல்மாற்றி எழுதாமல்
முற்றவும் புதிதாய்நீர் முனைப்பொடு கவிசமையும்
இற்றரையோர் புகழ்வர் இன்றமிழும் வளரும்!

வேற்று மொழிகளினை விரும்பிக்கவிதன்னில்
ஏற்றுச் சேராமல் என்றும் நற்றமிழைப்
போற்றிப் பாடிடவே பொங்குந் தமிழமுதம்
நற்றிசை முழுதும் நன்முழவு பரவுமே!

-செ.சுதாகரன்-
மட்டுவில் வடக்கு.

# தீர்வொன்று வேண்டுமே!

**எங்கள் பிரச்சினை
எரியும் பிரச்சினை!
எங்கள் பிரச்சினை
எரிக்கும் பிரச்சினை!!**

**தீர்வொன்று வேண்டுமெனச்
சொல்லாதோர் யாரோ?
தீர்வொன்று காணும்வழி
சொல்லுவார் யாரோ?**

**தீவினில் ஒளிபொங்கத்
தீர்வொன்று வேண்டுமே!
தீவினில் களிபொங்கத்
தீர்வொன்று வேண்டுமே!!**

**நாட்டின் நலம்காக்கத்
தீர்வொன்று வேண்டுமே!!
நாட்டின் வளம்காக்கத்
தீர்வொன்று வேண்டுமே!!**

**பேதங்கள் நீங்கிடத்
தீர்வொன்று வேண்டுமே!
சேதங்கள் நீங்கிடத்
தீர்வொன்று வேண்டுமே!!**

**மோதல்கள் தொலைந்திடத்
தீர்வொன்று வேண்டுமே!
சாதல்கள் தொலைந்திடத்
தீர்வொன்று வேண்டுமே!!**

**இனவாதம் மறைந்திடத்
தீர்வொன்று வேண்டுமே!
மதவாதம் மறைந்திடத்
தீர்வொன்று வேண்டுமே!!**

**நீதிகள் நிலைத்திடத்
தீர்வொன்று வேண்டுமே!
பீதிகள் விலகிடத்
தீர்வொன்று வேண்டுமே!!**

**நியாயங்கள் நிலைகொள்ளத்
தீர்வொன்று வேண்டுமே!
தியாகங்கள் பயன்கொள்ளத்
தீர்வொன்று வேண்டுமே!!**

**உரிமைகள் ஓங்கிடத்
தீர்வொன்று வேண்டுமே!
சிறுமைகள் நீங்கிடத்
தீர்வொன்று வேண்டுமே!!**

**சமத்துவம் வளர்ந்திடத்
தீர்வொன்று வேண்டுமே!
தனித்துவம் வளர்ந்திடத்
தீர்வொன்று வேண்டுமே!!**

**தமிழ்மொழி வளர்ந்திடத்
தீர்வொன்று வேண்டுமே!
தமிழ்நிலம் வளம்பெறத்
தீர்வொன்று வேண்டுமே!!**

**அனைவரும் வாழ்ந்திடத்
தீர்வொன்று வேண்டுமே!
அனைவரும் வாழ்த்திடத்
தீர்வொன்று வேண்டுமே!!**

**'எல்லோரும் இந்நாட்டு
மன்னர்கள்' என்றெண்ணும்
எண்ணமே நிலைபெறத்
தீர்வொன்று வேண்டுமே!**

**எங்கள் மனம்கொள்ளும்
தீர்வொன்று வேண்டுமே!
எங்கள் மனம்வெல்லும்
தீர்வொன்று வேண்டுமே!!**

**நாட்களைக் கடத்தாது
தீர்வொன்று வேண்டுமே!
நாடின்னும் பொறுக்காது
தீர்வொன்று வேண்டுமே!!**

*-முருகு-*

## பாத்துமிகள்

*ஆசிரியர்கள்*
அறிவை
அள்ளிக் கொடுக்கும்
அட்சய பாத்திரம்

*மழைத்துளி*
வானத்தையும்
பூமியையும்
இணைக்கும்
சமாதானக் கம்பி

*கைலாம்பு*
ஏழைகளின்
மின் விளக்கு


*மெழுகுவர்த்தி*
மனிதனுக்கு
தியாகத்தைக்
கற்றுக்கொடுக்கும்
ஆசான்

*-சுபர்சன்-*

**கவிதை முற்றம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த நூற்றாண்டின் மாபெரும் விஞ்ஞானி!



இந்த நூற்றாண்டின் மாபெரும் விஞ்ஞானி யார் என்று கேட்டால் பதில் சொல்லத் தயங்க வேண்டாம். அல்பேர்ட ஐன்ஸ்டீன் என்று விடை பகருங்கள். இயற்பியல் துறையில் மகத்தான படைப்புக்கள் நல்கிய விஞ்ஞானிகள் பலர் உள்ர். எனினும் பிரபஞ்சத்தைப் பற்றி நமது கருத்துக்களை அடியோடு மாற்றக்கூடிய கண்டுபிடிப்புக்களைச் செய்தவர் என்ற நிலையில் ஐன்ஸ்டீன் என்றென்றும் நினைத்துப் போற்றப்பட வேண்டியவர்.

ஐன்ஸ்டீன் மாபெரும் விஞ்ஞானி மட்டுமல்ல: ஒரு சிறந்த மனிதாபிமானியும் கூட.

## அமைதி விரும்பி

சொந்த நாடாகிய ஜேர்மனியில் போர்வெறி மூளுவதைக் கண்டித்து தன் 21 ஆம் வயதில் அவர் சுவிட்ஸர்லாந்துக்கு குடி பெயர்ந்தார். ஒரு யூதராகப் பிறந்த அவருக்குத் தம் சகோதரர்கள் அனுபவிக்கும் துன்பங்களைக் கண்டு ஆழ்ந்த அனுதாபம் ஏற்பட்டது.

யூதர்களுக்கென்று இஸ்ரேல் தனிநாடாக உருவாக்கப்பட்டபோது ஐன்ஸ்டீன் அதன் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்க அழைக்கப்பட்டார். ஆனால் இந்த வாய்ப்பை அவர் பணிவுடன் மறுத்துவிட்டார்.



இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு இன்னொரு போர் மூண்டு விடாமலிருக்க அமைதி நடவடிக்கைகளில் ஐன்ஸ்டீன் தீவிரமாக ஈடுபட்டார்.

அவர் வெளியிட்ட சார்பியல் கோட்பாடு(Theory of Relativity) காலத்திற்கும் வெளிக்கும், பொருளுக்கும் ஆற்றலுக்கும் உள்ள தொடர்புகள் பற்றி புதிய கருத்துக்களை உருவாக்கியது. ஒளி - மின்சாரம், கதிரியக்கத்தில் ஆற்றல் அலைவீச்சுக் கோட்பாடு ஆகிய துறைகளில் அவரது ஆராய்ச்சிகள் குறிப்பிடத்தக்கவை.

பிரபலமானதும் முக்கியமானதுமான அவரது கண்டுபிடிப்பு சார்பியல் கோட்பாடு. ஆனால் அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது இதற்காக அல்ல என்பது சுவாரசியமான செய்தி. 1921-இல் ஒளி - மின்சார விளைவுகள் பற்றிய அவரது கண்டுபிடிப்புக்காகவே அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

ஐன்ஸ்டீன் 1879-இல் ஜேர்மனியில் உல்ம் என்ற ஊரில் பிறந்தார். அவருடைய தாய் தந்தையார் யூதர் இனத்தைச் சேர்ந்தவர்கள். மியூனிச் நகரில் பள்ளிப் படிப்பு மேற்கொண்டார். பள்ளியில் படிக்கும் போது அவருக்குப் படிப்பில் ஆர்வமில்லாமல் இருந்தது. ஆனால் அவருடைய மாமா ஒருவர் அவருக்குத் கணிதத்தில் ஆர்வத்தை உண்டாக்கினார். கணிப்பீடு (Calculus) அறிவியலையும் தன் சுயமுயற்சியிலேயே ஐன்ஸ்டீன் கற்றுக்கொண்டார். பிறகு சுவிற்ஸர்லாந்தில் தொழில் நுட்பக்கல்லூரியில் சேர்ந்து இயற்பியல் கணிதத்திலும் ஆசிரியராவதற்கான பயிற்சியைப் பெற்றார். சுவிற்ஸர்லாந்து நாட்டில் குடியேறினர். அங்கு மிலேவா மாரெல் என்ற பெண்மணியை மணந்து கொண்டார். அவர்களுக்கு இரு ஆண் குழந்தைகள் பிறந்தன. ஆனால் 1916இல் ஐன்ஸ்டின் தம்பதியினர் விவாகரத்து செய்து கொண்டனர்.

கல்வித்துறை சார்ந்த ஒரு வேலை கிடைக்காமையால் ஐன்ஸ்டின் அலுவலகமொன்றில் சேர்ந்து எழுதுவினைஞராகப் பணியாற்றினார். அங்கே வேலை செய்து கொண்டிருக்கும் போது தனது ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வந்தார். 1905இல் சூரிச் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றார்.

அறிவியல்துறையில் உயர்ந்த பட்டம் பெற்றுக்கூட அவருக்கு ஆராய்ச்சி தொடர்பான ஒரு வேலை அமையவில்லை. அலுவலக வேலையை விரைவில் முடித்து விட்டு தனது ஆராய்ச்சிகளில் மூழ்கிவிடுவார். 1905இல் நான்கு ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டார். ஒவ்வொன்றும் புதிய கண்டுபிடிப்புக்களைக் கொண்டிருந்தன.

சிறப்பு சார்பியல் கோட்பாடு, பொருள் ஆற்றல் தொடர்பு, அணு ஆற்றலின் அடிப்படைச் சமன்பாடு ($E = MC^2$), பிரவுனியன் இயக்கம், (Brownian movement), குவாண்டம் கோட்பாடும் ஒளியின் இயல்பும் ஆகியன அவர் கண்டுபிடிப்புக்களில் சிறப்பாகக் கருதப்படுகின்றன.

ஆய்வுக் கூட்டத்தில் ஒரு விஞ்ஞானி என்று ஏற்றுக் கொள்ளப் படாத நிலையில்தான் ஐன்ஸ்டீன் இந்தப் படைப்புக்களை எல்லாம் வழங்கினார். இறுதியில் அறிவியல் சமூகத்துக்கு அவரை ஏற்று சிறப்பிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று ஆயிற்று. 1909இல் சூரிச்சில் அறிவியல்துறை சார்ந்த வேலை கிடைத்தது. 1914இல் பேர்லினில் அவருக்கு பேராசிரியர் வேலை கிடைத்தது. 1916 இல் அவர் சார்பியல் தத்துவத்தின் பொதுக்கோட்பாட்டை (General Relativity) வெளியிட்டார்.


அவர் பிரபஞ்சத்தில் செயற்படுகின்ற பலவகை விசைகளையும் இணைக்கின்ற பொதுத் தத்துவம் இயற்கையில் இருக்க வேண்டும் என்று கருதினார். புவியீர்ப்பு விசைக்கும் மின்காந்த விசைக்கும் தொடர்பு இருக்க வேண்டும் என்று ஊகித்தார். அதற்காகவே தன் வாழ்நாள் முழுவதும் ஆய்வு மேற்கொண்டார். அவருடைய முயற்சி இன்றும் முழுமையடையவில்லை.

ஜேர்மனியில் ஹிட்லரின் தலைமையிலான நாஜிகள் அதிகாரத்துக்கு வந்ததும், பிறப்பால் யூதரான ஐன்ஸ்டீன் நிலை சிக்கலானது. 1932இல் அலுத்துப்போன அவர் பேர்லின் பல்கலைக்கழக வேலையை உதறினார். 1933 இல் இரண்டாவது மனைவியான எல்சாவுடன் அமெரிக்கா சென்று பிரின்ஸ்டனில் வேலை ஏற்றார். 1940 இல் அமெரிக்கக் குடிமகனானார்.

இரண்டாவது உலகப் போர் தொடங்குவதற்கு முன்பே அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டுக்கு அணு ஆற்றலின் சக்தியைப் பற்றி எழுதினார். ஜேர்மனி இத்துறையில் முன்னேறக் கூடும் என்பதையும் அதில் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து அமெரிக்கா அணு சக்தி ஆய்வு பற்றி அதிக அக்கறை கொள்ளத் தொடங்கியது. இறுதியில் அணுகுண்டு தயாரிப்பில் வெற்றியும் பெற்றது.

உலகப் புகழ்பெற்ற இந்த விஞ்ஞானி பிரின்ஸ்டனில் எளிமையான வாழ்க்கையே நடத்தினார். ஏழைகளிடமும் ஒடுக்கப்பட்டவர்களிடமும் அவர் கொண்டிருந்த வாஞ்சை அளவிடற்கரியது. எனினும் அவர் வெறும் உணர்ச்சிபூர்வமான மனிதராக இருக்கவில்லை.

இந்தப் பிரபஞ்சம் திட்டவட்டமான ஒழுங்குமுறையுடன் இயங்கும் ஒன்று என்று இறுதிவரை அவர் நம்பிக்கை கொண்டிருந்தார்.




கைகளைப் பயன்படுத்தி நிஜ உருவங்களைக் ... ஒரு சின்ன விளையாட்டு இது. கடந்த நவம்பரிலும் சஞ் ... இந்தவகையில் சில உருவங்களை உருவாக்கும் வ... கள் குறித்து பிரசுரமாகியிருந்தது. மற்றொரு ... உருவங்களின் விவரம் இதோ. செய்து பாருங்களேன்.

1. யானை.
2. வாத்து.
3. பறவை முகம்.
4. நண்டு.
5. ஆடு.

# கண்டுபிடியுங்கள்!




| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ன் | ட | ட் | பூ | தா | ணா | ண் | அ |
| பா | ந | ட் | க | த் | ர | க் | த |
| ப் | டி | வ | ம | தா | கா | ன் | ள் |
| அ | த் | தா | ன் | னை | ள் | ல | சா |
| ம் | ண் | ள | னி | க | வி | க | ச் |
| மா | ள | ணி | ப | ட | ண | ச | ம |
| மா | மி | ன் | ட | ட் | பா | வ | க |
| சி | த் | தி | த் | ர் | பே | ர | ன் |

**மேலே உள்ள அட்டவணைக்குள் எமது உறவு முறைகள் ஒளித்துக்கொண்டிருக்கின்றன. உங்களால் எத்தனை உறவு முறைகளை வடட்மிட்டுக் கண்டுபிடிக்க முடிகிறது என்று பாருங்கள்!**

-செ.சுதாகரன்-
மட்டுவில் வடக்கு.

(விடை XVஆம் பக்கத்தில்)

# கட்டங்களை நிரப்புங்கள




இந்தச் சங்கிலித்தொடர் கட்டங்களை நிரப்ப நீங்கள் சிரமப்படவேண்டாம். மேலிருந்து கீழ் வரிக்கான குறிப்புக்களை மட்டும் வைத்துக்கொண்டு உரிய சொற்களைக் கண்டுபிடித்து நீங்கள் நிரப்பினால் போதும். இடமிருந்து வலமாக சொற்கள் தாமாகவே பொருந்தி வருவதை காண்பீர்கள்! எல்லாமே மூன்றெழுத்துச் சொற்கள்தான் என்பதை மறந்து விடாதீர்கள்.


மேலிருந்து கீழ்

(1) சேறு.
(2) மானில் ஒரு வகை.
(3) வேறுபாடு.
(4) உங்களுடையது.
(5) அடுத்த.
(6) முற்றும் துறந்தவர்.
(7) பழையது அல்ல.
(8) நாள்.
(9) தென்னை மட்டையிலிருந்து எடுப்பார்கள்.
(10) இடது அல்ல.
(11) யானையின் கழிவு.
(12) இரண்டாவது திதி.
(13) பாண்டிச்சேரிக்கு இப்படியும் ஒரு பெயர்.
(14) சோக.
(15) பெறுமதி மிக்கது: ஜொலிக்கும்.

(விடை XV ஆம் பக்கத்தில்)

# வழிகாட்டுங்கள்!

இங்குள்ள படத்தில் உள்ள இரு சிறிய மீன்களும், சுற... இரையாகாமல் எப்படித் தப்பிச் செல்வது என்று ... கொண்டிருக்கின்றன. உங்களால் அவற்றைப் பத்திரமாக இரு... சேர்த்துவிட முடியமா என்று முயற்சித்துப் பாருங்கள்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்றேடல்

கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை வைத்துக் கொண்டு 21 கட்டங்களிலுமுள்ள சொற்களை நிரப்ப வேண்டும். ஒவ்வொரு சொல்லிலும் வரவேண்டிய "தி" என்ற எழுத்து அந்தந்தப் பெட்டிக்குள் காட்டப்பட்டுள்ளது. உதாரணமாக முதலாவது கட்டத்திற்குரிய சொல் 'திரிபுரம்'. எங்கே உங்கள் கைவரிசையைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | தி | ரி | பு | ர | ம் | | 1. சிவபிரான் அழித்தது. |
| 2. | | தி | | | | | 2. சூழ்ச்சி செய்பவன். |
| 3. | | | தி | | | | 3. கொள்கலன். |
| 4. | | | | தி | | | 4. மானுடர், தேவர், நரகர். |
| 5. | | | | | தி | | 5. ஓர் மாதம். |
| 6. | | | | தி | | | 6. சத்தியவான் மனைவி. |
| 7. | | | தி | | | | 7. மடம். |
| 8. | | தி | | | | | 8 வசிக்கும் இடம். |
| 9. | தி | | | | | | 9. ஈகையாளர்கள். |
| 10. | | தி | | | | | 10. நீதியின் இடம். |
| 11. | | | தி | | | | 11. சாதி. |
| 12. | | | | தி | | | 12. இதுவும் மாதமே. |
| 13. | | | | | தி | | 13. பரிகாரம். |
| 14. | | | | தி | | | 14. அர்ச்சுனன் மனைவி. |
| 15. | | | தி | | | | 15. மகள். |
| 16. | | தி | | | | | 16. பதிவு செய்பவர். |
| 17. | தி | | | | | | 17. ஒரு திதி. |
| 18. | | தி | | | | | 18. அதிகாரியிடம் உள்ளது. |
| 19. | | | தி | | | | 19. மருத்துவர். |
| 20. | | | | தி | | | 20. சங்க இலக்கியம் ஒன்று. |
| 21 | | | | | தி | | 21. முகமன் கூறல். |

(விடை XV ஆம் பக்கத்தில்)

# சொற்களைத் தெரியுமா?

கீழேயுள்ள விளக்கங்கள் குறிப்பிடும் சொற்கள் நான்கு எழுத்துக்களைக் கொண்டவை. அவற்றுக்கு இடையில் ஒரே யொரு எழுத்தில் மட்டுமே மாற்றம் உண்டு. அந்தச் சொற்களைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

1) கூத்து / விளையாட்டு.
2) விருப்பம் / இச்சை.
3) சத்து.
4) கட்டப்பட்டது.
5) ஒன்று சேர்ந்திருப்பது.
6) ஒரு பிரிவு / வளைவு
7) விதிமுறை / ஒழுங்கு
8) தட்டையான பாத்திரம்.
9) தீட்டப்படுவது இது.
10) உழைத்துச் சம்பாதிப்பது.
11) மரங்கள் நிறைந்த பகுதி.
12) நீண்டு இருப்பது.
13) வானில் பறப்பது.
14) கிடையான தன்மை.
15) முதல் இறந்தால் ஏற்படுவது.
16) விருப்பம் / ஈடுபாடு.
17) வட்டத்தின் மையத்தின் ஊடாகச் செல்வது.
18) சோர்வு / மெலிவு.

(விடை XV ஆம் பக்கத்தில்)

## வாழைப்பழம்

சின்னஞ் சிறிய வாழைப்பழம்
சிறுவர் விரும்பும் வாழைப்பழம்
முக்கனி மூன்றில் ஒன்றாகும்
மூத்தோர் விரும்பும் வாழைப்பழம்
மஞ்சள் நிறமாம் வாழைப்பழம்
மக்கள் விரும்பும் வாழைப்பழம்
பச்சை நிறத்திலும் வாழைப்பழம்
பாலர் விரும்பும் வாழைப்பழம்
வாங்கிப்பாரு வாழைப்பழம்
வழவழப்பான வாழைப்பழம்.


# நொடிப்பொழுது

1. அம்மாவுக்கு 32 பிள்ளைகள். யார் அவர்கள்?
2. இரவும் பகலும் ஓய்வதில்லை. ஓய்வும் இல்லை. உறங்கினால் எழுப்ப ஆளில்லை. அது என்ன?
3. நீரிலே பிறந்து நீரிலே மறைவான். அவன் யார்?
4. உயிரில்லாத பறவை ஊர் ஊராய்ப் போய்ச் சேரும். அது என்ன?
5. உச்சாணி மரத்திலே உயர்ந்த கிளையிலே பட்டாணி இருந்து பாக்கு வெட்டுது. அது என்ன?
6. ஊசி குத்திய வைத்தியர் ஊமையாகப் போகிறார். அவர் யார்?
7. உள்ளே இருந்தால் ஓடத்தெரியும். வெளியே வந்தால் விரைவில் மடியும். அது என்ன?
8. ஈரடுக்கு மாளிகையில் இதமான நீருக்குள் இருக்கிறான் வெள்ளைப்பாண்டியன். அவன் யார்?
9. அம்மா சுட்ட கருவாடு ஊர் முழுக்கப் போகுது. அது என்ன?
10. காம்பு கறுப்பன், உடல் சிவலையன். அவன் யார்?

விடைகள்

1. பற்கள். 2. இதயம். 3. உப்பு. 4. ஆகாய விமானம். 5. அணில். 6. தேள் 7. மீன். 8. தேங்காய். 9. பலகாரம். 10. செத்தல் மிளகாய்.

# அருகி வரும் காண்டாமிருகம்



நிலத்தில் வாழும் விலங்குகளில் மிகப்பெரியது யானை. அதற்கு அடுத்தது நீர் யானை. அதனைத் தொடர்ந்து பருமனில் மூன்றாவது இடத்தைப் பெறுவது காண்டாமிருகம். நிறையில் நீர்யானை எடை கூடியது. எனினும் தோற்றத்தில் காண்டாமிருகமே பெரிதாகக் காட்சியளிக்கும்.

இதன் குண்டான, பருத்த உடலுக்கு கால்கள் செவ்வையாக - நேர்த்தியாக - அமையாமல் குட்டையாகவும் பருமட்டாகவும் இருக்கும்.

உடற்தோல் மிகவும் தடித்து தளர்ச்சியாகத் தொங்கிக் கொண்டிருக்கும். தோள், தொடை முதலிய இடங்களில் ஆழ்ந்த மடிப்பு உள்ளதாக இருக்கும். தோலில் மயிர் எங்கோ ஓரிரண்டு காணப்படும்.

காண்டாமிருகத்தில் சில இனங்களில் மூக்கின் மையக்கோட்டில் பெரிது ஒன்றும் சிறிது ஒன்றுமாக இரண்டு கொம்புகள் காணப்படும். வேறு சில இனங்களில் ஓர் கொம்பு மட்டுமே காணப்படும்.

## பிராணிகள் உலகம்


இதனால் இப்பிராணிக்கு மூக்குக் கொம்பன் என்ற கருத்தில் 'ரைனாகிஸ்' என்ற சாதிப்பெயர் விளங்குகின்றது.

காண்டாமிருகங்களின் கொம்பு சற்று வளைந்திருக்கும். அவை ஆடு,மாடு போன்றவற்றின் கொம்புகள் போல வெளியே கொம்புப் பொருள் போன்ற உறையும் உள்ளே பொள்ளல் வெளியும் கொண்ட கொம்புகளன்று. கலை மானின் கொம்பு போல முற்றிலும் எலும்பாலான - கெட்டியான - கொம்புமன்று. அந்தப் பிராணிகளில் காண்பது போல இதன் கொம்பு எலும்பை அடிப்படையாகக் கொண்டு வளர்வதுமன்று.



ஆப்பிரிக்கக் காண்டாமிருகம

காண்டாமிருகத்தின் கொம்பு தோலோடு மட்டுமே தொடர்புடையது. தோலின் மேற்புறணியைச் சேர்ந்து கொம்புப் பொருளாலானது. அதாவது மயிர்கள் கற்றையாக ஒன்று சேர்ந்து கொம்பாக வளர்ந்துள்ளன. முள்ளம் பன்றியின் முட்களும் அழுங்கின் செதில்களும் அவற்றின் தோல் மயிர்களே. அவை மிகக் கடினமாக மாறுபட்டு அவ்வாறு விருத்தியடைந்திருப்பது போல கான்டா மிருகத்திலும் கொம்பாக விருத்தியடைந்துள்ளன.




ஜாவாக் காண்டாமிருகம்

இந்தக் கொம்பு மிகக் கெட்டியாகவும் அதே நேரம் கூரியதாகவும் முடியும். சில அங்குலம் முதல் ஒன்று,ஒன்றரை அடி வரையும் அவை நீளமாக இருக்கும். ஆபிரிக்காவில் உள்ள சில இனங்களில் மூன்றரை அடி நீளம் வரை கூட கொம்புகள் வளரும்.

இந்தக் கொம்புகள் புதர்களை வேரோடு பறித்துத் தள்ளவும், தன்னைக்காத்து, பகையைத் தாக்கவும் காண்டா மிருகத்துக்கு உதவும்.

காண்டாமிருகத்தின் கால்கள் ஒவ்வொன்றிலும் மூன்று விரல்கள் உள்ளன. விரல் நுனியைக் குளம்பு மூடியிருக்கும்.



பெரிய இந்தியக் காண்டாமிருகம்

இவை புல், தழை, கிளை, புதர் முதலிய வற்றைத் தின்னும் தாவரவுண்ணி.

சில இனங்கள் சதுப்புப் புல்வெளிகளிலும், சில காடுகளிலும் வாழும்.

முற்காலத்தில் பூமியின் வடகோளத்தில் ஆசியா, ஐரோப்பா, அமெரிக்காக் கண்டங்களில் பரவியிருந்த இந்தப்பிராணி இப்போது அருகி, தென் கிழக்காசியாவிலும் அதையடுத்த சுமத்ரா, ஜாவா, போர்னியோ ஆகிய தீவுகளிலும் ஆபிரிக்காவிலும் மட்டுமே காணப்படுகின்றது.

பனிக்கட்டிக் காலத்தில் வாழ்ந்த - மயிர் அடர்ந்துள்ள - சடைக் காண்டாமிருகத்தின் முழு உடம்பும் வட சைபீரியாவின் பனிக்காட்டில் புதைவுகளில் உறைந்து போய்க் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

பல இனக் காண்டாமிருகங்கள் இருந்து வந்துள்ள போதிலும் அவற்றில் பல இனங்களும் அழிந்துபோக ஆக ஐந்து, ஆறு இனங்களே இன்று எஞ்சியுள்ளன.

பெரிய இந்தியக் காண்டாமிருகம், சிறிய இந்தியக் காண்டாமிருகம் (ஜாவாக் காண்டாமிருகம்), சுமத்திராக் காண்டாமிருகம், வெள்ளைக் காண்டாமிருகம் என்பனவே தற்போது எஞ்சியுள்ள வகைகளாகும்.

காண்டாமிருகம் சுமார் 17 மாதகாலம் கர்ப்பம் தரித்து ஒரு தடவையில் அனேகமாக ஒரு குட்டி ஈனும்.

இது பருத்த பிராணியாயினும் மிக வேகமாக நடக்கவல்லது. சிறிது தூரம் குதிரைக்குச் சமமாக ஓடவல்லது.

## எங்கள் பாட்டி

பாட்டி எங்கள் பாட்டி
பாயில் காலை நீட்டி
கற்பனையைக் கூட்டி
கதைகள் சொல்லும் பாட்டி

பாட்டி எங்கள் பாட்டி
பல்லில்லாத பாட்டி
பருப்புச்சோறு ஊட்டி
பாசம் காட்டும் பாட்டி

அன்பை முழுதும் காட்டி
அணைத்துக்கொள்ளும் பாட்டி
பட்டுச் சொக்கா மாட்டி
பள்ளி அனுப்பும் பாட்டி.

கி.கல்கிராஜ்

# கேட்பது கிடைக்கும்



சக்கரவர்த்தி அக்பரின் அரசவையில் அவர் தனது நண்பரான பீர்பாலுக்கு முக்கியத்துவம் தருவதைப் பல அதிகாரிகள் விரும்பவில்லை.

ஒருநாள் அரசவையில் முக்கிய அதிகாரி ஒருவர் பீர்பாலைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தார். அதைக்கண்ட அக்பர், "ஏன் நீர் திடீரென்று சிரிக்கிறீர்?" என்று கேட்டார். உடனே அந்த அதிகாரி, "பாதுஷா அவர்களே, தாங்கள் அழகிய நல்ல நிறத்தையுடைய மேனியைப் பெற்றிருக்கிறீர்கள். தங்களுடன் பழகுவதற்கு வாய்ப்புப் பெற்றுள்ள அமைச்சர், அதிகாரிகளும் நல்ல நிறம் கொண்டவர்கள். ஆனால் தங்களுடன் நெருங்கிப் பழகும் இந்தப் பீர்பால் மட்டும் கறுப்பாக இருக்கிறாரே! அது ஏன் என்று நினைத்தேன். எனக்குச் சிரிப்பு வந்தது." என்று பதில் தந்தார்.


அதைக் கேட்ட பீர்பால் இருக்கையைவிட்டு எழுந்து பேசத் தொடங்கினார்.

"கடவுள் தமது மைந்தர்களுக்கு ஒவ்வொரு விதமான வரங்களை வழங்கிவருகிறார் என்பது உலகறிந்த உண்மை. அவர் அவ்வாறு வழங்கும்போது நீங்கள் எல்லோரும் நல்ல நிறம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றீர்கள்.

"நான் நல்ல அறிவை வழங்குமாறு கேட்டுக் கொணடேன். யார் எதை விரும்பிக் கேட்டார்களோ, அவரவர்களுக்கு அததை வழங்கிவிட்டார் கடவுள். அதனால்தான் உங்களுக்கெல்லாம் நல்ல நிறம் கிடைத்தது. எனக்கு அறிவு கிட்டியது" - என்றார்.

எள்ளி நகையாடிய அதிகாரி வெட்கத்தால் தலை குனிந்தார்.

## சூரியனின் குறும்பு!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவலி அது சிலருக்கு தலைவிதி!

சிறப்புக் கட்டுரை

தினமும் பலரையும் ஆட்டிப்படைக்கும் தலைவலி உரியவர்களுக்கு மட்டுமல்ல அவர்களைச் சார்ந்தவர்களுக்குமே பெரியதோர் தலைவலியாக அமைந்து விடுகிறது.

அதுமட்டுமல்ல, இதைப் பற்றிய ஆய்வுகள் கூட வைத்தியர்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் தலைவலியைத் தருகின்றன.

தலைவலி என்றதும் இரண்டு 'பனடோலைப்' போட்டுவிட்டுப் படுத்துவிடலாம். சற்று நேரத்தில் அது மாறிவிடும். ஆனால் மீண்டும் தலைதூக்காமல் விடப்போவதில்லை என்பது தான் பிரச்சினை.

இதை ஒரு மிகச்சாதாரண விடயம் என்று தட்டிக்கழிப்பதா அல்லது தூக்கிக்கொண்டு வைத்தியர்களிடம் அலைவதா? வைத்தியரிடம் போனால் கிடைக்கும் நிவாரணம் நிரந்தரம் என்றில்லை. தலைவலிக்கு சரியான காரணங்கள் அறியப்படவுமில்லை: அதை நிரந்தரமாக மாற்றும் மருந்தும் கண்டுபிடிக்கப்படவுமில்லை.

'விண்,விண்'னென்று மண்டையைப் பிளக்கும் வலி - மண்டையோடு குலுங்கிக் கொட்டப்படும் உணர்வு - இருதயத்துடிப்பைப தலையில் எண்ணலாம் என்ற நிலைமை - கண் முன்னே இருண்டுவரும் கரும்படலம் - ஒளிக் கீற்றாக அசைந்து தெரியும் விம்பங்கள் -

இவை இடைக்கிடை தலைகாட்டி மணிக்கணக்கிலோ, அல்லது நாள்கணக்கிலோ நிலைக்கக்கூடும்; மறைந்து மீண்டும் தென்படும்; தினசரி சாதாரணமான அலுவல்களைக் கவனிக்கவிடாமல் கெடுக்கும்.

இதனோடு போராடிக்கொண்டு அன்றாட அலுவல்களைக் கவனிக்கத் திண்டாடும் பல மில்லியன் மக்களின் தலைவிதியை எவர் மாற்றுவது?

இயன்றவரை தன்னைத்தான் காப்பதைத் தவிர இப்போதைக்கு வேறுவழியில்லை. தாங்க இயலாத வேளைகளில் அடுத்தவர் மீது ஏறிப் பாய்ந்து வெடிப்பதை விடுத்து - ஏதாவது தற்காலிகமாக நிவாரணம் தேடிக்கொள்ள முயற்சிக்கலாம்.

ஆண்-பெண் வேறுபாடின்றி, சிறுவர்-வளர்ந்தோர் என்று இல்லாமல் எவரையும் இது நெருங்கிவிடுகிறது. இன-மத வேறுபாடோ, வசதிபடைத்தோர்- கஷ்டப்பட்டோர் என்றோ, படித்தோர் பாமரர் என்றோ இது பேதம் பார்ப்பதில்லை. எல்லோரும் தலைவலிக்கு ஆளாகி அவஸ்தைப்படுகிறார்கள். அடுத்தவர்களையும் ஆட்டிப் படைக்கின்றார்கள்.



எனினும் பொதுவாக ஆண்களைக் காட்டிலும் பெண்களை இத்தலைவலி அதிகம் பீடிக்கின்றது என்பதும் ஆட்டிப்படைக்கிறது என்பதும் ஆய்வுகளின்படி உண்மையாகின்றது. விஞ்ஞான ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளத்தக்க விளக்கங்கள் இதற்கு உண்டு.

எனவேதான் சில சமயங்களில் பெண்கள் ஆண்களுக்கு பெரும் தலைவலியாகத் தென்படுகின்றார்கள். நிலமை உணர்ந்து பொறுத்துக் கொள்வதும் சமாளிப்பதும் ஆண்களின் கடனே.

தலைவலிக்கு உளவியல் காரணமாக இருக்கலாம் என நீண்டகாலமாக நம்பப்பட்டு வந்தாலும் இதற்கு உடலியல் மாற்றங்களும் முக்கியமான காரணிகள் ஆகின்றன என அண்மைக் கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பெண்களின் உடலியல் ஆண்களுடையதை விட வேறுபட்ட தொழிற்பாடுகளைக் கொண்டுள்ளமை வெளிப் படை. இதற்கு ஏற்பவே அவர்கள் கூடுதலாகத் தலைவலியினால் பாதிக்கப்படுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாக நம்பப்படுகின்றது.



ஆய்வுகளின் போது பெறப்பட்ட புள்ளிவிவரங்களின்படி பெண்களை தலைவலி ஆட்டிப் படைக்கும் விகிதம் ஆண்களைவிட மூன்று மடங்கு அதிகம்.

தலைவலியியில் பல வகைகள் உண்டு. தலையைச்சுற்றி தலைப்பாகை கட்டியதுபோல வலிக்கும் வலி Tension வகைத் தலைவலியாகும். இது கடுமையற்றதாக ஆனால் தொடர்ச்சியான தலைநோவைத்தரும். மணிக்கணக்கில் இது நீடிக்கும் - போகும் வரும் - ஆட்டிப்படைக்கும்.

நோவுக்கான மருந்துகளும் (Pain Killers), அஸ்பிரின் போன்றவையும் இதன் கோரத்தைச் சற்றுத் தணிக்கும்.

இரண்டாவது வகை Cluster தலைவலி. ஒருபக்கமாக கண்களைச் சுற்றியும் அதேபக்க கன்னம் அலகுகளைச் சேர்த்தும் வலிக்கும். இதனால் அக்கண்ணிலிருந்து கண்ணீர் வடியும்; முகம் சினக்கும். இதுவும் சில மாதங்களுக்கு தினசரி தென்படும். சில வாரங்களுக்கு ஒருமுறை வந்து போய்க் கொண்டே இருக்கும்.

மூன்றாவது வகை Migraine எனப்படும் ஒற்றைத்தலைவலி. இதனை தலைவலிகளுள் தலையானது எனலாம். ஒரு கண்ணைச்சுற்றி அப்பக்க மண்டையில் வலிக்கும் பிறைவடிவான பிரதேசம் உயிரை வாங்கும். குறிப்பிட்ட ஒருவருக்கு மண்டையில் ஒரேபக்கத்தில் மீண்டும் மீண்டும் வரும் இது -'சுள் சுள்ளென' ஒவ்வொரு இதயத்துடிப்புடனும் மண்டையில் வலியைத்தரும்.

மேலும் பெண்களில் 18 முதல் 25 வீதம் வரையானோரை இந்த ஒற்றைத் தலைவலி ஆட்டிப் படைக்கிறது. ஆண்களில் 5முதல் 9 வீதம் வரையானோரையும் இது விட்டுவைப்பதில்லை. வயதுவேறுபாடின்றி ஆட்டிப்படைக்கும் இது பெரும்பாலும் பெண்களுக்கு 30 வயதிலும் ஆண்களுக்கு 40 வயதிலும் உச்சமடைகிறது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

எந்த நாளிலும் தென்படும் இது பொதுவாக பெண்களுக்கு மாத விலக்கு ஏற்படப் போகும் காலங்களில் தீவிரமடைகிறது எனலாம். எனவே இக்காலத்தில் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க அவர்கள் பாயும் பாய்ச சலை அடுத்தவர்கள் ஜீரணிக்கத் தான் வேண்டிவரும்.

கண்குறைபாடு காரணமாகவும் தலையிடி அல்லது தலைக் குத்து வரலாம். உரிய கண் சிகிச்சை பெறுவதன் மூலமோ உரிய கண்ணாடி அணிவதன் மூலமோ இதனைத் தவிர்த்துக் கொள்ளலாம். எமது மக்கள் தலைவலியோடு .சீவிக்கவும் - அதனை ஜீரணிக்கவும் பழகி விட்டார்கள். பெரும்பாலும் இதற்கெல்லாம் வைத்திய உதவிதேடி அலையும் பழக்கம் இங்கு கிடையாது. மிஞ்சிப்போனால் 'டிஸ்பிரின்' அல்லது 'பனடோல்' விளம்பரங்கள் கை கொடுக்கும்.

எனவே தலைவலி பற்றிய சரியான புள்ளிவிவரங்களை நமது நாட்டில் பெறுதல் கடினமே.

அமெரிக்காவில் சுமார் 25 மில்லியன் மக்களை இது ஆட்டிப்படைக்கின்றது. இவர்களில் பெரும்பாலானோர் வைத்திய வசதிகளை நாடி வருகிறார்கள்.

இன்னமும் தலைக்குள் நடக்கும் இப் பூகம்பம் பற்றிய ஆய்வுகள் பூர்த்தியடையவில்லை; புதிய மருந்துகளைப் புகுத்தும் உத்தியை மருந்துக் கம்பனிகள் கைவிடவும் இல்லை; தலைவலியும் தீரவே இல்லை.

மேலும்Tension வகைத் தலைவலிக்கு மன உணர்வுகள் முக்கியமாகப் பாலம் அமைக்கின்றன எனலாம். கவலையும் கோபமும் வெடிக்கும் போது ஏற்படும் பாதிப்புக்கள் தலைவலியாக மாறிவிடுவதுண்டு. போதை தெளியும்போது ஏற்படும் தலைவலியும் இதே வகையைச் சேர்ந்ததுதான்.

Migraine ஏற்பட தலைக்குச் செல்லும் குருதிக்குழாய்கள் விரிவடைதலே காரணம் எனப்படுகிறது. விரிவடையும் குருதிக்குழாய் சுவர்கள் அருகிலுள்ள நரம்பு முனைகளை அழுத்துவதால் தலைவலி தோன்றக்கூடும். தொடர்ச்சியான அளவுக்கு அதிகமான கோப்பி மற்றும் தேநீர் அருந்துவதால் அவற்றிலுள்ள அல்க்கலைட்டான கபீன் (caffeine) இரத்தக் குழாய்களைச் சுருங்க வைக்கிறது. திடீரென கபீன் அளவு குறைவுபடும்போது குழாய்கள் விரிதலினால் ஏற்படும் நரம்புகள் மீதான அழுத்தம், தலைவலியாக உருவெடுக்கிறது. எனவே சாதாரணமாக அதிகளவு கோப்பியோ தேநீரோ அருந்துவதைத் தவிர்த்து இதிலிருந்து விடுபட முயற்சிக்கலாம்.

தலைவலி தொடங்கிவிட்டால் வெளிச்சத்தைப் பார்க்கப் பிடிக்காது. இருட்டான இடத்தில் கண்ணை மூடிக்கொண்டு தூங்கச் சொல்லும். சத்தம் தலைவலியைக் கூட்டும். எனவே யாரும் கதைத்துப் பேசிக் கலகலத்தால் கோபம் பொத்துக்கொண்டு வரும். கண்ணைத் திறந்து பார்த்தால் முன்னே இருள் மொய்க்கும். ஒளி வளையங்களும் ஒளிக் கீற்றுகளும் நெளியும். உடல் பலவீனப்பட்ட மாதிரி இருக்கும்.

எதைத் தவிர்த்தால் தலைவலியைத் தவிர்க்கலாம் என்று பட்டியலிட்டுப் பார்க்கப் போனால் சாப்பாட்டில் பின்பு ருசி இருக்காது. விரும்பும் எல்லாவற்றையும் புறம்தள்ளி ஒரு வாழ்க்கை தேவையா என்ற வெறுப்புத்தான் மிஞ்சும். சொக்கலேட், ஐஸ்கிரீம் முதல் வழமையாகப் பாவிக்கும் சீனி, பால்மா, கோதுமை முதலியவற்றைக் கூட தவிர்க்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

அதுவும் வளரும் சிறார்களுக்குச் சாப்பாட்டின் மூலம் தலைவலியைக் கட்டுப்படுத்த நினைத்தால் தேவையான போஷாக்குகள் அனைத்துமே கிடைக்காமற் போய்விடும்.

எனினும் அவரவர் தனக்குத் தலைவலியைத் தரும் உணவினை அனுபவத்தில் அடையாளம் கண்டு தவிர்க்கலாம்.

எவ்வெப்போது தலைவலி அதிகரிக்கிறது? அவ்வப்போது என்ன செய்தோம்? எதைச் சாப்பிட்டு இருந்தோம்? வெயிலில் அலைந்தோமா? மழையில் நனைந்தோமா? தலை கழுவினோமா? 'ஷம்போ'பாவித்தோமா? வேலைப்பளு அதிகமா? என்றெல்லாம் சிந்தித்து தனக்குத்தானே பரிகாரம் தேடிக்கொள்வதுதான் சிறந்த வழியாகப் படுகிறது. தன்னைத்தானே ஆராய்வதைப்போல அடுத்தவர்களாலோ வைத்தியராலோ ஆராய இயலாதுதானே?

Migraine வகைத் தலைவலி பரம்பரையாகக்கூட காவப்படலாம் என நம்பப்படுகின்றது. அப்படியானால் குடும்பமே அவஸ்தைப்படும் நிலைமைகள் எழுவதுண்டு. சிறுவர்களையும் இது விட்டுவைப்பதில்லை. இப்படிப்பட்ட சூழலில் தலைவலி இல்லாத ஒருவர் அகப்பட்டுக் கொண்டால் அவர்பாடுகூட தலைவலிதான்.

**மு.சிவநேசன்**

தனக்கு வரும் தலைவலியைப் பொருட்படுத்தாது கருமம் ஆற்றுபவர்கள் காரியத்தில் கண்ணாகிவிடுகிறார்கள். வேறு கவலை இல்லாதவர்களுக்கு தலைவலி ஒரு பெருஞ் சுமையாகவும் இடைஞ்சலாகவும் தென்படும். அதைப் பற்றியே கவலைப்பட்டும் - அதைத் தூக்கிப் பிடித்தும் - எதையும் சாதிக்க முடியாமலும் தமக்குத் தாமே கற்பனையில் அழிவைத் தேடிக் கொள்பவர்கள் பலரும் இருக்கிறார்கள்.

தாங்க முடியாத தலைவலிக்காக சகிக்க மாட்டாமல் அடுத்தவர்களுடன் துள்ளிவிழுந்து உறவுகளை முறித்துக்கொண்டு செயற் படுவதில் இலாபம் ஏது? எனவே தலைவலி கண்டவர்கள் மனதைப் பக்குவமாக வைத்திருக்கப் பழகிவிடல் வேண்டும். இன்றேல் நிலைமை மேலும் மேலும் மோசமடையுமே தவிர சீரடையாது.

தலைவலி ஒரு நீண்டகாலப் பிரச்சினையாக இருக்கும்போது தகுந்த வைத்திய ஆலோசனை அவசியமாகிறது. ஆனால் தொடர்ச்சியான [illegible] - நீண்டகால - மருத்துவப் பாவனை உடல் நிலையினை வேறு கோணத்தில் மோசமடையச் செய்துவிடும் என்பதனையும் மறந்து விடல் கூடாது.

எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சீரான உறக்கமின்மை, சீரற்ற காலநிலை போன்றவையும் பலருக்குத் தலைவலிக்கு காரணமாகி விடுகிறது. அலுவலக வேலைப் பளு, குடும்பப் பொறுப்புக்களும் சுமைகளும் தவிர்க்க இயலாதவை. இதனால் ஏற்படும் மன மற்றும் உடல் அழுத்தங்களை சாதுரியமாகச் சமாளிக்க இயலாதுவிட்டால் அதுவும் தலை வலியில் போய் முடிந்துவிடும்.

பல்வேறு காரணங்களாலும் உடலில் அதுவும் விசேடமாக மூளைப்பகுதியில் இரசாயனச் சமநிலை பாதிக்கப்படும்போது இரத்தக் குழாய்களில் விரிவு ஏற்பட்டுத் தலைவலி தொடங்கிவிடுகின்றது. மூளையை அழுத்தும் உளவியல் மற்றும் உடலியல் பிரச்சினைகளை தலையில் கையை வைத்தோ- தலைவலி கண்டதும் நெற்றியை அழுத்திப்பிடித்தோ தீர்த்து விடுதல் சுலபமானது அல்ல.


சிறுவயதில் இந்தத்தலைவலி தென்பட்டால் அது கல்வியைப் பெரிதும் பாதிக்கின்றது. அடிக்கடி தலைவலி பாடசாலைக்கு மட்டம் போட வைக்கும் அல்லது படிப்பை வெறுக்க வைக்கும். சிறுவர்களின் தலைவலியை பெரியவர்கள் பொருட்டாக எடுத்துக்கொள்ளாமல் கண்டிப்பாக நடத்த முனைவது அவர்களின் மனநிலையையும் உடல் நிலையையும் மேலும் பாதித்து விடுகிறது.

தனக்கு வந்தால்தான் அது தலைவலி - அடுத்தவருக்கு வருவது வெறும் சாக்குப் போக்கு என்று நினைப்பவர்கள் பலர். பக்குவம் இல்லாதவர்களுக்கு தலைவலி கண்டதும் தம்மைச்சூழ இருப்பவற்றில் குறைகாணத் துடிக்கிறார்கள்; அடுத்தவர் செய்வதெல்லாம் பிழையாகப்படுகிறது; எல்லாம் மாறி விளங்குகிறது. கத்தல், கூச்சல் உச்சமடைந்து குழப்பம் விளைவித்துத் தலைவலிக்கு நிவாரணம் தேடப் பார்க்கிறார்கள். சிறுவர்களின் இத்தகைய இயல்புகளை இனங்கண்டு பக்குவமாகத் திருத்திவிட முயலல் வேண்டுமே தவிர அடுத்தவர்கள் முரண்டுபிடித்து நிலைமையை மேலும் மோசமாக்கக் கூடாது.

இக் கட்டுரையை பலருக்குத் தலைவலியைத் தந்திருக்கும். மருத்துவ விஞ்ஞான உலகினுக்கு இன்னும் பாச்சா காட்டும் தலைவலி நம்மைச் சும்மா விட்டுவைக்குமா என்ன? இதைத்தலைவிதி என்று விட்டு விடாமல் மதியால் வெல்வதே வழி. *

---

## பிச்சைக்காரக் கிழவன்



சிங்காரத்தினுடைய வீட்டுவாயிலில் ஒரு பிச்சைக்காரக் கிழவர் வந்து நின்றார். ஒல்லியான நெடுத்த உருவம்; ஏறிய நெற்றி; பெரிய சந்தனப் பொட்டு; நரைத்து வெளுத்த தலைமுடி. அவரைப் பார்க்க சிங்காரத்துக்கு மறைந்து போன அவரது தந்தையாரின் நினைவு வந்தது."அச்சொட்டாய் என்ரை அப்பு மாதிரித் தான் இருக்கிறார்" என்று சொல்லிக் கொண்டு பெரிய வீட்டுக்குள்ளே போய் ஒருவெள்ளிக் காசைக் கொண்டு வந்த பிச்சைக்காரக் கிழவருக்குப் போட்டார்.

"எனக்கு ஏன் தம்பி இந்த வெள்ளிக் காசு? ஒரு பிடி சோறு போட்டால் போதும்" என்று பிச்சைக்கார கிழவர் சொன்னார்.

**யாழ்ப்பாணத்து நாட்டார் கதைகள்**

"காசை வச்சிருங்கோ நான் சோறும் தாறன்" என்று சிங்காரம் பிச்சைக்காரக் கிழவரை உபசரித்தார்.

காசை வாங்கிக் கொண்டு போன கிழவர் அதனை மருதடிக்குளத்துக்குள் எறிந்துவிட்டுப் போனார். மறுநாளும் பிச்சைக்காரக் கிழவர் சிங்காரத்தினது வீட்டுக்கு வந்தார். அதே நிகழ்ச்சி நடந்தது. சிங்காரம் சோறும் வெள்ளிக் காசும் கொடுத்தார். பிச்சைக்காரக் கிழவர் சோற்றைச் சாப்பிட்டு விட்டு வெள்ளிக் காசை மருதடிக்குளத்துக்குள் எறிந்து விட்டுப் போனார். பல நாள்களாக இது தொடர்ந்து நடந்தது.

சில நாள்களுக்குப் பின் பிச்சைக்காரக் கிழவர் வரவில்லை. அவர் எந்த ஊருக்குப் போனார் என்று தெரியாது.

அந்த வருடம் பருவமழை பெய்யவில்லை. மருதடிக்குளத்தைச் சுற்றியுள்ள சிங்காரத்தின்ரை வயல்கள் விளையவில்லை. மருதடிக்குளம் வரண்டு குளத்தடிக் களி காய்ந்து வெடிக்கத் தொடங்கியது. தான் கொடுத்த வெள்ளிக் காசுகள் அங்கே கிடப்பதை சிங்காரம் கண்டார். அவ்வளவையும் பொறுக்கி எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போனார்.

தொகுப்பு:
*கலாநிதி சபாஜெயராசா.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் மான்



காரியாலய வேலைகளின் சுமை மனதிலிருந்து இறங்கிவிட, வீட்டு வேலைகளின் சுமை மனதில் ஏறி அமர, நானும் காரியாலயத்திலிருந்து வீட்டுக்குச் செல்வதற்காக சைக்கிளில் ஏறி அமர்கின்றேன்.

"அப்ப ஈஸ்வரி றைஸ் குக்கரைப் பற்றி யோசிச்சு நாளைக்கு முடிவு சொல்லும்" என்றபடி தன் சாவியை எடுத்தாள் ரேணு.

மதிய உணவு நேரத்தில் நானும் ரேணுகாவும் செளமியாவும் ஒன்றாக அமர்ந்து உணவருந்துவது வழக்கம். இன்று அந்தவேளையிலேதான் எமது உரையாடல் அங்கு, இங்கு போய், அதிகாலையில் எழுந்து மதிய உணவைக்கூடத் தயாரித்து எடுத்து வருவதிலுள்ள கஷ்டங்களில் வந்து நின்றது.

"இப்பதானேஎலெக்றிசிற்றி யாழ்ப்பாணத்துக்கு வந்திட்டுது... ஒரு றைஸ் குக்கர் வாங்கினால் எவ்வளவோ சுகம்."

ரேணு கூறினாள்.

"எங்களுக்கின்னும் உருப்படியான கறன்ற் வரேல்லை. ஒண்டவிட்ட ஒரு நாள் இரண்டு மணித்தியாலம் லைற் எரியுமெண்டு எதிர்பார்த்து அதுவுமில்லாமல் ஏதோ பேருக்கு..." செளமியா தன் வயிற்றெரிச்சலைக் கொட்டினாள்.

"எங்களுக்கும் முந்தி உப்பிடித்தான். இப்ப பிரச்சினை இல்லை. சாந்தியக்கா தன்ரை மச்சாளின்ரை றைஸ்குக்கர் விக்கக் கிடக்கெண்டவ... உமக்கு வேணுமே ஈஸ்?"

ரேணு என்பக்கம் திரும்பிக் கேட்டாள்.

"செளமியாவைக் கேட்கேலாது... என்ன?" நான் சிரித்தபடி கேட்டேன்.

"அசலாய் இருக்கும். றைஸ் குக்கரிலை அரிசி போட்டு விறகடுப்பிலை வைச்சு அவியவிட்டு வடிக்கவேணும்" என்று சொல்லி செளமியா சிரித்தாள்.

நாங்களும் சேர்ந்து சிரித்தோம்.

"ஈஸ்வரி உமக்கு றைஸ் குக்கர் வேணுமோ? அதைச் சொல்லும்" தொடங்கிய இடத்திற்கே ரேணு வந்து நின்றாள்.

"யோசிச்சு சொல்லுகிறன்...."

"இதிலை யோசிக்க என்ன இருக்கு? செக்கன்ட் ஹான்ட். சீப்பாய் வாங்கித்தருவேன். உமக்கும் சமைக்க வசதியாக இருக்கும்" ரேணு சார்பான விடயங்களை கோவையாகக் கொட்டினாள்.

"எனக்கெண்டா யோசிக்க நிறைய இருக்கிற மாதிரி இருக்கு. சீதையையும் இராமனையும் மாரீசன் ஒரு முறைதான் ஏமாத்தினவன். யாழ்ப்பாணத்துச் சனம் எத்தனை பொன்மான்களைக் கண்டு விட்டனம். ஆனாலும் இண்டைக்கும் பொன்மானைக் கண்டால் ஆசைதான்..." என் சினத்தைச் சிரிப்பாக்கி நான் கூற –

"ஈஸ், நீ சொல்லுகிற கதையொண்டும் எனக்கு விளங்காதாம்... நேரடியாய்ச் சொல்லுறதைச் சொல்லுமன்" என்று ரேணு இடைமறித்தாள்.

"நாங்கள் திரும்ப யாழ்ப்பாணம் வந்த பிறகு இலவசமாய் மின்சாரம் தந்து என்னமாதிரி பாவிச்சனாங்களா? என்னமாதிரி பிரகாசமாய விளக்குகள் எரிஞ்சுது? நாங்கள் அவசரப்பட்டு எலக்றிக்கல் சாமான்கள் எல்லாம் பாவிக்கலாமெண்டு தேடத்தொடங்க, விளக்குகள் மின்மினியாய் மினுங்கத் தொடங்கி, இடைவிட்டு எரிந்து, ஒன்றுவிட்டநாள் எரிந்து, அந்த நாள்களிலும் ஒன்றிரண்டு மணித்தியாலமாகி..."

"போதும்...போதும்...இப்பசரிதானே" எனது பேச்சைக்கேட்கப் பொறுமையற்று ரேணு இடைநிறுத்தினாள்.

"ஓமோம்...கப்பலோடாட்டால் தெரியும்....உந்த வீதியோர மரக்கன்றுகளை படவிட்டமாதிரி எங்கடை பொருளாதார வளர்ச்சிக்கான முயற்சிகளை ஒவ்வொரு பெரிய பிரச்சினைகளோடை நாங்கள் அப்படியே அழிஞ்சுபோக விட்டு விடுகிறம். இப்ப கப்பல் வராட்டா எதுவுமே கிடைக்காதெண்ட நிலை.." நான் எனது வேதனைகளைக் கொட்டத் தொடங்க மீண்டும் ரேணு குறுக்கிட்டாள்.

"எனக்கு உதுகளைப்பற்றி கவலையில்லையப்பா. உனக்கு உதவியாயிருக்குமெண்டுதான் கேட்கிறன். றைஸ்குக்கர் வேணுமோ?"

அவளுக்கு எனது உபதேசத்தை கேட்க விருப்பமில்லை, பொறுமையில்லை என்பதை அவளது குரலே உணர்த்தியது.

"அதுதான் யோசிச்சுச் சொல்லுறன் எண்டனான்"

நானும் உறுதியாகக் கூறினேன்.

இதைத்தான் இப்போதும் நினைவூட்டிவிட்டு அவள் போனாள்.

"வாங்குவதா? விடுவதா?" மனம் தீர்மானம் எடுக்கத் தயங்குகின்றது.

கஸ்தூரியார் வீதியிலிருந்து நாவலர் வீதிக்கு திரும்புகின்றேன். எதிரே ஒரு கடையில் மூன்று நான்கு குளிர்சாதனப்பெட்டிகள் புத்துருவம் பெற்றுக் கொண்டிருக்கின்றன.

அழகான ஒரு கார் குண்டுங் குழியுமான வீதியில் 'விதியே' என்று வந்துகொண்டிருக்கின்றது. இரண்டு மூன்று மோட்டார் சைக்கிள்களும் வேகமாக வருகின்றன. வீதியின் ஓரமாக சைக்கிளை ஓட்டினேன். கழிவு நீர் வாய்க்கால் இடிந்து வீழ்ந்து வாய்க்காலில் போகும் கழிவு நீருக்கு அதுவே தடையாகக் கிடக்கிறது.

1996 இன் பின் இரண்டு முழு ஆண்டுகள் முடிவுற்றுவிட்டன. என் மனம் கணக்குப்போடுகிறது.

1996! மறக்கமுடியாத ஆண்டுகளுள் அதுவும் ஒன்று. றைஸ்குக்கர் அந்த மறக்கமுடியாத நாளின் ஒரு நிகழ்வை காந்தம் இரும்பை மட்டும் இழுத்தெடுப்பது போல் இழுத்தெடுத்து நினைவில் நிறுத்துகிறது.

இடம்பெயர்ந்து நாங்கள் சென்றிருந்த வீட்டில - சாவகச்சேரியில்- இருக்கின்றோம். இராணுவம் வருகிறதென்று அறிந்து அங்கிருந்து உசனுக்குப் போய் நின்றுவிட்டு, அன்றுதான் திரும்பியிருந்தோம். மூன்று நாள்களுள் அந்த வீடிருந்த நிலையைப் பார்த்ததுமே எனது வீட்டைப்பார்க்க ஓடிவந்த ஆவல் மெல்ல மெல்லத் தணிகிறது.

அப்போதுதான் தண்ணீர் கேட்டு சீருடையில் ஒருவன் வந்தான். நட்புறவோடு அங்கிருந்தவர்களுடன் உரையாட ஆரம்பித்தான்.

"இனிக் கஷ்டப்படத தேவையில்லை. மின்சாரமெல்லாம் வரும்"

சிங்களத்தில் அவன் கூறிக் கொண்டிருந்தான்.

"மின்சாரம் வரும்" என்பதற்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை நான் அவதானித்துக் கொண்டிருந்தேன்.

"என் வீடு இருக்கிறதா மின்சார இணைப்புப் பெற?"

என் மனதில் உடனே ஒரு வினா மேலெழுந்து வந்தது.

'நீங்கள் இழந்தது மின்சார வசதியை. அதை மீண்டும் தருகின்றோம்' என்று கூறுகிறார்களா?

'இந்த வசதியை நாடியா நாம் வந்திருக்கின்றோம்?'

எனது இதயம் மின்சாரத்தை தொட்டு விட்டதுபோல் அவஸ்தைப் பட்டது.

**யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**

'இந்த வசதியைத் தேடியா நாம் வந்திருக்கிறோம்?'

இந்தக் கேள்வியை நாள் செல்லச் செல்ல, மீண்டும் மீண்டும், என் மனம் கேட்டுக்கொண்டே வந்தது. ஆனால் கேட்கும் தொனி நாளுக்கு நாள் மாறுபட்டுக்கொண்டிருந்தது.

வீடியோ கசற் கொடுக்கும் கடையிலிருந்து டெக்குடன் புறப்பட்ட இளைஞன் ஒருவனின் சைக்கிள் இடையே வர – சைக்கிளுக்கும் என் நினைவோட்டத்திற்கும் சேர்த்து பிறேக் போட்டேன். கடைமுன் இளைஞர் கும்பல். இவனும் திடீரென்று வந்தால்....

சினிமாத் தியேட்டர்கள், மினி சினிமாக்கள் எல்லவற்றுடன் இந்தக்

(XII ஆம் பக்கம் பார்க்க)

# சஞ்சீவி சிறுகதைகள்

## பரிகாரம் தேடி...

சிவத்துக்கு அப்புக்குட்டி ஆச்சியிடம் பாசம் அதிகம்.

ஆச்சி "இம்" மென்று இருமினால் கூட 'என்ன?, ஏது?' என்று ஓடிவந்து விசாரிப்பான்.

அப்புக்குட்டி ஆச்சிக்கு சொந்த ஊர் தையிட்டி.

ஆச்சிக்குப் பிள்ளைகள் இல்லை. கட்டிய புருஷன் செத்து விட்டபிறகு, பெறாமக்கள் வீட்டில் இருந்து வந்தவள், 1990 களில் 'சூரியப்பிரகாசம்' இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்தாள்.

தறிகெட்டு, இடம்பெயர்ந்தவர்களோடு, இடம்பெயர்ந்தவள் எங்கே போவதென்று தெரியாமல் திகைத்து கடைசியில் எப்படியோ இந்தக் கொட்டில் வீட்டைப் பிடித்துக் கொண்டாள்.

1995 இடம்பெயர்விலும் ஆச்சி அலைக்கழிந்து போனாள். இந்த எண்பது வயதிலும் எப்படித்தான் போனாளோ, எப்படித்தான் வந்தாளோ?

இத்தனை வருஷங்களாயும், ஆச்சி தன் சொந்தக் கையால் தான் சமைத்துச் சாப்பிடுகிறாள். (ஆண்டவனின்) குழந்தையாக அரசாங்கம் நினைத்துக் கொடுக்கும் நிவராணப் பால்மாவை வாங்க ஒவ்வொரு முறையும் கிழவியின் குடிசைக்கு முன்னால் சிறு கூட்டம் கூடும்.

"எனக்குக் குடனை... எனக்குக் குடனை..."

ஆச்சி பார்ப்பாள்.

"சிவம்... "

சிவம் ஓடிவருவான். அவனுக்குப் புரிந்துவிடும். உடனே ஏலம் போடுவான். கூட்டத்தில் அரைவாசி புறு புறுப்புடன் கலைஞ்சு போகும். ஏலம் போட்ட காசை ஆச்சியிடம் கொடுப்பான். ஆச்சி அவனுக்குத் திருஷ்டி கழிப்பாள்.

ஆச்சியிடம் சிவம் இத்தனை பாசம் வைத்திருந்தாலும் இராசலிங்கத்தாருக்கு அவ்வளவாக ஆச்சியிடம் அக்கறையில்லை.

தன் மகனை ஆச்சிஎடுபிடி வேலை வாங்கக் கூப்பிடுகிறாளே என்று தான் பொருமுவார்.

"ரெட்கௌவ்" ஏலம் விடுவானேன்? எங்குளுக்குத் தந்தால் என்ன? என்று கூட சிலவேளை நினைப்பார்.

***

அன்று சிவம் வழமைக்கு சற்று அதிகமாக தூங்கிவிட்டான. கிழவியின் கூரை ஒழுகுவதால் அதைத்திருத்த வேண்டும் என்று நினைத்திருந்தான். அதற்காக கிடுகு விலை எல்லாம் பேசிமுடித்து கிடுகு வாங்கவேண்டியதுதான் பாக்கி!

**சி.சோ.பதந்தன்**

பாயிலிருந்து எழும்பி கண்களைக் கசக்கிக்கொண்டு கொட்டாவி விட்டான். சுற்று வட்டாரத்தில் நாய்கள் அமளியாகக் குரைக்கவும் தலையை மெதுவாக நிமிர்த்தினான்.

"டொக்...டொக்..." என்று காலடி ஓசைகள்......

இல்லை.

பூட்ஸ் ஒலிகள்!

"சிவம்.........."

அந்தக் கல்வீட்டிற்குச் சற்றுத் தள்ளியிருக்கின்ற குடிசைக்குள் இருந்து குரல் கேட்கிறது.

கல்வீட்டில் இருந்து சிவம் பாய்ந்து ஓடுகிறான் - கன்று தாய்ப் பசுவிடம் போகின்ற வேகத்தில்.

அந்தக் கல்வீடு -

அதுதான் இராசலிங்கம் குடும்பம் குடியிருக்கின்ற வீடு.

இந்தக் குடிசை -

கூரை எங்கும் ஊசித்துளைக் கமரா பூட்டியிருக்கும். அங்கேதான் அப்புக்குட்டி ஆச்சி வசிக்கிறாள்.

அவளுக்கு சொந்தம் என்று இங்கு யாருமே இல்லை.

தேவையென்றால், சிவத்தைத் தான் அழைப்பாள்.

சிவம் - இராசலிங்கத்தின் கடைசி மகன். அவனுக்கு படிப்பு ஓடவில்லை என்பதால், 'இத்தனை சொத்தையும் வித்து சோறுதின்ன இது, போதும்' என்று இராசலிங்கம் சொல்லி விட்டார்.

வேலிக்கு மேலால் சட்டி போல இரண்டு தொப்பிகள் தெரிகின்றன. வீட்டுப் படலை தட்டப்படுகிறது. இராசலிங்கத்தார் போய்த் திறக்கிறார்..

"ஓய். இண்டைக்கு ரவுண்டெப். எல்லோரு முறுகன் கோயில் போங்க.. ....."

சிவத்துக்கு எரிச்சல் வருகிறது.

"கண்டறியாத ரவுண்டப் யாரைத் தான் புடிக்கிறான்களோ...?"

ஒரு சீருடை வீட்டுக்குள் வந்து எட்டிப்பார்த்துவிட்டு "உம்..உம்..."என்று உசார்ப்படுத்துகிறது.

***

எல்லோரும் முருகன்கோயிலுக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள் அந்த முருகன் ஒரு நாளும் இவ்வளவு 'பக்தர்'களைக் கண்டதில்லை. சிவத்தின் குடும்பத்தார் அலை அலையாக, ஊராரோடு ஊராராக தூரத்தில் தெரிய--

சிவத்தின் கால்கள் பின்னின.

அவன் 'ஐடியா' எல்லாம் வேறாக இருந்தது. 'இந்த ஒழுங்கையால் போனால் கிடுகுக்கார மணியத்தின் வீடு வரும். பேசாமல் இந்த ஒழுங் கைக்குள் போய் நின்றுவிட்டு ரவுண்டப்புக்கு எல்லோரும் போய் முடிய, கிடுகை வாங்கிக் கொண்டு போய் ஆச்சியின்ரை குடிசையை வேய்ஞ்சு போட்டா... ரவுண்டப் முடிஞ்சு ஆச்சி வந்து புதுக் குடிசையைப் பார்த்து எவ்வளவு சந்தோசப்படுவ.....!'

அலை அலையாகக் கற்பனைகள் வந்தன. உற்சாகம் உலுக்கியது. சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ஒழுங்கைக்குள் புகுந்து.... விறு விறு வென நடந்தான்.

ஒரு சிறிய திருப்பம் வந்தது. அதில் பதுங்கிக்கொண்டு நின்று றோட்டால் போகின்றவர்களை பார்த்த போது சிரிப்பு வந்தது.

'அட சுந்தரம் வாத்தியா நடந்து போறார். உங்கை மலரக்கா சைக்கிளை உருட்டிக்கொண்டு போறா'

தனது திறமையை நினைத்த போது சிவத்துக்கு பெருமை பிடிபட வில்லை.

கலைந்த மயிரைக் கோதிக் கொண்டு, வழிந்திருந்த கடவாயை துடைத்துக்கொண்டு, உருவாகியிருந்த பூளையை துடைத்துவிட்டு, [illegible] தான்.

எல்லோரும் போய் வெறுமை வந்த பிறகு -

இனி 'மணியம் அண்ணவீட்ட போகலாம்'

சாரத்தை மடித்து 'கொடுக்கு' பிளானாக கட்டியபோது அப்புக்குட்டி ஆச்சி மனதில் திருஷ்டி கழித்தாள்.

மெதுவாக நடந்தான். மணியமண்ண வீடு பூட்டியிருக்க - தனது பாமரத்தனத்தை எண்ணித் தானே நொந்து கொண்டான்.

மணியமண்ணையும் ரவுண்டப்புக்குள்ளை ஆப்பிட்டுப்போனாரோ?"



வீட்டில் பின்கோடியில் கிடுகுகள் கட்டுகளாக்கப்பட்டு சாய்ந்திருக்க சிவத்திற்கு கைகள் கடுகடுத்தன.

ஒரு குட்டைநாய் ரவுண்டப் தெரியாமல் வாசலில் படுத்துக் கிடந்தது.

சிவம் கூப்பிட்டான்.

"மணியமண்ண,"

நிசப்தம்!

"மணியமண்ண "

மீண்டும் நிசப்தம்!

பதில் இல்லை. குட்டைநாய் மட்டும் தலையைத் துக்கிப்பார்த்து விட்டு படுத்துக்கொண்டது.

கடைசியாக ஒரு தடவை காற்றைக் கனமாக உள்வாங்கித் வார்த்தைகளை உச்சரிப்பதற்குள் 'திபு திபு' என, எங்கிருந்தோ வந்து சூழ்ந்து கொண்டார்கள். இன்ஸ்பெக்டர் முன்னாலேயே, கொலை செய்தவன்

(XII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வார இராசி பலன்

**27-02-1999 முதல் 05-03-1999 வரை**

| | | | |
|---|---|---|---|
| வெ வி சனி | | | |
| சூ ▲ புத | இராசிச் சக்கரம் | | சந்ரா |
| கே | | | |
| | | செவ் | |

### மாற்றம்:

*27-02-1999 இல் பூசம், கடக இராசியில் நிற்கும். 05-03-1999 இல் சனி-மேட இராசியில் மாறும்.*

*'உதட்டளவில் சமாதானம்-உள்ளத்தில் கள்ளமிருந்தால் அரசியலில் விடிவு வராது.'*

*தெற்கில் தேர்தலால் பதற்றம். வடக்கிலும், கிழக்கிலும் யுத்த நிலை. அரசியலில் பலவித அபிப்பிராய பேதங்களால் - அரசியல் வாதிகள் நிலைமாறி நிற்பர்.- மாணவர்கள், தொழிலாளர்கள், மக்கள் மனக்குழப்பம் அடைவர்-வெளிநாடுகளின் ஆலோசனைகள், அழுத்தங்கள் அதிகரிக்கும். இந்தியாவில் வடக்கு-தெற்கு இழுபறி, அரசியல் பீடங்களின் மாற்றங்கள் நிகழும். திருமதி சோனியா காந்திக்கும், செல்வி ஜெயலலிதாவுக்கும் அரசியல் செல்வாக்கு அதிகரித்தபடி இருக்கும்.*

*மேற்குலகில் அமெரிக்க ஜனாதிபதிக்கு நல்லதல்ல. கருத்து வேற்றுமைகள் அதிகரிக்கும். மத்திய கிழக்கில் யுத்த நெருக்கடி பரவ ஆரம்பிக்கும். எதிர்விளைவுகள் பதற்றத்தைக் கொடுக்கும். கிழக்கில் பொருளாதார அழுத்தம் தொடர்ந்தபடி இருக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.*

## மேடம்:

எம்மிடம் அன்பு கொண்டவர்கள், அடைக்கலம் புகுந்தவர்கள், பயந்த-பலவீனமானவர்கள் ஆகியோருக்கு உதவிகள் செய்ய வேண்டும் எனச் சொல்லி அவர்களுக்காக அவர்களின் விடிவுக்காகப் போராடுவீர்களே! நிர்வாக ஆற்றல் மிகுந்த உங்களுக்கு பலவித சவால்கள் தொழில் ஸ்தானத்தில் வரத்தான் செய்யும். எதிர்கொண்டு செயற்படுங்கள். வெற்றி தானாக வரும். தொழில் முடக்கம் எனக் கலங்காதீர்கள். ஏதோ வரவு செலவு வண்டில் தானாக ஓடிக் கொண்டுதான் இருக்கும். கோபத்தை பாசத்திடம் காட்டாதீர்கள். நிதானத்துடன அமைதியாகுங்கள். மூட்டுவலி, அடிவயிற்றுவலி, நெஞ்சுநோ, வயிற்றுப்பொருமல், வாய்வுத்தொல்லை என்பன அடிக்கடி கொடுக்கலாம். அதிக தாக்கம் இருக்காது. ஆனால் அலட்சியமாக இருக்காமல் அந்தந்தக் காலத்தில் வைத்தியம் செய்யுங்கள்.

*அதிர்ஷ்டநாள்:* புதன்,வியாழன், வெள்ளி.

## இடபம்

தகுதிக்கு மீறி ஆசைப்படக் கூடாது என அடிக்கடி சொல்லுவீர்களே? கிருஷ்ணபரமாத்மா பிறந்த இராசியாச்சே! அமைதியாகக் காத்திருந்து செயற்பட்டபடி இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் சிலர் வீண் இடைஞ்சல் கொடுத்து உங்களிடம் வீணாக வாக்குவாதப்பட இடமுண்டு. பொறுமையாக இருக்கவும். அதிக கோபத்தைக் காட்டி மற்றவர்களின் புகைச்சலுக்கு ஆளாகாதீர்கள். உழைப்பில் ஊக்கத்திற்குத் தகுந்த நன்மைகள் கொடுத்தபடி இருக்கும். உடல் பலவீனம், மன உளைச்சல், நரம்புப்பலவீனம், இருதயநோய், சலவருத்தம், கைகால் உளைவு என்பன கொடுத்தபடி இருக்கும். குடும்பத்தினரின் நன்மைக்காக பொருள் விஷயமான பேச்சுக்களோ அல்லது செயற்பாடுகளோ இருக்கச் செய்யும். தூரதேசப்பிரயாணங்கள், மாற்றங்கள் சிலருக்கு நன்மைகளைக் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்:-* புதன்,வியாழன், வெள்ளி.

## மிதுனம்

ஒருவர் பிரபல்யம் ஆகும்போது அடிக்கடி ஒரு கிறுக்குப் புத்தியும் தேடிவரும். பணம், பட்டம், பதவிகள் வரும்: போகும். அதற்காக நிதானப் புத்தியை இழந்துவிடக்கூடாது என அடிக்கடி எண்ணுகிறீர்களா? தொழில் ஸ்தானத்தில் ஓடி ஓடி மிகத் தீவிரமாக நீதி, நியாயத்துடன் செயற்பட்டு வருவீர்கள். எழுத்துத் துறை, பத்திரிகைத்துறை, குருத்தொழில், தோட்டவேலைகள், வாகனத் துறையுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு நன்மையான பலன்கள் கொடுக்கும். கைகால் பிடிப்பு, நெஞ்சு வலி, தலை வலி, வாதஉளைவு, வயிற்று வருத்தங்கள் கொடுக்கும். இடமாற்றங்களால் பொருள் இழப்புக்கள் ஏற்படும். குடும்பத்தினருக்காக உழைத்தபடி எப்பொழுதும் இருக்கும் சுபாவ சிந்தனை கொடுக்கும். வாக்குக் கலக்கத்தால் வீண் பகை ஏற்படும். நிதானமாக இருக்கவும்.

*அதிர்ஷ்டநாள்:-*புதன்,வியாழன், வெள்ளி.

## கடகம்

எந்த அலுவலையும் மிகச் சுலபமாக, சந்தர்ப்பத்திற்கு ஏற்ற விதமாகச் செய்து முடித்து விடுவீர்கள்! உங்கள் புத்திசாதுரியத்தை வாழ்த்தாமல் இருக்க முடியாது. வாழ்வில் பல தோல்விகளைக் களம் கண்டு விடாமுயற்சியால் தொடர்ந்து கொள்கைகளை நிலைநாட்டிச் செல்லும் திறன் கொண்ட உங்களுக்கு சோதனைகள் பல இக் காலத்தில் வந்து மனவேதனைகளை அள்ளித் தந்து விடும். நல்லவர் குடும்பத்தில் சிலர் உறவாடிப் பகையை உருவாக்கி விடுவர். அதைத் தடுக்க முற்பட்டு வேதனை அடைவீர்கள். நெஞ்சுப் படபடப்பு, இரத்த சம்பந்தமான ரோகங்கள், உஷ்ண பீடைகள், அடிவயிற்றுநோ என்பன கொடுக்கும். உணவு விஷயத்தில் நிதானமாக இருக்கவும்.

*அதிர்ஷ்டநாள்:*புதன்,வியாழன், வெள்ளி.

## சிங்கம்

திட்டங்கள் பல தீட்டினாலும் சட்டங்கள் பல போட்டு தடுக்கும் கூட்டம் நேர்மையில்லாமல் இருப்பதனால் உங்கள் நிர்வாகத் திறமைக்குச் சோதனைகள் வந்துவிடும் காலமாகும். கலங்காதீர்கள். உங்கள் உறுதி நிலையாலும், இறை சக்தியாலும் பல கண்டங்களை தொழில் ஸ்தானத்தில் இலகுவாகத் தாண்டி விடுவீர்கள். தெய்வ வழிபாடு தொடர்ந்தபடி இருக்கும். முகஸ்துதிக்கு மயங்காதீர்கள். அதனால் தேடிவரும் கஷ்டங்களால் வாடிவிடுவீர்கள். நெஞ்சுநோ, உஷ்ண பீடைகள், மூலச்சூடு, கண்ணெரிவு, கைகால் பிடிப்பு என வருத்தங்கள் வருத்தலாம். தகுந்த வைத்தியம் செய்து வரவும். தூரதேசப்பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். பொருளில் நிதானமாக இருக்கவும்.

*அதிர்ஷ்டநாள்:-*புதன்,வியாழன், வெள்ளி.

**மகாதேவா ஜோதிடம்**

## கன்னி

சூழ்நிலைக்குத் தக்கதாக மாறி வேதனைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். காலவெள்ளத்தில் கடுகதி வேகத்தில் செல்லவேண்டி ஏற்படலாம். மாறி மாறி வரும் சுழல் சக்கர வாழ்க்கையில் துன்பமும் இன்பமும் சர்வசாதாரணமாகும். இன்பத்தை ஏற்கும் நாம், துன்பத்தையும் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். உங்கள் செல்வாக்கால் தொழில் ஸ்தானத்தில் உயர்வு, தாழ்வு ஏற்படச் சந்தர்ப்பங்கள் வரும். பயந்து, பயந்து இருப்பதனால் எந்தவிதமான நன்மைகளும் ஏற்படாது. நரம்புத் தளர்ச்சி, கைகால் பிடிப்பு, இரத்த சம்பந்தமான வருத்தங்கள், சளித்தொல்லை என்பன சிலருக்கு அடிக்கடி கொடுத்தபடி இருக்கும். கிரகதோஷம் இருப்பதனால் நவக்கிரக பிரீதி செய்யவும். மாதாவை வழிபட்டு ஏழைகளுக்குத் தானம் கொடுத்து வர கஷ்டங்கள் படிப்படியாக குறைந்துவிட இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்:* புதன்,வியாழன், வெள்ளி.

## துலாம்

வாழ்க்கையில் சில தவறுகள், தப்புக்கள் நடக்கத்தான் செய்யும். அதைப் பொறுக்காது பெரிதாக்கினால் அதனால் கஷ்டங்கள் வராமல் விடுமா? தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டிகள் ஏற்பட்டு அடிக்கடி உணர்ச்சி வசப்படுவீர்கள். பக்கத்தில் இருப்பவர்கள் சீண்டி விட்டுப் பார்ப்பார்கள். பந்தபாசத்தால் இடம் மாறிச் செல்லவோ, கடன்படவோ சிலருக்குச் சந்தர்ப்பங்கள் ஏற்பட இடமுண்டு. நம்பிக்கை அற்ற வாழ்வு கலக்கத்தைத் தரும். மனதில் உறுதியற்று செயற்படுவதனால் நன்மை நடக்குமா? சமாதானம் பேசுவதனால் சமாதானம் வருமா? தலைவலி, வயிற்றுக்கோளாறு, குடல் உபாதைகள், வாய்வுத் தொல்லைகள், ரணபீடைகள், காயங்கள் என்பன சிலருக்கு வரலாம். தகுந்த வைத்தியம் செய்து வரவும்.

*அதிர்ஷ்டநாள்:*புதன்,வியாழன், வெள்ளி.

## விருச்சிகம்

உலகில் அவரவர் தன்தன் சுபாவங்களை விடவேமாட்டார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சுபாவம், தன்மைகள் இருக்கும். உலகில் நலிந்தவர்களுக்காக உங்களையே தியாகம் செய்யும் சுபாவம் உங்களுக்கு உண்டு. தொழில் ஸ்தானத்தில் தீவிர முன்னேற்றமும் உழைப்பும், அதேபோன்று போட்டிகளில் மூர்க்கத்தனமாக, உறுதியாக எதிர்த்து நின்று முன்னேறி வருவீர்கள். எதிலும் தீவிரம்தான். உங்கள் வாழ்வில் இதைக்கண்டு எல்லோரும் ஒதுங்கி விடுவார்கள். நல்லவர்களுக்கு சோதனை அதிகம்தான். அது நன்மைக்குத்தான். நல்லவர்களுக்கு நல்லவராகவும், தீயவர்களுக்கு தீயவராகவும் தெரியும் உங்கள் செயற்பாடு பாவ புண்ணியங்களை தரவல்லது என்பதை மறவாது காரியங்களைச் செயற்படுத்துங்கள். நெஞ்சுவலி, கிருமித்தாக்கம், சளி, நெஞ்செரிவு, முதுகு வலி, வாய்வுத் தொல்லை என்பனவும் உஷ்ண பீடையும் இருக்கும் காலமாகும்.

*அதிர்ஷ்டநாள்:-* புதன், வெள்ளி.

## தனுசு

எதிலும் ஒரு தீவிரம், இலட்சியம் உங்களுக்கு எப்போதும் இருந்தபடி இருக்கும். அறிவாற்றலும், மதிநுட்ப உணர்வும்,சிந்தனைச் செயற்பாடுகளும் கொண்ட உங்களை எவரும் எதிர்த்து மிக இலகுவில் வெற்றி கொள்ள முடியாது. தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்பாளர்கள் உதவிபுரிவார்கள். கொஞ்சம் கஷ்டப்பட்டு அதிக இலாபங்களை அடைய முற்படுவீர்கள். அடிக்கடி ஏதாவது விஷயங்களில் மனம் குழம்பியபடி இருப்பீர்கள். புத்திரர்களால், சகோதரர்களால் அதிக யோசனை ஏற்பட்டு மனக்கலக்கத்தைக் கொடுக்கும். சளி, வயிற்றுக்கோளாறு, வாய்வுத் தொல்லை, கைகால் உளைவு, தாக்கம் என்பன கொடுக்கும்.

## சோதிடம் சஞ்சீவி

காரமான உறைப்பு, புகையிலை, வெற்றிலை பாக்குப் போன்றவற்றை குறைத்துக் கொள்வது நல்லது. அல்லது சிலருக்கு பக்க விளைவான தாக்கங்கள் ஏற்படலாம். இரத்தத்தில் மாற்றங்கள் ஏற்பட இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்:-* புதன், வெள்ளி.

## மகரம்

உங்கள் விடாப்பிடியும் நிதானமான போக்கும் எதிலும் கருத்தாழம் மிக்க நன்மைகள், புகழை வரச் செய்யும். கடமையில் கருத்துடன் செயற்படும் தன்மை உள்ள நீங்கள் எப்படியாவது முன்னுக்கு வர முயன்றபடி இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் பிடிவாதப் போக்கு, பெரியவர்களின் உதவிகள் இருக்கும். வாழ்க்கை என்பது சோதனைக் களம் தானே! அதில் மெல்ல மெல்லச் செல்வது நல்லதுதானே. செய்வதைத் திருத்தமாகச் செய்வதனால் நன்மைகள் ஏற்படச் செய்யும். சுயகாரிய சிந்தனைகளால் அதிக இலாபங்களை அடைவீர்கள். செமியாக்குணம், அடிகாயம், முழங்கால் பிடிப்பு, வயிற்றுவலி, மனக்குழப்பங்கள், நரம்புத்தளர்ச்சி என்பன வரலாம்.

*அதிர்ஷ்டநாள்:-* வியாழன்.

## கும்பம்

உலகில் மனத்திருப்திக்காகச் சிலர் பிறருக்கு உதவிகள் செய்கிறார்கள். ஆனால் நீங்களோ உள்ளம் திறந்து மனச் சுத்தியாக உதவிகள் பலருக்கு செய்யத் துடிப்பீர்கள். அதற்குக் காரணம் அம்மா தந்த சத்திய பாடமும் அப்பா தந்த உறுதி நெறிகளும் மனதில் உரமிட்டு இருப்பதனாலேயாகும். நாம் பிறர் மீது இரக்கம் காட்டினால்தான் இறைவனும் எங்கள் மீது இரக்கம் காட்டுவார் என அடிக்கடி சொல்வீர்களே. அது பொய்யாகாது. தொழில் ஸ்தானத்தில் பலரும் உதவிகள் செய்வார்கள். உங்கள் வாக்குத்திறனால் பல காரியங்களைச் சாதிப்பீர்கள். கைகால்வலி, நாரிநோ, நெஞ்சுப் படபடப்பு, நரம்புச் சோர்வு, மூட்டுக்களில் நோ, வாய்வு - வாத உளைச்சல் என்பன கொடுக்கும். தகுந்த வைத்தியம் செய்யவும்.

அதிர்ஷ்டநாள்:- வியாழன்.

## மீனம்

உங்களுக்கு அடிக்கடி மன மாற்றங்கள் இக்காலங்களில் ஏற்படும். காலை ஓர் எண்ணம், மாலை அதற்கு எதிர்மாறான சிந்தனைகள் வட்டமிட்டபடி இருக்கும். வீட்டில், தொழில் ஸ்தானத்தில் பல பிரச்சினைகள் ஏற்பட்டாலும் ஒருவாறு சமாளித்தபடி இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி குற்றம் கண்டபடி இருப்பதனால் பல இழப்புகள் ஏற்படலாம். மன்னிக்கும் சுபாவத்தை வளர்த்துக் கொள்வது நல்லதுதானே. எதிர்ப்பாளருடன் ஓரளவு சமாளித்துச் செல்வது நல்லது. வெளிநாட்டு விஷயங்கள் ஏமாற்றங்களைத் தரலாம். கவனமாக இருக்கவும். இனஜனங்கள், நண்பர்களை முழுப்படியாக நம்ப முடியாது, அவர்களை விலத்தியும் நடக்க முடியாது சங்கடப்படுவீர்கள். உங்களைச் சிலர் வாழ்த்திப் போற்றி காரியம் பெறும் காலமாகும். வயிற்று வருத்தங்கள், சளி, வாய்வு, வாதத் தொல்லை, இரத்தநோய்கள், கண் எரிச்சல் என்பன கொடுக்கும். தகுந்த வைத்தியம் செய்து வாருங்கள்.

*அதிர்ஷ்டநாள்:* வியாழன்.

---

# பொன்மான்...

(XI ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடைகளும் எண்ணிக்கையில் பெருகிச் சென்றாலும் எல்லாவற்றிற்கும் முன் இப்படித்தான் கும்பலாக நிற்கிறார்கள்.

நினைத்துக்கொண்டே வீட்டை நோக்கிப் போகிறேன்.

'நாளைக்கு ரேணுவுக்கு பதில் சொல்ல வேணும். றைஸ் குக்கர் வாங்கவா? விடவா?'

மீண்டும் மனம் அதில் போய் நிற்கிறது.

'அந்த பேபிபெல்லிங் குக்கர் இப்ப இருந்தால்...'

நினைவு றைஸ் குக்கரிலிருந்து பேபி 'பெல்லிங் குக்கருக்குத் தாவுகிறது.

'எவ்வளவு ஆசையாய் வாங்கி ஆறுமாதங்கள் கூடப் பாவிச்சிருப்பேனோ தெரியாது. 1990இல் சண்டை தொடங்கி மின்சாரம் வராததோடு சும்மா கிடந்தது. பெடியன்கள் யாழ்ப்பாண நகரப்பகுதிக்கு மின்சாரம் கொடுத்தபோது பாவிக்கலாமெண்டு சறோ அக்கா அவவுடைய வீட்டுக்கு கொண்டுபோனவ. இடம் பெயர்வோடை எங்கை போச்சுதோ?'

மனம் ஏங்குகிறது.

வீடு வந்து சேர்கிறேன். ஒரே அலுப்பாக இருக்கிறது.

'சமைக் காமல் பாண் வாங்குவோமோ' நினைவைச் செயற்படுத்த உடனே மகனைக் கூப்பிடுகிறேன்.

"இளங்கோ, பாண் வாங்கிக் கொண்டு வாறீங்களே?"

"அம்மா கோபி வீட்டை டெக் கெடுத்து படம் போடுகினமாம். தம்பி பள்ளிக்கூடத்தாலை வந்த உடனேயே அங்கை போட்டான். அம்மா நானும் போகட்டே?"

பதிலுக்கு மகளின் குரல்தான் கேட்கிறது.

"இப்ப நாலைஞ்சு நாளாய் ஒவ்வொரு இடமாய் இரண்டுபேரும் படம் பார்க்கப் போறீங்கள். படிப்பு என்ன மாதிரி?"

கோபமாய்க் கேட்கிறேன்.

"கறன்ற் இருக்கு மட்டுந்தானே அம்மா"

"இவள் என்ன சொல்கிறாள்?" என என் மனம் கேட்கிறது.

உண்மையிலேயே மின்சாரம் தொடர்ந்து வருவது சந்தேகமென நினைக்கிறாளா? அல்லது என்னைச் சமாதானப்படுத்துகின்றாளா? நியாயமான சந்தேகத்துடன் அவளைப் பார்க்கிறேன். அவளோ வானொலியைத் திருகிக் கொண்டிருக்கிறாள்.

"மட்டக்களப்பில் இரண்டு மின் மாற்றிகள் தகர்க்கப்பட்டன"

வானொலி செய்தியைக் கூறிக் கொண்டிருந்தது.

"இதேன் போத்தல்களெல்லாம் அடுக்கிக் கிடக்கு?"

"பழைய போத்தல் வாங்க ஒருத்தன் நாளைக்கு வாறனெண்டவன்"

எனது கேள்விக்கு, என் கணவரிடமிருந்து பதில் வருகின்றது.

அந்தப் போத்தல்களினிடையே ஒரு போத்தலில் என் கண்கள் தரிக்கின்றன.

'இந்தச் சிக்கன விளக்கையும் விற்கப் போட்டாச்சு.' எனக்குள்ளேயே கூறிக்கொண்டு போய், நான் அதை எடுத்து அலுமாரியின் கீழ்த் தட்டில் பத்திரமாக வைக்கிறேன்.

(யாவும் கற்பனை)

---

# பரிகாரம்.....

(XIஆம் பக்கத் தொடர்ச்சி)

போல - கையும்மெய்யுமாகப் பிடிபட்ட கள்வன்போல நடுங்கிய சிவத்திற்கு "ஐடெண்டி" என்ற வார்த்தைகள் சிறிது நிம்மதியைத் தந்தன. போர்ஸினை எடுக்கும்போதே கண்ணன் கிழே விழ ரஜனிகாந்த் எட்டிப்பார்த்தார்.

"ஆமி ஐசி இல்லே.....?"

"இப்பத்தான் வன்னியால வந்தது"

அவனுக்கு விளங்கியதாகத் தெரியவில்லை.

"ஜொப் இருக்கா?"

தலையை மேல் கீழ் ஆட்டி சட்டென்று இடம் வலமாக ஆட்டினான். முகத்தில் வழிந்த வேர்வைத் துளி ஒன்று காலில் உள்ள தூசியை வெளிற்றியது. இரண்டு ஆமிக் காரர்கள் ரோட்டில் துலங்க - ஒருவன் பெரிய ஆளாய் இருக்கலாம் - சிவத்தை அழைத்துப் போனார்கள். [illegible] இராசலிங்கத்தாருக்கு யாரோ சேதி சொல்ல அவர் ஓடி வந்தார்.

"விசாரிச்சு அனுப்புறம்" என்று சொல்லி ஒரு துண்டும் கொடுத்தார்கள்.

"ரவுண்டப்பில் சிவத்தை ஆமி பிடிச்சிட்டாங்களாம்"

அப்புக்குட்டி ஆச்சி சேதி கேட்டு திடுக்கிட்டுப் போனா. 'ராசலிங்கத்திற்ற விசாரிச்சா...'

வீட்டை அண்மிக்க பேச்சுக் குரல்கள் கேட்கின்றன.

"கிழவிக்கு கிடுகு வேண்டப் போனவனே....என்ன இழவுக்கு விசர்க் கிழவி....."

"இந்தக்கொட்டிலோட அவன் படுகிறபாடு....! கிழவியை துரத்திப்போட்டு கொளுத்தினால்தான் சரி."

"இந்தக் கிழவி ஏன் இப்பிடி எல்லாம் ஓதுது....... இனி அவனை எப்ப விடுவான்களோ...?"

"அப்பவும் சொன்னனான். கிழவியின்ரை வேலையளை நீ பார்க்காதை எண்டு...."

வீட்டில் உஷ்ணக்காற்று வீசுகிறது!

ஆச்சி பொசுங்கிப்போனாள்! அவள் எதுவுமே சொல்ல விரும்பவில்லை. குடிசைக்குள் போய் படுத்துக் கொண்டாள்.

அடுத்த நாள் -

அதிகாலையிலே இராசலிங்கம் வீடு அல்லோ கல்லோலப்பட, அப்புக்குட்டி ஆச்சி புறப்பட்டாள்.

"மோன, சிவம்... வந்துட்டானே...?"

இராசலிங்கம் பிரசன்னமாகிறார்!

"போடியணை, உன்னாலை வந்த வினைதான் எல்லாம்"

"உனக்கேன் தேவையில்லாத வேலை?"

"இப்ப சுகம் விசாரிக்க வாறியே?"

"நீயும் ஒரு புழு, பூச்சியை பெத்திருந்தாத்தானே தெரியிறத்துக்கு"

ஆச்சி இடிந்து போனாள். இராமலிங்கத்தின் வார்த்தைகளை அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை.

அவளது காஞ்சுபோன கன்னங்கள் வழியே கண்ணீர் உருண்டோடியது. தன் தலையில், தானே அடித்துக் கொண்டு, தன் குடிசைக்குத் திரும்பினாள்.

* * *

மாலை, ஐந்து மணியிருக்கும்.

சிவத்தை ஆமி விட்டுவிட்டாங்களாம்.

அடிக்கக்கூட இல்லையாம்.

இராசலிங்கத்தார், செத்தவன் பிழைத்து வந்த மாதிரி, மகிழ்ந்து போனார்.

ஆனால் சிவத்துக்கு ஒரே கவலை.

'சீ, பிடிபடாம இருந்தா, ஆச்சியின்ரை குடிசைய வேஞ்சிருக்கலாம்.

'ஆச்சியிட்டபோய் விஷயத்த சொல்ல வேணும்'

பறந்தான்.

குடிசையின் கதவு சாத்தப்பட்டிருந்தது.

தள்ளத் திறந்து கொண்டது. ஆச்சி படுத்துக்கிடந்தாள்.

"ஆச்சி, ஆச்சி......"

கிட்டப்போய்ப் பார்த்தான்.

ஆச்சியின் முகத்தில் இலையான்கள் ஊர்ந்தன!

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நல்லூர் [illegible] நூலகம்

# சஞ்சீவியை குப்பைத் தொட்டியாக்கும் வித்துவானுக்கு இடம் அளிக்காதீர்கள்!

## உங்கள் உள்ளத்திலிருந்து

மிகுந்த இக்கட்டுக்கு மத்தியில் "உதயன்", "சஞ்சீவி" வெளிவருகின்றது என்று எமக்கு விளங்குகின்றது. எனவே அதன் ஒரு சதுர அங்குலப் பகுதியும் விலை மதிப்பற்ற பெறுமதி உடையது. அதன் பெறுமதி மிக்க பக்கங்களை "வித்துவான் கேள்வி பதில்" என்ற பகுதி குப்பைத் தொட்டியாக்கி விடுகின்றது.

ஒரு பத்திரிகையில் மிக அவதானமாக-- நுணுக்கமாக -- கருத்துச் செறிவுடன் எழுதப்பட வேண்டிய பகுதி ஆசிரியர் தலையங்கம் ஆகும். அதற்கு அடுத்தபடியாக கருத்துச் செறிவுடையதாக இருக்க வேண்டியது கேள்வி பதில் பகுதி.

ஆசிரியர் பீடத்துக்கும் வாசகருக்கும் இடையில் உறவுப் பாலமாக அமைவது வாசகர் கடிதங்கள் அல்ல. கேள்வி - பதில் பகுதியே.

ஏன் எனில் நாம் எழுதும் மடலுக்கு பதில் மடல் எழுதுவது இப்பகுதியிலேயே ஆகும். எனவே எந்தத் தரமான பத்திரிகையிலோ, கீழ்த் தரமான பத்திரிகையிலோ வாசகர்கள் முதலில் நாடுவது கேள்வி - பதிலேயே ஆகும்.

ஆனால் எமது வித்துவானின் பதிலில் எந்த வித கருத்தாழமும் இல்லை.

பொதுவாகப் பத்திரிகைகளில் கேள்வி -பதில் பகுதியை வழங்கும் ஆசிரியர் சகலகலா வல்லவனாக இருக்க வேண்டும். அரசியல் கட்டுரை எழுதும் ஆசிரியருக்கு அரசியல் அறிவு இருந்தால் போதும். சோதிடம் எழுதுபவருக்கு சோதிட அறிவு போதும். கேள்வி- பதில் பகுதிக்கு பல்வேறு தரப்பட்ட வாசகர்களிடமிருந்தும் கேள்விகள் வந்து குவியும். உதாரணமாக ஒருவர் விளையாட்டு சம்பந்தமாக கேள்விகளைக் கேட்கக் கூடும். இன்னொருவர் அரசியல், மருத்துவம், அறிவியல், பொது அறிவு என வளர்ந்து கொண்டே போகும் இவற்றுக்கு பதில் அளிப்பவர் இவை எல்லாவற்றிலும் ஆர்வம் உடையவராகவும் அறிவுடையவராகவும் இருக்க வேண்டியது அவசியம்.

தென்னிந்தியப் பத்திரிகைகள் சிலவற்றில் பதில் வழங்குபவரிடம் இந்த அனுபவ முதிர்ச்சியைக் காணக்கூடியதாக உள்ளது.

ஆனால் இவற்றுக்கு மாறாக சஞ்சீவியில் பதில் தரும் வித்துவான் எந்த ஒரு துறையிலும் பாண்டித்தியம் பெற்றவராகவில்லை என்பது அவருடைய பதில்களில் வெளிப்படையாகத் தெரிகிறது. "வித்துவான்" அளிக்கும் பதில்களைப் போன்று பதில் அளிப்பதற்கு எந்த ஒரு சிறப்புப் பாண்டித்தியமும் தேவையில்லை. ஜீ. சி. ஈ. சாதாரண தரத்தில் தமிழில் 'c' பெறுபேறு பெற்ற எவராலும் இவ்வாறான பதில்களை தாராளமாக வழங்க முடியும்.

வித்துவான் தனது பதில்கள் ஊடாக நல்ல கருத்துக்களை புகுத்தாவிடினும் பரவாயில்லை. [illegible] கருத்துக்களை நம் சமூகத்துக்கு விதைக்கிறார் என்பதுதான் வேதனை. உதாரணமாக கணவன் - மனைவி குடும்ப உறவு பற்றி மிகவும் கீழ்த்தரமாகவும் பெண் ஆதிக்கத்தைப் புகுத் தவும் முனைகிறார். பெண்கள் ஆண்களை அடக் குவதாக தனது 90 வீதப் பதில்களில் சித்திரிக் கின்றார். ஆனால் யாழ்ப்பாணத்தில் பெண் ஆதிக்கம் என்பது ஆயிரத்தில் ஒரு குடும்பத் திலேயாவது இருக்கின்றதா என்பது தெரிய வரவில்லை. ஆனால் வித்துவான் தென்னிந்திய சஞ்சிகையில் வாசித்து அறிந்த தன் வித்துவ அறிவை தனது பதில்களில் பிரயோகிக்கிறாரே தவிர அது அவருடைய சொந்தக் கருத்தல்ல என் பது உண்மை.

சில காலத்துக்கு முன் ஓர் இறுக்கமான கலாசாரக் கட்டுப்பாட்டுக்குள் இருந்து திடீரென விடுபட்டமை வாசகர்களின் விரசமான கேள்விக்கும் ஆசிரியரின் விரசமான பதிலுக்கும் காரணம் என்பது யாதார்த்தம்.

"வாசகர் கேட்கும் கேள்விக்குத்தான் வித்துவான் பதில் அளிக்கிறார். வாகர்கள் தரமான கேள்விகளைக் கேட்டால் தரமான பதிலை வித்துவான் வழங்குவார்." என வாசகர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார். ஆனால் அது உண்மைக்கு புறம்பான கருத்து. நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள வாசகர் ஒருவர் தான் தேன் அருந்தலாமா என விஞ்ஞான ரீதியான பதிலை எதிர் பார்த்து வினாத் தொடுத்திருந்தார். அதற்கு வித்துவான் அளித்த சளாப்பல் பதில் வேணுமானால் ஏனைய வாசகருக்குப் பிடித்திருக்கலாம்: கவர்ந்திருக்கலாம். ஆனால் கேள்வி கேட்ட வாசகருக்கு அப்பதில் மிகவும் வேதனையளித்திருக்கும் என்பதை அந்த வாசகரை தொடர்புகொண்டு கேட்டுப்பாருங்கள்.

இவ்வாறான கீழ்த்தரமான கேள்வி-பதிலை நிறுத்தும்வரை அறிவுபூர்வமான கேள்விகளை வாசகர்கள் தொடுத்து மூக்குடைபட மாட்டார்கள் என்பது நிதர்சனம்.

எனவே உதயன் - சஞ்சீவியே! குடாநாட்டில் வெளிவரும் ஒரே பத்திரிகை என்ற காரணத்தால் தகவல்களைப் பெறுவதற்கு உன்னையே சார்ந்துள்ள பல்வேறு தரப்பட்ட லட்சக் கணக்கான வாசகரின் அறிவு விருத்தியைத் கருத்திற் கொண்டு எந்தவித கேள்வி ஞானமோ, அறிவியல் ஆர்வமோ அற்ற வித்துவானை உனது சிறகுகளிலிருந்து உதிர்த்துவிட்டு, வேறொரு தரமான சிறகைப் தேர்ந்தெடுத்து தொடர்ந்து வெற்றியுடன் பறந்துசெல்.

**யாழ்ப்பாணம்.** **இ.செந்தூரன்.**

### தரமான சிறுகதை

06-01-1999 சஞ்சீவியின் சிறுகதைப் பகுதியில் வெளியான கழுகுகள் என்னும் சிறுகதை உண்மையில் தலைப்பின் உட்பொருளை அக்கதையின் முடிவுவரையும் நன்கு உணர்த்தியிருந்தது. நட்புக் கொண்ட மானிடம் மரணித்துக் கிடக்கின்ற வேளையிலும் தம்மை அத்துன்ப நிகழ்வில் சற்று நேரம் நிறுத்த முடியாமல் தம் கதை தொடரும் எத்தனை பேர் உள்ளனர்? பணத்தையும், பகட்டையும், பாராட்டையும் பெற முயலும் முத்தையா போன்ற போலி மனிதர் எத்தனை பேர்? இவ்வாறான சமூகப பிரச்சினையொன்றைப் படம் பிடித்துக் காட்டிய - காலத்திற்கு உதவும் இச்சிறுகதையை எழுதிய ஆசிரியரின் பணி தொடரவும், அதற்குத் தக்கபடி களம் அமைத்துக் கொடுக்கவும் சஞ்சீவியை வாழ்துகிறேன்.

**நல்லூர்.** **ஆ.தர்மினி.**

வாசகரே!

**இக்கதையை வரைந்த ஆ.ரவீந்திரனும், 13-02-1999 சஞ்சீவியில் 'தாய்' என்ற தலைப்பில் சிறுகதை வரைந்த சு.சிவராசாவும் சஞ்சீவி சிறுகதை பக்கங்களில் தொடர்ந்து தமது ஆக்கங்களைப் பதித்து வருபவர்கள்.**

**தற்போது அரசசேவையில் ஆசிரியர்களாகப் பணிபுரிந்துவரும் இந்த இருவரும் பார்வைப்புலனை முற்றாக இழந்தவர்கள் என்ற தகவல உங்கள மனதை நெருடுவதாக இருக்கக் கூடும் என்றாலும் இன்று குடாநாட்டில் தரமான சிறுகதை படைப்பாளிகளில் இருவரும் முன்னணியில் உள்ளார்கள் என்பது அவர்களது திறமைக்குச் சான்று.**

**இருவரில் ஒருவரான ஆ.ரவீந்திரன் அரச பதவி நியமனத்துக்கு முன்னர் உதயன் ~ சஞ்சீவி ஆசிரியர் பீடத்திலும் பணியாற்றி தமது திறமையை வெளிப்படுத்தியவர்.**

(ஆ-ர்)

### நகைச்சுவைக்கும் சற்று இடமளிக்குக!

விளையாட்டுத்துறை தொடர்பான தொடர் கட்டுரைக்கு இடமளித்ததற்காக என்போன்ற விளையாட்டுத்துறை ரசிகர்களின் பாராட்டுக்கள். இளம் எழுத்தாளர் ஒருவர் மிகச்சிறப்பாக அக் கட்டுரைத் தொடரை வரைவது பெருமையைத் தருகின்றது. இத்தகைய இளம் எழுத்தார்களை - இலைமறை காயாக இருக்கும் ஆக்க இலக்கிய கர்த்தாக்களை - உலகுக்கு அடையாளம் காட்டுங்கள். அவர்களுக்கு களம் அமைத்துக் கொடுங்கள்.

சஞ்சீவியில் நகைச்சுவைக்கும் சற்றும் இடமளியுங்களேன்.... பிளீஸ்....

**எழுதுமட்டுவாள்.** **சு.கர்ணன்.**

### விடியலின் பக்கங்களை மட்டுமே எழுதுங்கள்.

நீண்டகாலத்தின் பின் கவிதை முற்றம் களைகட்டியிருக்கின்றது. இரு தன்மானக் கவிஞர்களின் படைப்புக்கள் மீண்டும் சிலகாலத்தின் பின் அரங்கேறியுள்ளன. அவர்களில் முதலாமவர் அங்குசன்: அடுத்தவர் சுழிபுரம் வானவராயன். இவர்களின் கவிகளைக் காணும் போதெல்லாம் எமது தாய் மண் ஒரு முறை சிலிர்த்துக்கொள்வதென்னவோ உண்மைதானே. இத்தகைய கவிஞர்களின் பாதச் சுவடுகள் இன்னும் எம் மண்ணில் பதிவதால்தானோ என்னவோ இன்னும் எமது இருப்புக்களை நாம் உணரக் கூடியதாக உள்ளது. வாழ்க உங்கள் தேசப்பணி. வளர்க உங்கள் கவியாற்றல்.

நிற்க! அங்குசன் அவர்களே. உங்களிடம் சில குற்றச்சாட்டுக்களையும் கூறக் கடமைப் பட்டுள்ளேன். இடையில் சிலகாலம் மாங்காய் விலை, தேங்காய்விலை பற்றியெல்லாம் உங்கள் கவிதைகள் வந்தனவே! கவிதைகள் நன்றாய் இருந்தாலும் கூட உங்களின் பேனா மூலமாக இப்படியான படைப்புக்களை நாங்கள் எதிர்பார்க்கவில்லையே. உங்கள் பேனா சுதந்திரப் பாக்களை பிரசவிக்கும் தாய் மடி அல்லவா? காதல்பற்றி - பெண்கள்பற்றி வர்ணிக்க இங்கு எத்தனையோ மேத்தாக்கள், வாலிகள், வைரமுத்துக்கள் இருக்கின்றார்களே! எமக்கு ஒளியேற்ற வந்த கவிஞரே! இனிவரும் காலங்களில் உங்கள் பேனா விடியலின் பக்கங்களை மட்டும் எழுதட்டுமே!

**பண்ணாகம்.** **நாரதன்.**

### மாற்றம் விரைவில் வருமா?

சஞ்சீவி அதன் ஆரம்ப காலங்களில் - க.பொ.த (சாதாரண உயர்) தர மாணவர்களுக்கும் உதவும் வகையில் 'பாடம் பயில்வோம்' என்ற பகுதியை ஒதுக்கி அவர்களின் முன்னேற்றத்துக்கு பெரிதும் உதவி வந்தது. ஆனால் தற்போது பாடம் பயில்வோம் என்ற பகுதி தவிர்க்கப்பட்டுள்ளது. இது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

சஞ்சீவியின் இன்றைய நிலையைப் பொறுத்தவரை தேவையற்ற சில பக்கங்களை அது தாங்கி வருகிறது. இதற்கு உதாரணமாக மௌனமொழி - உங்கள் கவிதைகள்' என்ற பக்கத்தினை எடுத்துக்காட்ட முடியும். இதைவிட கவிதைக்காக "கவிதை முற்றம்" என்ற ஒருபக்கம் ஒதுக்கினாற் போதாதா? 'மௌனமொழி- உங்கள் கவிதைகள்' என்ற பகுதிக்குப் பதில் "பாடம்பயில்வோம்" என்ற பகுதியை ஆரம்பித்து மாணவர்கள் பரீட்சைகளுக்கு எவ்வாறு விடை எழுதுவது என்பதையும், அவர்களின் பாட விதான சம்பந்தமான பிரத்தியேக விளக்கங்களையும் அந்தந்தத் துறையில வல்லவர்களிடம் இருந்து பெற்று பிரசுரித்தால் கடந்த சில வருடங்களாக பெறுபேறுகளில் வீழ்ச்சியடைந்து வரும் யாழ்ப்பாணக் கல்வி நிலையை முன்னேற்ற எவ்வளவு உதவியாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

மேலும் சிறுவர் சுடருக்கு இரண்டு பக்கம் ஒதுக்குவதற்குப் பதிலாக ஒரு பக்கத்தை மாத்திரம் ஒதுக்கி மீதி ஒரு பக்கத்தை புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவருக்கான பகுதியாக மாற்றலாமே?

'வித்துவான் பதில்கள்' என்பதற்கான பக்கத்தையும் சுருக்கி ஆங்கிலக் கல்வியை விருத்தி செய்யக்கூடிய ஒரு பகுதியை ஆரம்பிக்கலாமே? இத்தகையதொரு மாற்றத்தை என்போன்ற வாசகர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

**கரவெட்டி.** **ச.இராகவன்.**

### முன்மாதிரியான முயற்சி

'மௌனமொழி - உங்கள் கவிதைகள்' பகுதி ஒரு முன்மாதிரியான முயற்சி. உள்ளங்களில் உறங்கிக் கிடக்கும் கவிதை உணர்வைத் அது தட்டி எழுப்புகிறது. ஓரளவு ஆர்வம் உள்ளவர்கள் மேலும் ஒருபடி முன்னேற உதவும் உந்து சக்தியாகவும் உள்ளது. ஓவியத்தில் உள்ள எண்ணக்கருவை வைத்து சொல்லோவியம் படைக்கும்போது ஒருவருடைய கிரகிக்கும் ஆற்றலும் உயர வழி ஏற்படுகிறது. நித்தம் நித்தம் பலர் புத்தம் புதிய பாக்கள் புனைய பாதை காட்டும் பல்சுவைக் கதம்ப சஞ்சிகையான சஞ்சீவிக்கு பராட்டுக்கள் பல.

**தம்பசிட்டி.** **வி.பி.ஆர்.இராமச்சந்திரன்.**

### நிஜமாகும் ஆருடம்

திக்கெட்டும் நிகழும் செய்திகளையும் தீஞ்சுவையுடன் திரட்டித் தரும் 'உதயன்-சஞ்சீவிக்கு' அபிமான வாசகரின் வாஞ்சையுடன் கூடிய வாழ்த்துக்கள்.

சஞ்சீவியே! ஒவ்வொரு வாரமும் புத்தம்புது அம்சங்களைத் தாங்கி வெளிவந்து அறிவுப் பசிக்கு நீ நல்ல தீனி போடுகிறாய். புத்திஜீவிகள் சிறந்த முறையில் விடயதானங்களைச் செய்து வருகின்றார்கள். அவர்களுக்கும் என் ஒட்டு மொத்தமான பாராட்டுதல்கள் சமர்ப்பணம்.

கோபியின் "துடுப்பாட்டம் - அன்றும், இன்றும்" என்ற கட்டுரை அருமை. நல்ல வசன அமைப்புடன் அவர் வரையும் கட்டுரைத் தொடருக்குப் பாராட்டுக்கள். இளைய தலைமுறையின் முக்கிய துறைகளில் ஒன்றான விளையாட்டுத் துறை புறக்கணிக்கப்படுகிறதே என்ற குறையை இதன் மூலம் நிவர்த்தி செய்துவிட்டீர்கள். பாராட்டுக்கள். தொடர்ந்தும் இதற்கு முக்கியத்துவம் கொடுங்கள். நல்லதொரு அம்சம்.

சிந்தனைக்கு வேலை தரும் "சொற்சிலம்பம்" பகுதி மூலம் எவ்வளவோ அருமையான சொற்களைப் படித்தறியக் கூடியதாக உள்ளது. சிலம்பம் தயாரிப்பாளரின் அபார மூளையைப் பெரிதும் மெச்சுகின்றேன். நல்லமுறையில் சொல்லாட - சிலம்பமாட - வைக்கின்றார்: அழைக்கின்றார். அவருக்கு எனது நன்றிகள்: பாராட்டுக்கள்.

இன்னும் கருத்துக் கலசம்,உள்ளும் புறமும்,வாரவிமர்சனம், உலகஉலா, குறள் வெள்ளம்.... இத்தியாதி பல்சுவை அம்சங்களையும் விருப்புடன் ஒவ்வொருவாரமும் படித்து முடித்து விடுவேன்.

தங்கள் மகாதேவா ஜோதிடரின் ஆருடமும் எனக்கு நிஜமாகி வருகின்றது. அவருக்கும் எனது நன்றிகள்: பாராட்டுக்கள்.

பல்சுவை வார இதழ் 'சஞ்சீவி'யின் பணி தொடரட்டும்.................!

**தொல்புரம்.** **கே.இராஜகோபால்.**

### தொடர் நவீனம் தேவை

கலங்கரை விளக்காக விளங்கும் சஞ்சீவி வெளியீட்டிலே தொடர்(நவீனம்) கதை ஒன்று வெளிவருவது மிக அவசியும். வாசகர்களினது ஆவலைத்தூண்டி அவர்களைச் சஞ்சீவி மீது அதிக ஈடுபாடு கொண்டவர்களாக்க இது நிச்சயமாக உதவும். அத்துடன் விடைபெறத் தெடங்கும் நூற்றாண்டின் பதிவுகளாக அத்தொடர்கதை இருந்தால் மிகவும் நல்லது.

மேலும் சஞ்சீவியில் வெளிவரும் குறள் வெள்ளம் நல் முத்துக்களை எமக்கு அள்ளி வழங்குகின்றது. அதிரடி அரங்கம் அரசியலைக் கூட அதிரவைக்கின்றது. தித்திக்கும் தேனாய் கவிதை முற்றம் களிப்பூட்டுகின்றது. வித்துவானின் வித்தகங்கள் விந்தையிலும் விந்தை. சஞ்சீவியின் அனைத்து அம்சங்களும் அருமையானவை. சஞ்சீவியே! நீ ஆல் போல் தளைத்து அறுகுபோல் வேரூன்றி தொடரும் இருபத்தோராம் நூற்றாண்டின் சரித்திர நாயகனாய் சாதனை படைக்க என்றும் எனது வாழ்த்துக்கள்.

**மட்டுவில் வடக்கு.** **சி.சிவகௌரி.**

### கணனித்துறைக்கு இடமளியுங்களேன்!

இன்றைய நவீன உலகில் வளர்ந்துவரும் துறைகளில் மிகமுக்கியமானது கணனித் துறையே. 21ஆம் நூற்றாண்டில் கணனி பற்றிய அடிப்படை அறிவேனும் பெற்றிருப்பது மிகமிக அவசியம். யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் கணனி பற்றிய பூரண அறிவு இல்லை என்றே கூறிவிடலாம். ஆகவே இக்குறையை நிவர்த்தி செய்ய விளையாட்டுத்துறை, சிறுவர் விருந்து, கவிதை முற்றம் என்பவற்றுக்கு இடமளித்தது போல இத்துறைக்கும் கணிசமான இடமளியுங்கள். இது இன்றைய மாணவ வர்க்கத்தினது ஒட்டுமொத்தமான எதிர் பார்ப்பாகும்.

**சாவகச்சேரி.** **ஆ.சஞ்சீவன்.**

### பொதுஅறிவு விடயங்களை பிரசுரிப்பது மிக நல்லது

2000 ஆண்டில் ஜீ.சி.ஈ.( உயர் தர) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு பொது உளச்சார்பும் ஒரு பாடமாக அமைகின்றது. எழுத்தாளர்களை ஊக்கிவித்தும், வாசகர்களை மகிழ்வித்தும் வரும் சனிக்கிழமை அமுதமான சஞ்சீவி, பொது அறிவு - பொது உளச்சார்பு சம்மந்தமான விடயங்களை சேர்த்துக்கொண்டால் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு அது பேருதவியாக இருக்குமல்லவா?

**சரசாலை.** **சி.சசி.**

### 'காதலர் தினம்' ஒரு தகவல்

காதலர் தின கட்டுரை மிகவும் சிறப்பாக அமைந்தது. பாலகுமாரன் அவர்களின் சிந்தனைச் சிதறல்களின் தொகுப்பு அருமை.

காதலர் தினம் என்பது காதலுக்காக ஒதுக்கப்பட்ட சர்வதேச தினம் என நினைப்போர் பலர். ஆனால் அது ஒரு கிறிஸ்தவம் சார்ந்த புனிதமான நாளாக இருப்பதை யார் அறிவார்? காதலை - காதலர்களை - எதிர்க்கும் ஒரு அரசாட்சியில் "வலன்ரைன்" எனும் குருவானவர் தோன்றி பலத்த சிரமங்களுக்கு மத்தியில் காதலர்களைச் சேர்த்து வைத்தார். அதனால் எழுந்ததே வலன்ரைன் (காதலர்) தினம்.

**திருநெல்வேலி.** **ச.எட்வின்.**

### காதல் கசப்பானதா?

"காதல் திரைக்கு வெளியே வாருங்கள்!" என்ற தலைப்பில் கோண் டாவில் க.தமிழ்வாணி எனும் அம்மணி எழுதிய விடயம் குறித்து மிகவும் மன வருத்தம் அடைகின்றேன்.

அம்மணி! நீர் காதலில் தோல்வியுற்றவரா? காதலென்பது இன்று நேற்று அன்று, ஆதாம- ஏவாள் காலத்திலிருந்தே வளர்ந்து வருகின்றது. காதல் புனிதமானது: உண்மையானது. அதை மழுங்கடிக்கும் நோக்கில் விமர்சிப்பது என்னைப் போன்று காதலை அனுசரிப்பவர்களுக்கு மனவேதனையை தருகின்றது.

ஏன், பெற்றோர்கள் நிச்சயித்து திருமணமானோர் வாழ்வில் கசப்பான அனுபவங்கள்,துன்பங்கள்,பிரிவுகள் தவறுகள் ஏற்படுவதில்லையா? உலகில் இன்பமும் துன்பம் சமன். எனவே துன்பங்கள் வருவது காதலினால் மட்டுமல்ல. எந்தப் பிரச்சினையையும் புரிந்துணர்வு எனும் அம்சத்தால் எதிர்கொண்டு சமாளித்து விடலாம்.

காதல் கசப்பானது எனின் அறிவால் வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகள் அக்கசப்பான காதலை ஓர் புனிதமான தினமாக ஏன் கொண்டாடுகின்றன?

உமது கருத்துக்களை பார்க்கும் போது அன்று மும்தாஜுக்காக ஷாஜகான் கட்டிய காதல் சின்னமான தாஜ்மகால் வெறும் பளிங்குக்கல் மண்டபம்தான்.

அன்று "அச்சுவேலி அன்பர்" கூறியது போல் வெறுமனே காதலை கொச்சைப்படுத்தாமல் அதற்குரிய தூய தன்மையோடு அதனை நோக்குங்கள். அப்போது காதல் கசப்பானதா என்பதற்கு உரிய பதில் கிடைக்கும்.


**சுழிபுரம்.** **ஆர்.எஸ்.சந்திரன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி.ஐ.ஏ.,மொஸாட் வலையில் வீழ்ந்த குர்டிஷ் கெரில்லாத் தலைவர் ஒகலன்!

குர்டிஷ் கெரில்லாத் தலைவர் அப்துல்லா ஒகலன் (Abdullah Ocalan) கடந்த வாரம் கென்யாவின் தலைநகர் நைரோபியில் கைது செய்யப்பட்டார். இந்தியப் பிரதமர் வாஜ்பாயின் முக்கியத்துவம் வாய்ந்த லாகூர் விஜயம், பிரான்ஸில் நடக்கும் கொசோவோ சமாதானப் பேச்சுக்கள் எல்லாவற்றையும் பின்தள்ளும் அளவுக்கு ஒகலன் கைது விவகாரம் சர்வதேச முக்கியத்துவம் பெற்று விட்டது.

ஒகலன் தற்போது துருக்கிக்குக் கொண்டு வரப்பட்டு மிகவும் பாதுகாப்பான தீவு ஒன்றில் சிறை வைக்கப்பட்டுள்ளார். துருக்கியின் இரண்டாவது பெரிய நகரான இஸ்தான்புல்லில் இருந்து 60 கிலோ மீற்றர் தூரத்தில் இந்த தீவு உள்ளது. இந்தத் தீவில் வைத்து ஒகலன் தற்போது துருக்கிப் பொலீஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார். ஒகலனுக்கு எதிராக நீதிமன்ற விசாரணை நடத்தப்படும் என்று துருக்கி அரசாங்கம் அறிவித்துள்ளது. ஏற்கெனவே துருக்கியில் ஒகலனுக்கு எதிராக அவர் இல்லாத நிலையிலேயே மூன்று தனித்தனி வழக்குகள் தாக்கலாகி உள்ளன. இந்த வழக்குகளின் அடிப்படையில் ஒகலன் மீது நீதிமன்றங்களினால் பிடிவிறாந்தும் பிறப்பிக்கப்பட்டது. ஒகலன் கைது விவகாரத்தை துருக்கி அரசு மிகவும் அவதானமாகவே கையாண்டது.



துருக்கியின் தென் கிழக்குப் பகுதியில் குர்டிஷ் பெண்ணொருவர் ஒகலனின் உருவப்படத்துடன் ஆர்ப்பாட்டம் செய்கிறார்.

### ஹோலந்து நாட்டு வழக்கறிஞருக்குத்தடை

ஒகலன் மீதான நீதிமன்ற விசாரணை பாரபட்சமின்றி நடத்தப்படவேண்டும் என்று உலக நாடுகள் கோரி வருகின்றன.

தேசத்துரோகம், பயங்கர வாதம், பிரிவினைவாதம் ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்கள் ஒகலன் மீது சுமத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. துருக்கி நாட்டுச் சட்டங்களின் கீழ் இந்தக் குற்றச் செயல்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படும்.

ஒகலனுக்காக வாதாடுவதற்காக ஹோலந்திலிருந்து வழக்கறிஞர்கள் குழு ஒன்று துருக்கி வருவதற்கு முயன்றது. எனினும் துருக்கி அரசு இதற்கு தடைவிதித்து விட்டது. துருக்கியின் நீதி விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிடுவதற்கு அனுமதிக்கப போவதில்லை என்று துருக்கிப்பிரதமர் எசெவிட் அறிவித்துள்ளார். சித்திரவதைகள் தொடர்பான ஐ.நா. விசேட விசாரணைக் குழுவும் துருக்கி வருவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது. அதற்கும் இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. துருக்கியில் கைதிகளிடமிருந்து வாக்குமூலங்களைப்பெறும் கடுமையான நடைமுறை, பரந்த அளவில் வரையறுக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் நடத்தப்படும் நீதிமன்ற விசாரணைகள் எவ்வளவுதூரம் நியாயமானவையாக இருக்கும் என்பதில் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் சந்தேகம் கொண்டுள்ளன.

### சொந்த நாடு இல்லாத பெரிய இனம்

உலகில் சொந்த நாடு ஒன்று இல்லாத பெரிய இனமாக குர்டிஷ் மக்கள் கருதப்பட்டு வருகின்றனர். துருக்கியின் தென்கிழக்குப் பகுதியிலும் ஈராக்கின் வடபகுதியிலும் ஈரானின் வடமேற்குப்பகுதியிலும் சிரியாவில் சிறிய பகுதியிலும் மொத்தம் ஒரு கோடியே 50 லட்சம் குர்டிஷ மக்கள் வாழ்கின்றனர். இவர்களை விட உலகெங்கும் சிதறி சுமார் 20 லட்சம் மக்கள் வாழ்கின்றனர்.

இவர்களில் ஜேர்மனியில் மட்டும் 5 லட்சம் பேர் உள்ளனர். துருக்கியிலும் ஈராக்கிலும் ஈரானிலும் குர்டிஷ் மக்கள் நடத்திவரும் தனி நாட்டுப் போராட்டங்கள் அந்த நாடுகளில் பெரும் நெருக்கடிகளை தோற்றுவித்து வருகின்றன.



கிறீஸ் நாடாளுமன்றத்துக்கு முன் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது குர்டிஷ் தீவிரவாதி ஒருவர் தீக்குளித்தபோது எடுக்கப்பட்ட படம்.

தற்பொழுது கைதாகி உள்ள ஒகலன் 1984 ஆம் ஆண்டு குர்டிஷ் தொழிலாளர் கட்சியை நிறுவினார். துருக்கியின் தென் கிழக்குப் பகுதிக்கு தனிநாடுகோரி கடந்த 14 வருட காலமாக இவர் நடத்திய ஆயுதப் போராட்டம் 29 ஆயிரம் பேரைப் பலிகொண்டது. குர்டிஷ் கெரில்லாக்கள் தாக்குதல் நடத்திவிட்டு வட ஈராக்கில் உள்ள குர்டிஷ் பகுதிகளுக்கு தப்பி வருவது --

குர்டிஷ் போராட்டத்திற்கு சிரியா, கிறீஸ் ஆதாரவு அளிப்பது --

துருக்கியின் அண்டை நாடுகளுக் கிடையிலான உறவுகளை பெரிதும் பாதித்து வந்தது.

### குர்டிஷ்தானை அமெரிக்கா ஏற்கவில்லை

1991 வளைகுடா யுத்தத்தின் பின்னர் ஈராக்கின் வடபகுதியில் குர்டிஷ் மக்களுக்கு தனிநாடு கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது கைகூடவில்லை. தனது எல்லையில் குர்டிஷ்தான் உருவாவதை துருக்கி விரும்பவில்லை. அமெரிக்காவும் ஆதரவளிக்கவில்லை. துருக்கியிலும் ஈராக்கிலும் ஈரானிலும் குர்டிஷ் மக்கள் வாழும் பிரதேசங்களை இணைத்து அகண்ட குர்டிஷ்தான் அமைப்பதற்கு இது வழிவகுத்துவிடும் என்று துருக்கியும் அதன் நட்பு நாடுகளான அமெரிக்காவும் மற்றும் மேற்கு நாடுகளும் அஞ்சுகின்றன.

இந்த மூன்று நாடுகளிலும் உள்ள குர்டிஷ் கொரில்லா இயக்கங்கள் இணைந்தே செயற்படுகின்றன.

துருக்கியே தனது நாட்டிலுள்ள குர்டிஷ் போராளிகளை ஒழித்துக் கட்டுவதில் தீவிரம் காட்டி வருகிறது. ஒகலன் கைது செய்யப்பட்ட கையோடு துருக்கிப்படைகள் குர்டிஷ் போராளிகளின் மனோதிடனை குலைக்கும் நோக்குடன் வடஈராக்குக்குள் ஊடுருவின.

வளைகுடா யுத்தத்தின் பின் வட ஈராக்கிலுள்ள குர்டிஷ் பகுதிகளுக்கு தனது படைகளை அனுப்புவதை 'துருக்கி வழமையாக்கிக் கொண்டுள்ளது. வடஈராக்கிலுள்ள குர்டிஷ் மக்களை ஈராக்கிய படைகளிடம் இருந்து பாதுகாப்பதற்காக வட ஈராக் மீது ஈராக் விமானங்கள் பறப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஆனால் துருக்கிப்படைகள் வந்து போவதற்கு அனுமதிக்கப்படுகிறது.

### ஒகலனுக்கு சிரியா ஆதரவு

ஒகலனுக்கு சிரியாவே நீண்ட காலமாக அடைக்கலம் அளித்து வந்தது. லெபனானில் சிரியாவின் கட்டுப்பாட்டில் உள்ள பேகார் பள்ளத்தாக்கில் குர்டிஷ் கெரில்லாக்களுக்கு சிரியா பயிற்சியளித்து வந்தது. சிரியாவும் துருக்கியும் யுத்தம் ஒன்றுக்கு தள்ளப்படும் அளவுக்கு இந்த விவகாரம் இருநாடுகளுக்கும் இடையில் ஒரு கட்டத்தில் நெருக்கடியை ஏற்படுத்தியது.

ஒகலன் பின்னர் சிரியாவில் இருந்து வெளியேறினார். துருக்கியின் நிர்ப்பந்தமே இதற்கு காரணமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

### பின்னணியில் சி.ஐ.ஏ.,மொஸாட்

நைரோபியில் ஒகலன் கைதான சம்பவத்தின் பின்னணியில் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.யும் இஸ்ரேல் உளவு நிறுவனமான மொஸாட்டும் இருந்ததாக கூறப்படுகிறது. கிழக்கு ஆபிரிக்க விவகாரங்களை இந்த இரு உளவு அமைப்புக்களும் நைரோபியில் இருந்தே கையாள்கின்றன. துருக்கி நேட்டோவில் அங்கம் வகிப்பதால் துருக்கியின் அரசியல் ஸ்திரத்தில் அமெரிக்கா அதிக கவனம் செலுத்தி வருகிறது. துருக்கியில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளை ஒழித்துக்கட்டும் நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்ட பின்னர் இஸ்ரேலும் துருக்கியுடன் மிக நெருங்கிய உறவை வைத்துக் கொண்டுள்ளது. ஒகலன் சிரியாவிலிருந்து கிறீஸ் சென்று அங்கிருந்தே நைரோபிக்கு புறப்பட்டார்.

1974 ஆம் ஆண்டு சைப்பிரஸின் ஒரு பகுதியை துருக்கியப்படைகள் ஆக்கிரமித்த பின்னர் துருக்கியும் கிறீஸும் நிரந்தர பகை நாடுகளாக மாறிவிட்டன.

### நைரோபியில்

நைரோபியில் உள்ள கிறீஸ் தூதரகத்தில் ஒகலன் 12 தினங்கள் தங்கியிருந்தார். அவரைக் கைது செய்யும் நடவடிக்கை மிகவும் கச்சிதமாகவே நிறைவேற்றப்பட்டது.

ஐரோப்பிய நாடு ஒன்றிற்குச் செல்வதற்கு கிறீஸ் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்குவதாக அவருக்கு உறுதியளிக்கப்பட்டு அவர் நைரோபி விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு வைத்து துருக்கிய அதிரடிப் படையினர் அவரைக கைது செய்தனர். ஒகலன் கைதான பின்னணியில் பெரும் சர்வதேச சதி இருப்பதாக கருதப்படுகிறது.

ஒகலன் கைதாவதற்கு நான்கு நாள்களுக்கு முன்னர் நைரோபியில் உள்ள கிறீஸ் தூதுவர் கென்யா வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார். கென்யா அதிகாரிகள் அவரிடம் சில புகைப்படங்களை கையளித்தனர். ஒகலனின் படத்தை அவர் அடையாளம் காட்டியதையடுத்தே அவரைக் கைது செய்யும் திட்டம் வகுக்கப்பட்டது. ஒகலன் நைரோபியிலுள்ள கிறீஸ் தூதரகத்தில் தங்கி இருந்தது சி.ஐ,ஏயினாலும் மொஸாட்டினாலும் துருக்கிக்கும் கென்யா அரசுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. நைரோபி விமான நிலையத்திலிருந்து விமானத்தில் கைகள் கட்டப்பட்ட நிலையிலும் உடல் விமான ஆசனத்துடன் பிணைக்கப்பட்ட நிலையிலும் ஒகலன் துருக்கிக்கு கொண்டுவரப்பட்டார்.

### உலகநாடுகளில் ஆர்ப்பாட்டம

ஒகலன் கைதான சம்பவத்தை அடுத்து தற்போது உலகநாடுகள் முழுவதும் பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. வாங்கூவரிலிருந்து ஐரோப்பா, சிட்னி வரை 20க்கு மேற்பட்ட நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன. பேர்லினில் உள்ள இஸ்ரேல் தூதரகத்துக்கு வெளியே இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது இஸ்ரேல் பொலீஸார் நடத்திய துப்பாக்கி சூட்டில் மூன்று குர்டிஷ் ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டனர்.

தீக்குளிப்புச் சம்பவங்களும் பல இடம்பெற்றுள்ளன. லண்டனில் 14 வயது குர்டிஷ் பெண் தீக்குளித்தார். லண்டனில் கிரேக்க தூதரகம் குர்டிஷ் ஆதரவாளர்களால் முற்றுகையிடப்பட்டது.


### கிறீஸில் நெருக்கடி

ஒகலன் விவாகரத்தில் கிறீஸ் கையாண்ட விதம் அங்கும் பெரும் அரசியல் நெருக்கடியை தோற்றுவித்துள்ளது. கிறீஸில் உளவு நடவடிக்கைகளுக்கு பொறுப்பான உள்விவகார அமைச்சர், வெளிவிவகார அமைச்சர் உட்பட மூன்று அமைச்சர்கள் பதவி விலகி உள்ளனர். கிறீஸில் கடுமையான பொருளாதார சீர்திருத்தங்களை கொண்டுவந்ததன் மூலம் செல்வாக்கிழந்துள்ள பிரதமர் கொஸ்ராஸ் சிமிட்டீஸின் அரசு ஆட்டம் கண்டுள்ளது. கிறீஸின் பரம எதிரியான துருக்கியிடம் ஒகலனை சிக்கவைத்தது, கிறீஸில் கொஸ்ராஸ் சிமிட்டீஸின் சோஷலிச கட்சிக்கு எதிரான உணர்வலைகளை ஏற்படுத்தி வருகிறது.

ஐரோப்பிய யூனியனில் அங்கத்துவ நாடாக உள்ள கிறீஸ் யூறோ நாணயத்தில் இணைவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. யூறோவில் இணைவதற்கான அடிப்படைத் தகைமைகளை கொண்டிராததாலேயே கிறீஸ் இதுவரை சேர்த்துக் கொள்ளப்படவில்லை. பொருளாதார சீர் திருத்தங்களுடன் போராடும் கிறீஸுக்கு ஒகலன் விவகாரம் மற்றொரு தலையிடியாகும். *

## உலக உலா

என். பி. சீலன்





துருக்கியிலும் ஈராக்கிலும், ஈரானிலும் சிரியாவின் ஒரு சிறிய பகுதியிலும் குர்டிஷ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்கள் படத்தின் மத்தியில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 91



சொற்சிலம்பம் இல. 91
சஞ்சீவி,
861, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................

விலாசம்: ..............................................

..............................................

.............................. இங்கே வெட்டுக ..............................

முடிவு திகதி: 05 — 03 — 1999

**இடமிருந்து வலம்**

1. பெரியவர்கள் கூறும் வாழ்த்து. 6. கோபம் வருவது இப்படி என்பர். 7. ஒரு கிரகம். 8. பள்ளம். 9. பாதுகாப்புத் தருவது. 11. அடுப்பில் எரியும். 12. அகலம். 13. ஆடை. 14. சுருளி. 16. பழைய வேட்டை ஆயுதம். 18. தந்திரம் மிக்க பிராணி. 20. இரட்டை. 22. சிறிய மரத்தூண். 24. சீதைக்கு இப்படியும் பெயர். 25. சந்திரன்.

**மேலிருந்து கீழ்**

1. நாற்கவியில் ஒன்று. 2. பெண் வீட்டார் வழங்குவது. 3. மணம். 4. பல அல்ல. 5. துப்பாக்கியின் பாகம். 8. ஞாபகத்தில் வைக்காதே. 10. கசை. 11. பதில். 13. இருக்கின்ற. 15. கிளி. 16. போர்த்து விரிப்பது. 17. சிலை. 19. உகிர். 21. தலையெழுத்து. 23. காட்டு மிருகம்.

### சொற்சிலம்பம் — 89 விடைகள்

**இடமிருந்து வலம்**

1. தேசாதிபதி. 6. அணி. 7. வாட்டசாட்டம். 8. ரசி. 9. சுடு. 10. பிகு. 13. தக்காளி. 14. சம்பல். 16. காப்பீடு. 17. அதிதி. 19. பிரதாபம். 21. சா. 22. குமாரன்.

**மேலிருந்து கீழ்**

1. தேவாரம். 2. சாட்சி. 3. திட. 4. பசாசு. 5. திட்டு. 6. அம்பிகாபதி. 11. குளி. 12. கம்பீரம். 14. சப்பி. 15. படுதா. 17. அம்மா. 18. திறன். 20. படு.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ **முதற் பரிசு:** க. சிவநாதன்,
வேலணை கிழக்கு,
முதலாம் வட்டாரம்.

★ **இரண்டாம் பரிசு:** கு. காந்தன்,
இல: டி 20,
அரசாங்க தொடர் மாடி,
குருநகர், யாழ்ப்பாணம்.

★ **மூன்றாம் பரிசு:** சோ. பிரதீபன்,
பண்ணாகம்,
சுழிபுரம்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 90 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

# யாழ். நிலைவரத்தை...

(11 ஆம் பக்கத் தொடர்)

கட்டைப்பிராயைச் சேர்ந்த செல்லத்துரை புவிச்சந்திரன் என்பவரும் கொலை செய்யப்பட்டு யாழ். நகரில் — கன்னாதிட்டி வீதியில் — சடலம் வீசப்பட்டிருந்தது. இச்சம்பவம் நடைபெற்றது இம்மாதம் 2 ஆம் திகதி!

இவ்வாறு இளைஞர்களைக் கொன்று சடலங்களையும், தலைகளையும் வீதிகளில்வீசும் சம்பவங்கள் மலிந்தால், குடாநாட்டில் மக்கள் பாதுகாப்பாக வாழ முடியுமா?

பயங்கரமான இச்சூழ்நிலையில், எந்தத் திக்கிலும் தமக்கு பாதுகாப்பு இல்லையே என்று அஞ்சுகிறார்கள். ஜனநாயகம் மீண்டுள்ளதாகக் கூறிக் கொண்டு மனித உரிமைகள் இவ்வாறு வேரோடு வீழ்த்தப் பட்டால், யாரைப் பற்றி யாரிடம் முறையிடுவதுஎன்று தெரியாமல் திணறுகிறார்கள் மக்கள்.

குடாநாட்டில் பாதுகாப்பான, நிம்மதியான வாழ்க்கை நிலை திரும்பாதா என்ற ஏக்கப் பெருமூச்சு விட்டவாறே யாழ். பிரசைகள் நாள்களைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் திருந்த மாட்டார்களா என்று சதா கேட்ட வண்ணம் இருக்கிறார்கள்.

★ ★ ★

இம்மாத முற்பகுதியில் சர்வமதக்குழு ஒன்று வன்னிக்குச் சென்றது. போர்க்களமாக இரத்தஆறு பாய்ந்து கொண்டிருக்கும் அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களின் கஷ்டங்கள், துன்பங்களையும் அவர்களின் தேவைகளையும் அறிந்து கொள்வதே பிரஸ்தாப சர்வமதக் குழுவின் விஜயத்துக்கான பிரதான காரணம் என்று கூறப்பட்டது.

எனினும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களது நிலைப்பாட்டை அறிவதும் இந்தக் குழுவின் நோக்கமாக இருந்தது.

சர்வமதக் குழுவில் அங்கம் வகித்துச் சென்றவர்களில் பேராசிரியர் திஸ்ஸ விதாரண போன்றவர்கள் உண்மையாகவே போரை நிறுத்தி இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றைக் காண வேண்டும் என்பதில் வெகு அக்கறை உள்ளவர்கள் என்று தெரியவருகிறது.

மேலும் பௌத்த பீடங்களைச் சேர்ந்த மூத்த மத குருமார்களும் வன்னி சென்ற குழுவில் அங்கத்துவம் வகித்ததால் அந்த விஜயம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது.

பௌத்த மகாசங்கத்தினர் போரைத் தொடர்வதற்கு ஆதரவானவர்கள், நியாயமான தீர்வுக்கு எதிரானவர்கள் என்பதுதவறான கருத்து என்று தூதுக்குழுவில் அங்கம் வகித்த பௌத்த குருமார் விடுதலைப்புலிகள் பிரதிநிதிகளிடம் தெளிவுபடுத்தினார்கள். இதன் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலுள்ள பாதகமான சூழ்நிலையில் பெரும் மாற்றம் உண்டாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

28 பேரைக் கொண்ட இந்தத் தூதுக்குழுவின் விஜயத்தினால் ஒரு சிறிய திருப்பம் ஏற்பட வாய்ப்பு உண்டு எனக் கருதப்பட்டாலும் அரசாங்கம் இது விடயத்தை எவ்வாறு கையாள்கிறது — முன்னெடுக்கிறது — என்பதிலேயே முன்னேற்றம் தங்கியுள்ளது!

ஏப்ரல் முதலாம் திகதி நடைபெறவுள்ள (ஐந்து) மாகாண சபைகளுக்கான தேர்தல் முடியும் வரைக்கும் அரசாங்கம் அதிலேயே முழுக் கவனத்தைச் செலுத்தும் என்பதால், சர்வமதக் குழுவினரின் விஜயத்தின் பெறுபேறுகள் இன்னும் ஒரு மாதத்துக்கு பெட்டிக்குள்ளேயே மூடி வைக்கப்பட்டிருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

சர்வமத குழுவினரின் வன்னி விஜயம் அரசாங்கத்தின் சில திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவே ஒழுங்கு செய்யப்பட்ட ஒன்று எனவும் ஒரு சந்தேகம் நிலவுகிறது.

வட-மேல் மாகாண சபைத் தேர்தலில் ஆளுந் தரப்பினர் தேர்தல் வன்முறைகளில், மோசடிகளில் ஈடுபட்டார்கள் என்பது அரசாங்கத்தாலும் இப்போது ஓரளவு ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. ஆகையால் எதிர்வரும் ஏப்ரலில் நடைபெறவுள்ள தேர்தலில் ஆளுங்கட்சிக்கு ஆதரவு மிகப் பெரிய அளவில் சரிந்து போகலாம் என்று அச்சம் அதற்கு ஏற்பட்டுள்ளது.

நீதியான, நேர்மையான தேர்தலை ஏப்ரலில் நடத்துவது; அதன்பொருட்டு எதிர்க் கட்சியையும் அழைத்து ஆராய்வது என்று ஒரு கோணத்தில் புண்ணுக்குக் கட்டுப்போட முயன்றாலும்—

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் அரசுக்கு அக்கறை இருப்பதாகக் காட்டி, இந்தக் கோணத்திலும் வாக்கு வங்கியை நிமிர்த்தும் முயற்சியில் இறங்குவது அரசின் திட்டங்களில் ஒன்று.

இன்னொரு திட்டமும் — நோக்கமும் — அரசுக்கு இருக்கிறது. போரை நிறுத்தி இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்று வெளி நாடுகள் பலவும் இப்போது அரசுக்கு வெவ்வேறு வழிகளில் அழுத்தம் போடத் தொடங்கியுள்ளன. ஆகையால் பேச்சுவார்த்தையில் தான் ஈடுபாடு காட்டுகிறது என்று வெளிநாடுகளை நம்ப வைக்க வேண்டும் என்பதே அந்த நோக்கம்.

அதனை அடைவதற்காகவே, மகாநாயக்கர்களுக்கு அடுத்த தரத்தில் உள்ள பௌத்த குருமார் அடங்கிய தூதுக்குழுவை வன்னி செல்ல அரசு அனுமதித்தது; விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை அக்குழு சந்திக்கவும் இணக்கம் தெரிவித்தது என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

தென்னாபிரிக்க எம். பிக்கள் தூதுக்குழு, தென்னாபிரிக்க பத்திரிகையாளர் குழு, பிரிட்டிஷ் பிரதி அமைச்சர் டெரெக் பாட்ஷெட் ஆகியோரி வன்னிக்குச் சென்று நிலைமையை நேரில் கண்டறிவதற்கு அனுமதி கேட்ட போது மறுத்த அரசாங்கம் பௌத்த பிக்குகள் கொண்ட தூதுக்குழுவுக்கு அனுமதி அளித்ததன் இரகசியம் அதுவே எனவும் கொள்ளப்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பிந்திய செய்தியாளர் மாநாடு ஒன்றில் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியை அரசு கைவிடவில்லை என்றும் அதில் தாமதமே ஏற்பட்டுள்ளது என்றும் அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் கூறியிருந்தார். அதுவும் வெளிநாடுகளின் வலியுறுத்தல்களை சமாளிக்கும் வாய்ப்பாடு என்றே கொள்ள வேண்டும்.

இவை மட்டுமன்றி விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்ற நிலையைப் போக்கடிப்பதற்காகவும் சர்வமதக் குழு வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச அரசு ஊக்கமளித்ததாகவும் கருதப்படுகின்றது.

தாம் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து அறிவிப்பு வந்தும் இன்றோடு, சரியாக மூன்று மாதங்கள் ஆகின்றன. ஆனால் அரசு அதனைப் பெரிதாகப் பொருட்படுத்தி ஆரம்ப நடவடிக்கையில் தானும் இறங்கியதாக இல்லை.

பேச்சுவார்த்தை நடத்துவதனைத் தான் மறந்து விடவில்லை என்று அவ்வப்போது கூறிக் கொண்டாலும், காட்டிக் கொண்டாலும், செயலில் எதுவுமே நடக்கவில்லை.

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொள்ள அரசு முயற்சி செய்து வருவதாக இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதுவர் மங்கள முனசிங்கா சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கூறியிருந்தார். எனினும் தமக்கு அந்தத் தகவல் உத்தியோகபூர்வமாகக் கிடைக்கவில்லை எனத் தணித்து விட்டார்! சர்வமதக்குழு வன்னி சென்று விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் பேசியதையே ஆரம்ப முயற்சி என்று மங்கள முனசிங்கா கூறியிருக்கலாம்.

இதுவும் அரசுக்கு அரசியல் தீர்வில் நாட்டம் உண்டு என்பதனைக் காட்டும் திட்டத்தின் ஓர் அங்கமே.


விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு முன்னர் எதிர்க் கட்சியின் ஒத்துழைப்பைப் பெற முயற்சிக்கப் போவதாகவும், தீர்வுப் பொதியை யார் எதிர்த்தாலும் வேறு வழிகளில் நிறைவேற்றப் போவதாகவும் கூறி அரசு நேரத்துக்கு நேரம் தடுமாறுகிறது.

ஆகையால் இந்த அரசு தனது பதவிக் காலத்தில் தீர்வு ஒன்றைக் கொண்டு வரும் என்று நம்புவதற்கு எவ்வித பாத்தியதையும் இல்லை. எப்படியோ காலத்தை இழுத்தடித்துவிட்டு, பொதியைப் பொசுக்கிவிட்டு, மெதுவாக நழுவுவதே உள்ளார்ந்த எண்ணமோ! ★

# விடைகள்

VIII மற்றும் IX ஆம் பக்கங்களில் 'சிறுவர் சுடர்' பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

**கண்டுபிடியுங்கள்!**



**கட்டங்களை நிரப்புங்கள்**

1. சகதி 2. கவரி. 3. திரிபு. 4. உமது. 5. மற்ற. 6. துறவி. 7. புதிது. 8. தினம். 9. தும்பு. 10. வலது. 11. லத்தி. 12. துதியை. 13. புதுவை. 14. துயர. 15. வைரம்.

**சொற்றேடல்**

1. திரிபுரம். 2. சதிகாரன். 3. பாத்திரம். 4. உயர்திணை. 5. புரட்டாதி. 6. சாவித்திரி. 7. சத்திரம். 8. வதிவிடம். 9. தியாகிகள். 10. நீதிமன்று. 11. கோத்திரம். 12. கார்த்திகை. 13. நிவர்த்தி. 14. சுபத்திரை. 15. புத்திரன். 16. பதிவாளர். 17. திரயோதசி. 18. அதிகாரம். 19. வைத்தியர். 20. அகத்திணை. 21. முகஸ்துதி.

**சொற்களைத் தெரியுமா?**

1. ஆட்டம். 2. இட்டம். 3. ஊட்டம். 4. கட்டம். 5. கூட்டம். 6. கோட்டம். 7. சட்டம். 8. தட்டம். 9. திட்டம். 10. தேட்டம். 11. தோட்டம். 12. நீட்டம். 13. பட்டம். 14. பாட்டம். 15. நட்டம். 16. [illegible] 17. [illegible] 18. வாட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 யாழ்ப்பாணம் நல்லூர் [illegible] நூலகம். 

# சனத்தொகைப் பெருக்கத்துக்கு காரணம் ஆண்களா? பெண்களா?

**தொல்புரம். சி. சிவநாதன்.**
● சனத்தொகை அதிகரிப்பு வீதம் குறைவடைகின்றது எனக் கலைஞர் கருணாநிதி கவலைப் படுகின்றாரே...?
* அவரது 'சாதனையை' இந்தத் தலைமுறையால் செய்யமுடியாமல் இருக்கின்றதே என அவர் ஆதங்கப் படுவது நியாயம்தான். அதற்காக இந்த 72 வயதில் அவரால் என்ன தான் செய்துவிட முடியும்?

* * *

**மல்லாகம். தவம்.**
● வித்துவான் ஸார்! பெரிய பதவிகளில் இருப்பவர்களை விட அவர்களுக்குக் கீழ் உள்ளவர்கள் அதிக அதிகாரம் பண்ணுகின்றார்களே...?
* வாசலில் கட்டி நிற்பவர், வருபவரில் பாய்வது இயல்புதானே!

* * *

**நீர்வேலி வடக்கு. து. தனஞ்சயன்.**
● வித்துவான் ஐயா! வித்துவாட்டி உம்மிடம் அடி வேண்டிக் கட்டிக் கொண்டு தாய்வீடு போய் விட்டாளாம். உண்மையா?



* நல்ல பகற்கனவு. கற்பனை பண்ண அலாதியாகத்தான் இருக்கின்றது.

* * *


**குப்பிளான். க. கிருபன்.**
● சனத்தொகைப் பெருக்கத்துக்கு மூலகாரணம் ஆண்களா? பெண்களா?
* வேறு யார்? ஒரு பெண் ஒரு வருடத்தில் ஒன்று — மிஞ்சிப் போனால் இரண்டு — குழந்தைகளுக்கு மட்டும் தானே அம்மாவாக முடியும்?

* * *

**சண்டிலிப்பாய். என். ரி. மிலன்.**
● வித்துவானே! தங்களிடம் ஓர் அணுகுண்டு இருந்தால் என்ன செயவீர்கள்?
* என்னதான் இருந்தாலும் வித்துவாட்டியின் சைஸை நீர் இப்படிக் கிண்டல் செய்வது எனக்குப் பிடிக்கவில்லை.

* * *

**தென் கோப்பாய். நா. மகேந்திரலிங்கம்.**
● வைத்தியர் — பேருந்து சாரதி ஒப்பிடுக.



* இருவருமே முத்திக்கு வழிகாட்டும் வித்தகர்கள்.

* * *

**சண்டிலிப்பாய். ந. தர்மிலன்.**
● ஹலோ வித்துவான்! சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பார்களே. தங்கள் குடுமி.....?
* வித்துவாட்டியின் தாளத்துக்கு ஆடுகின்றதே!

**ஏழாலை. ச. அட்சயா.**
● தனது மாமியாரைக் கடித்து விட்டது என்று சினேகிதி ஒருத்தி தனது நாயை என்னிடம் கொடுத்தார். அது எனது மாமியாரையும் கடித்துவிட்டதே !




* தயவு செய்து அந்த நாயை எனக்கு ஒரு கிழமைக்கு இரவல் கொடுங்களேன்.

* * *

**சரசாலை. அ. சங்கர்.**
● வித்துவான் ஸார்! நீங்கள் ஓ. எல். வகுப்பாவது தாண்டினீர்களா?
* 'ஓட்டோமட்டிக் புறமோஷன்' இல்லாவிட்டால் நீ இன்னும் பாடசாலையில் படித்துக்' கொண்டிருப்பாய் என்று இருபது வருடங்களுக்கு முன்னர் ஓய்வு பெற்ற எனது ஆசிரியர் இப்போதும் கூறிக்கொண்டிருக்கின்றார். ஓ. எல். தாண்டுவதற்கு மட்டும் இந்த 'ஓட்டோ மட்டிக்' விளையாட்டு கைகொடுக்க வில்லையே! என்ன செய்ய?

* * *

**அச்சுவேலி. மங்களேஸ்வரி.**
● வித்துவான் ஸார்! நீங்கள் எந்தப் பாடசாலையில் படித்தீர்கள்? இவ்வளவு புத்திசாலியாகவும் குறும்பாகவும் பதிலளிக்கின்றீர்களே ...?
* அட...சீ...நீர்...ஒருபுறம். முதல் கேள்வியால் வயிறு எரிஞ்சுபோய் இருக்கிறன்...நான்!

## வித்துவான் பதில்கள்

* * *

**யாழ்ப்பாணம். ம. துவாராசா**
● வித்துவானே! சிறந்த நடிகர் யார்?
* மனைவிக்கு முன் நடிக்கும் கணவன்மாரை விட சிறந்த நடிகர்கள் இருக்கின்றார்களா?

* * *

**வண்ணை. க. பிரசாந்தன்.**
● ஐயா! உங்கள் வித்துவத்தைப் பாராட்டுகிறேன். உங்கள் வித்துவத்துக்கு விபரீதம் ஏற்படாதா?
* அட நீங்கள் ஒரு பக்கம். 'அறப்படிச்ச பல்லி கூழ்ப் பானைக்குள் வீழ்ந்த மாதிரி' எல்லாம் தெரிஞ்ச வித்துவானே வித்துவாட்டியிடம் சிக்கி முழிக்கின்றார்! என் திருமணமே எனது வித்துவத்துக்கு ஏற்பட்ட விபரீதம்தானே!

* * *

● வித்துவான் ஸார்; விளையாட்டல்ல. உண்மையாகக் கேட்கிறேன் காதலிப்பதற்கு ஏற்ற வயது எது?
* விளையாட்டல்ல; உண்மையாகத் தான் சொல்லுகிறேன். எந்த வயதிலும் சிறைவாசத்தை ஏற்றுக் கொள்ளலாம்.

* * *

**மிருசுவில் கு. கார்த்திகாயினி.**
● வித்துவானே! ஆண்களும் குழந்தை பெறலாம் என்று விஞ்ஞானி வின்சன் பிரபு தெரிவித்துள்ளாராமே! அம்முறை நடைமுறைக்கு வந்தால் எப்படி இருக்கும் ஆண்க[illegible] (எல்லாச் சுமைகளையும் உங்கள் தலையில் கட்டுவதாக நீங்கள் கூறும் வித்துவாட்டி இந்தச் சுமையையும் உங்கள் வயிற்றில் கட்டி விடுவாரோ...!)
* உம்மை விட்டால் சும்மா இருக்கும் வித்துவாட்டிக்கும் 'ஐடியா' கொடுத்து விடுவீர் போலை...!

* * *

**திருநெல்வேலி. ஆர். சுரேன்.**
● அழகு எங்கே இருக்கின்றது?
* எங்கும் இருக்கின்றது. பார்ப்பவரின் கண்களில்தான் அதிகம் இருக்கின்றது.

* * *

**தாவடி. எஸ். அனித்தா.**
● காதலில் தோல்வியடைந்தவர்கள் தாடி வளர்ப்பது ஏன்?
* 'லேடி' செய்த துரோகத்துக்கு சாட்சி சொல்லத் தாடி!

* * *

**சுழிபுரம். கர்ஜனா.**
● தற்போது கல்வி கற்கும்பள்ளி மாணவர்கள் குறித்து உங்கள் கருத்து...?
* Boys are Boys.

* * *

**மல்லாகம். கம்ஷிகா.**
● வித்துவான் ஸார்! பணத்தால் எதையும் சாதிக்க முடியும் என்கிறார்களே...!
* பணம் பத்தும் செய்யும். பதினொன்றாவதைச் செய்ய மாட்டாதே...!

* * *


**கோப்பாய். என். எம். லிங்கம்.**
● நவீன அரிச்சந்திரர்கள் உள்ளனரோ...?
* தமிழ்க் குழுக்களின் அறிக்கைகளை நீர் வாசிப்பதில்லைப் போலும்!

* * *

**கொல்லங்கலட்டி. லக்ஷ்மி**
● உலகில் அரிது எது? கொடிது எது? இனிது எது? பெரிது எது? சிறுமை எது?
* அமைதியான பெண்மை; அடங்காத மனைவி; குழந்தையின் சிரிப்பு; போதும் என்ற மனம்; நன்றி மறக்கும் பண்பு.

* * *

**தொல்புரம். வே. ஆனந்தரூபன்.**
● சாமி தங்களில் வந்திருப்பதாக மக்களை ஏமாற்றுபவர்கள் குறித்து .....!




* ஆ 'சாமி'கள். விடுங்கள்!

* * *

**அரியாலை. கமலினி.**
● செத்தல் மிளகாயின் விலை வழமைக்குத் திரும்பினால் நல்லூர் முருகனுக்கு நீங்கள் ஆயிரத்து எட்டுத் தேங்காய் அடிப்பீர்கள் என்று நான் வேண்டுதல் வைத்துள்ளேன். கந்தன் ஏற்பானா?
* [illegible] ஏற்காதது இருக்கட்டும். இங்கு ஒரு நேரச் சம்பலுக்கு தேங்காய்ப் பூவையும் செத்தல் மிளகாயையும் பார்த்துப் பார்த்து இருந்து கண் பூத்துப் போய்விட்டது. செந்தலின்றி நாக்குச் செத்துவிட்டது. அந்தக் கடுப்பில் நான் இருக்க, நீர் வேண்டுதல் வேறு வைக்கிறீரா?

* * *

**உடுப்பிட்டி. ச. துருபதன்.**
● அடக்கத்திற்கு ஓர் உதாரணம் கூறுங்களேன்!



* வித்துவாட்டி முன் வித்துவான் நாவடக்கி, வாய் பொத்தி, கை மடித்து நிற்பதை விட ஓர் அடக்கமா?

* * *

**கொட்டடி. எஸ் சுரேஸ்.**
● உங்கள் பதில் இரட்டை அர்த்தத்துடன் வருகின்றதே? ஏன்? பத்திரிகை விற்பனையைக் கூட்டும் முயற்சியோ...?




* இது எனது உத்தி அல்ல. அவ்வைக்கு நாவற்பழம் அளித்தபோது 'சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?' என்று முருகன் கேட்ட காலத்திலேயே இரட்டை அர்த்தம் தொனிக்கும் கேள்வி —பதில் பிறந்து விட்டதே!

* * *

**யாழ்ப்பாணம். சரவணன்.**
● ஹலோ வித்துவான்! அண்மையில் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு கல்வியங்காட்டில் நடைபெற்ற பட்டிமன்ற நிகழ்வில் தங்கள் பகுதியைப் பற்றி கண்டபடி விமர்சித்தார்களே...?
* தாம் 'கண்டபடி' தானே அவர்கள் விமர்சிக்க முடியும். காணாதபடி விமர்சிக்க முடியாதே!

* * *

**வல்வை. ரி. தில்லை.**
● அவசரகாலச் சட்டத்துக்கு ஆதரவாக கையை உயர்த்திக் கொண்டு, அந்தச் சட்டத்தின் கீழ் நீதியற்றமுறையில் நீண்ட காலம் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ஈழத் தமிழர்களுக்காகவும் நீலிக் கண்ணீர் வடிக்கும் தமிழ்க் கட்சி குறித்து உங்கள் கருத்து என்னவோ?
* தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளும் வேலை இதுதான்!

* * *

**கொக்குவில். கி. குருபரன்**
● வித்துவானே! தங்கள் குஞ்சியழகையும் (குடுமியழகுதான்!!), கோட்டானின் (ஆந்தையின்)விழியழகையும், கிளி மூக்கையும் கண்டு மயங்கி (?!) தங்களை மணந்த பேதைப் பெண்ணின் பெயர் என்னவோ?
* என் அழகுக்கு இவ்வளவு பெருமையா? அது சரிதான். ஆனால் வித்துவாட்டியைப் பேதை என நீங்கள் கூறுவதைப் பார்த்தால் நீங்கள் போதையில் இருக்கின்றீர்கள் போலும்.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org